

## சம்பிக்கவின் மதியுரை: 05 தடியைக் கொடுத்து அடிவாங்கிய தலைவர்கள்



## நிப்பொன் செரமிகா கடையெரிப்பு: கவனத்தை திசைதிருப்பும் முயற்சியா? 06






# மீள்பார்வை


මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 391 • 06 ஏப்ரல் 2018 வெள்ளிக்கிழமை • ரஜப் 1439 • விலை 40.00







# தேசியப் பட்டியல் ஊடாக கோத்தாபய பாராளுமன்றில்?

பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைகளின் பின்னணியில் கோத்தாபாய ராஜபக்ஷவை பாராளுமன்றத்துக்குள் நுழைவிப்பதற்கான ஏற்பாடுகள் இருப்பதாக கொழும்பு டெலிகிராப் வெளியிட்ட செய்திகள் தொடர்பில் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் தோல்வியடையும் பட்சத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவை அந்த இடத்துக்கு நியமிப்பதற்கும், கோத்தபாய ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்றத்துக்கு நுழைவிப்பதற்கும், அதன் மூலம் இரண்டாம் தடவையாக ஜனாதிபதியாவதற்கும் பிரதமராக கோத்தாபாயவை நியமிப்பதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டிருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்பு டெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

(பக். 14)



## ஜீஎஸ்பீ மீண்டும் இம்மாதம் முதல்

இலங்கைக்கான ஜீஎஸ்பீ வரிச்சலுகை மீண்டும் இம்மாதம் 22 முதல் செயற்படுத்தப்படும் என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. இது இலங்கையின் பண்டங்களுக்காகவும் தொழில்வாய்ப்புக்களுக்காகவும் எமது சந்தையை மேலும் திறந்துவிடும் என அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அமெரிக்க காங்கிரஸ் சட்டத்தில் மீள அதிகாரம் அளிக்காமை காரணமாக ஜீஎஸ்பி வரிச்சலுகை 2017 டிசம்பர் 31 உடன் நிறுத்தப்பட்டிருந்தது. மீளவும் இவ்வருடம் மார்ச் 23 இல் இது பட்ஜட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், இதன் மூலம் இலங்கை உட்பட (பக். 14)

## முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத எழுச்சியின் தொடராகவே மே தினம் பிற்போடப்பட்டுள்ளது



மூன்று பௌத்த பீடங்களினதும் மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே மே தினத்தை தள்ளிப் போடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என இலங்கை ஆசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த முடிவுக்கு எதிரான மனுவொன்றை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கொழும்பிலுள்ள சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தில் (ILO) கையளித்தார். இதனைத் தொடர்ந்து (பக். 02)

## நீதிமன்ற கட்டமைப்பு சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரண்



விசேட உயர் நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான நீதிமன்ற அமைப்பு திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற, பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை அவசியம் என உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

குறித்த சட்டமூல திருத்தத்தின் மூன்று பிரிவுகள் அரசியலமைப்பிற்கு முரணானதாக அமைந்துள்ளமையால் 2/3 பெரும்பான்மை அவசியம் என உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளதாக, சபாநாயகர் அறிவித்துள்ளார்.

(பக். 02)

## ராமாஞ்ஞ பீடத்தின் உயர் பதவிகளில் கரு, லஸந்த





இலங்கை ராமாஞ்ஞ மகா பீடத்தின் பீடப் பாதுகாப்பு சபையின் தலைவராக சபாநாயகர் கரு ஜயசூரியவும், பொதுச் செயலாளராக நிதி, ஊடக பிரதி அமைச்சர் லஸந்த அலகியவன்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேசபந்து கரு ஜயசூரிய 2006 ஆண்டு முதல் இந்தப் பதவியை வகித்து வருகிறார் என்பதோடு, அமைச்சர் லஸந்த அலகியவன்ன 2006 ஆம் ஆண்டு முதல் குறித்த சபையின் தேசிய அமைப்பாளராகவும், பிரதித் தலைவராகவும் கடமை யாற்றி வந்துள்ளனர். (பக். 14)

## குவைத் பணியாளர்கள் மீது புதிய வரி



குவைத்தில் பணி புரியும் வெளிநாட்டுப் பணியாளர்களிடம் குவைத் அரசாங்கம் அறவிடத் தீர்மானித்துள்ள புதிய வரியினால் அந்நாட்டில் பணிபுரியும் பல்லாயிரக் கணக்கான இலங்கையர்கள் பாதிப்புக்குள்ளாகவுள்ளனர்.

புதிய வரி தொடர்பான யோசனை குவைத் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனையின்படி 90 தீனார் வரை வேதனம் பெறும் ஊழியர்கள் தமது சொந்த நாட்டுக்கு பணத்தை அனுப்பும் போது (பக். 14)


மாணவிகளுக்கான உயர்தர செயற்திட்டம்

2½ வருட கலை செயற்திட்டம்




★ G.C.E (O/L) ல் கணித மற்றும் ஆங்கில பாடங்களில் சித்தியெறத் தவறியவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பித்து பரீட்சைக்கு தயார்படுத்தப்படும்.
★ O/L ல் சித்தியெறத் தவறிய மாணவிகளையும் 2020 இலேயே A/L பரீட்சைக்கு தோற்ற தயார்படுத்தப்படும்.

**Emerrad Ladies College**
No.36/38. Srimalwatta Road, Madawala Bazaar, Kandy
Hotline : 0777 877 966 Tel : 0812050600


மாணவிகளுக்கு 2½ வருடத்திற்குள் பின்வரும் பயிற்சிநெறிகள் வழங்கப்படும்

★ க.பொ.த. உயர் தரம் கலை பிரிவு
★ அடிப்படை இஸ்லாமிய கற்கை
★ விஷேட தஜ்வீத் பயிற்சி மூலம் குர்ஆன் மத்ரஸா நடாத்துவதற்கான பயிற்சி
★ Diploma in Pre-School Teachers Training (AMI Method) முற்பள்ளி ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி நெறி
★ Pre Marriage Counseling
★ Diploma in English
★ சிங்கள மொழிப் பயிற்சி
★ Life Skills & Soft Skills Development
★ தகவல் தொழில்நுட்பம் – NVQ (Level - 03)
★ சுயதொழில் பயிற்சிகளுடன் மேலும் சில பயிற்சிகளும்



Hotline : 0777 877 966







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக விழித்துக் கொள்ளுங்கள்

- நப்ராஸ்

சகல இனமக்களும், அதாவது முஸ்லிம்கள் உட்பட இலங்கை அரசிற்கு செலுத்தும் வரியினடிப்படையில் தான் முப்படைக்கும் நிதியொதுக்கீடு செய்யப்படுகின்றது.

இலங்கையில் பள்ளிகளையும், கடைகளையும் நிர்மாணிக்கும் முஸ்லிம்கள் தங்களது வரிக்கு பகரமாக பாதுகாப்பு உத்தரவாதத்தையே அரசிடம் எதிர்பார்க்கின்றனர்.

காடையன் எரிக்க பொலிஸார் வேடிக்கை பார்த்தால் இலங்கையரசு முஸ்லிம்களுக்கு துரோகம் செய்கின்றது என்பதை நாங்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அரசாங்கம் துரோகம் செய்து கொண்டிருக்கையில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சகவாழ்வு என்ற பெயரில் ஐயரையும், தேரரரையும், மௌலவியையும் கொண்டு அரச அதிகாரிகள் கூட்டம் போடுவதால் பிரச்சனைக்கு தீர்வு வரப்போவதில்லை.

அனைவருமாக சேர்ந்து இலங்கையரசை தோலுரிக்கவேண்டிய தேவையுள்ளது. உள்நாட்டு அழுக்கு அரசியல் நோக்கங்களுக்காகவும், சர்வதேச முஸ்லிம் விரோத நிகழ்ச்சி நிரலுக்கு அமையவும் இனவாதத்தை கட்டவிழ்த்திருக்கும் இலங்கையரசின் நயவஞ்சக முகத்தை சிங்களவர்களுக்கு படம் பிடித்துக் காண்பிக்க வேண்டும்.



திட்டமிட்டு சீர்குலைக்கப்படும் சிங்கள முஸ்லிம் உறவை பரந்துபட்ட அறிவார்ந்த கருத்தாடல்களினூடாக மீளக்கட்டியெழுப்ப வேண்டும். அரசியல் நோக்கோடு இடம்பெறும் அட்டூழியங்களை மத, கலாச்சாரத்தோடு தொடர்புபடுத்தி மக்களை முட்டாளாக்கி சண்டையிடச் செய்யும் சண்டாள தலைவர்களின் முக மூடிகளை கிழித்தெறிய வேண்டும்.

ஒரு கடையை பாதுகாக்க முடியாத ஆனால் முப்பது வருட கால பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவந்த நயவஞ்சகப் போக்கையுடைய பாதுகாப்பு படையினரின் இரட்டை முகத்தை வெளிச்சம் போட்டு காண்பிக்க வேண்டும்.

இன்னு மின்னும் அரசுடன் ஒட்டிப்பிழைப்பு நடாத்தும், எங்களை பிரதிநிதித்துவம் செய்ய தகுதியற்ற விஷக்கிருமிகளான அரசியல் தலைவர்களையும், சத்தியத்தை உரைக்க தயங்கும் உலகாசை கொண்ட உலமாக்களையும் ஓரம் கட்டவேண்டும்.

இலங்கை முஸ்லிம்களே வேகமாக விழித்துக்கொள்ளுங்கள் !




# துரோகங்கள் புதியன அல்ல..!

- யஸீர் அன்சார்

சிங்களவர்கள் 1915 முஸ்லிம்களுக்கு எதிராக நடத்திய வன்முறையின் போது திரு. பொன்னம்பலம் ராமனாதன் போன்றதுக்கள் அடக்கப்பட இருந்த அருமையான சந்தர்ப்பத்தை இல்லாமலாக்கியது பொன்னம்பலம் ராமனாதனின் இந்த முதுகில் குத்திய சந்தர்ப்பவாத துவேசம்தான் !

அன்றைய முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் மட்டும் 4000 க்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் சூறையாடி தீக்கிரையாக்கப்பட்டது (கொலைகளும் கற்பழிப்புகளும் கூட இடம்பெற்றது.)

தேவையில்லாமல் அன்றைய தமிழ்த் தலைவர்கள் முஸ்லிம்களுக்கெதிராக மூக்கை நுழைத்தார்கள்! சந்தர்ப்பம் பார்த்து முஸ்லிம்களின் முதுகில், அமைச்சர் மனோ கணேசன் குத்தினார் இன்று!

சிங்கள மக்களின் ஓட்டுக்களில் தங்கியிருக்கும் அனுர குமார மனிதாபிமான முறையில் சம்பவம் நடந்தவுடனும் அதன் பிறகும் இரண்டு சந்தர்ப்பங்களில் கண்டிக்குப் போனார் . ஆனால், இவர் தானே அங்கு போய் இருக்க வேண்டும்! முஸ்லிம்களுக்கு வந்தால் அது தக்காளிச் சட்னி என்ற மாற்றான் தாய் மனப்பாங்கே அவரை அங்கு போகாமல் தடுத்தது! சகோதரர்களே, எங்களுக்கு தமிழ் சகோதரர்களுடன் எந்த மனக்கசப்பும் இல்லை. தமிழ்த் தலைவர்களே எங்களின் பிரச்சினைகளில் தேவையில்லாமல் தலையிட்டு வஞ்சம் தீர்த்தார்கள் .

இதன் நீட்சியே வடகிழக்கு இணைவுக்கு முஸ்லிம் தரப்பு விரும்பாமல் இருப்பதற்குக் காரணம் !

முஸ்லிம்கள் 'ஒரு தனி இனமே அல்ல, அவர்கள் தமிழர்களுக்குள் இருக்கும் ஒரு குழு மாத்திரமே, அவர்கள் 'இஸ்லாமியத் தமிழர்கள்' என்று முஸ் லிம்களைக் கொச்சைப் படுத்தியது அன்று மட்டுமல்ல இன்றும்தான் !

தமிழர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக பகிரங்கமாக சிங்களவர்களுக்கு உதவி முதுகில் குத்தியதையும் மறக்க முடிவில்லை!

அன்றே முடிவு கட்டப்பட்ட தீவிர சிங்கள வெறியன் 'அனகாரிக தர்மபாலாவை' இலங்கையில் போராடி முடியாத பட்சத்தில் இங்கிலாந்து வரை சென்று வாதாடி வெளியே கொண்டுவந்து முஸ்லிம் மக்களுக்கு எதிராக வரலாற்றுத் துரோகம் செய்ததையும் மறக்க முடியவில்லை !

அன்று தர்மபாலாவின் முஸ்லிம்களுக்கு எதிரான துவேசக் கருத்துக்களின் நீட்சியே இன்றைய சம்பிக்க ரனவக்க, ஞானசார மற்றும் எல்லோரும்! அன்று முஸ்லிம்களுக்கு எதிராகவே அக்கருத்

எங்களுக்கும் அவர்களின் கலாச்சாரங்கள் பற்றி விமர்சிக்க முடியம்! ஆனால், அது எங்களுக்குத் தேவையில்லாத ஒன்று என்று புரிந்து வைத்திருக்கிறோம்!

LTTE யினர் 24 மணித்தியாலத்துக்குள் யாழ்ப்பாண முஸ்லிம்களை சொத்துக்களை பறிமுதல் செய்துவிட்டு விரட்டி அடித்தனர்! கத்தான்குடி, அளிஞ்சிப்பொத்தானை, ஏறாவூர், மூதூர் வரை நிறைய முஸ்லிம் களுக்கு எதிரான துரோகத்தனங்களே பிரபாகரன் மறைவுக்கு தென்னிலங்கையுடன் சேர்ந்து முஸ்லிம்களையும் பாற்சோறு சாப்பிட வைத்தது!

வரலாறு பூராகவும் தமிழ்த் தலைவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகவே முதுகில் குத்திக் கொண்டிருந்தார்கள்! எனக்கு என் உடன்பிறப்பு தமிழ் சகோதரர்களுடன் எந்த மனக்கசப்பும் இல்லை, அவர்களும் எங்களைப் போன்ற அப்பாவிகள்! ஆனால், தமிழ் தலைவர்கள் என்றுமே முதுகில் குத்தும் வேலைகளையே செய்து வந்துள்ளார்கள்!

இரா சம்பந்தன் ஐயா அவர்கள் இந்தப் பிரச்சனைகளில் அரசாங்கத்துக்கெதிராக என்ன நடவடிக்கை எடுத்தார்? அவர் எதிர்க்கட்சித் தலைவர் தானே!



பிரபாகரனின் அடாவடித்தனங்களை அன்று எப்படி நடுநிலைமைவாதிகள் கண்டிக்கவில்லையோ அதே போன்று தான் இன்றும் வடக்கு முதல்வரின் நடவடிக்கைகளுக்கு யாரும் எதிர்ப்புக் காட்டுவதில்லை என்பது கசப்பானாலும் உண்மையே.

'முஸ்லிம்களில் அரேபிய வம்சாவளி முஸ்லிம்கள் இந்தியாவில் இருந்து வந்த முஸ்லிம்கள் என்று இரண்டு பிரிவினர்கள் இருக்கிறார்கள், அவர்களில் வட கிழக்கு இணைவுக்கு அரேபிய வம்சா வழி முஸ்லிம்களே எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்' என்று சிங்களத்தில் பேட்டி கொடுத்தபோது எந்த நடுநிலைமை வாதியாவது அவரிடம் ஏன் இப்படிப் பொய்யான தகவல் மூலம் சிங்களவர்களிடம் காட்டிக்கொடுக்கிறீர்கள் என்று கேட்டதுண்டா ?

முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு அன்றுபோல் இன்றும் தடையாக இருப்பதும் தமிழ்த் தலைவர்களே !

முஸ்லிம்கள் வடக்கில் காடுகளை அழிக்கிறார்கள் என்று பாராளுமன்றத்தில் கூட மிகவும் ஆக்ரோசமாகக் கத்திச் சிங்கள மக்களின் வெறுப்பை எம்மீது திசை திருப்புகிறார்கள் தமிழ்த் தலைவர்கள்.

# உயிர் கொல்லும் உயிரினம் 'இனவாதம்'



- சப்ராஸ் புஹாரி

ஆங்கில பிக்ஷன் திரைப்படங்களில் ஏதாவது ஒரு உயிரினத்தை ஏதோ ஒரு காரணத்திற்கு விஞ்ஞானிகள் உருவாக்குவார்கள். ஒரு கட்டத்தில் அது அவர்களின் கையை மீறிச் சென்றுவிடும். பின்னர் அதை அவர்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவே முடியாமல் போகும். அது போன்று தான் இனவாதத்தின் இன்றைய நிலை.

உருவாக்கி வளர்த்தவர்கள் நினைத்தாலும் அதை அழிப்பது இலகுவானதல்ல.

## முஸ்லிம்களுக்கு...

(01 ஆம் பக்கத் தொடர்)

அவர் கருத்து வெளியிடும் போது பெரும்பான்மை பௌத்த அழுத்தக் குழுக்களின் (Buddhist Lobby Group) அழுத்தம் காரணமாகவே அமைச்சரவையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த முடிவின் மூலமாக நீண்ட காலமாகப் பேணப்படும் ஒரு பாரம்பரியம், மூன்று பீடங்களினதும் வேண்டுகோளுக்காக மீறப்பட்டுள்ளது. சிறுபான்மையினத்துக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட தீவிரவாத பௌத்த மதகுருக்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்காத அரசாங்கம், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளினை மேற்கொண்டவர்களின் எழுச்சியின் தொடராகவே இந்த முடிவை எடுத்துள்ளது.

வெசாக் வாரத்துக்குள் மேதினம் அமைவதாலேயே மே தினம் 07 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. வெசாக் தினம் மே தினத்துக்கு இரு தினங்களுக்கு முன்னரான 29 ஆம் திகதியே நிர்ணயிக்கப்பட்டுள்ளதேயன்றி வெசாக் வாரம் என்ற ஒன்று இலங்கையின் மரபில் இல்லை. மே தின நிகழ்வுகள் இவற்றுக்குப் பாதிப்பாக அமையப் போவதில்லை. பெரும்பாலும் இந்துக்களாகவுள்ள தோட்டத் தொழிலாளர்களும் வெசாக்கை அனுஷ்டிப்பதில்லை. இந்த நிலையில் பௌத்த மதகுருமார்களின் கோரிக்கைக்கு செவி தாழ்த்துவதற்கென்றே இம்முறை தொழிலாளர்களின் தினத்தில் அரசாங்கம் கைவைத்துள்ளது. எனவே தொழிற்சங்கங்களின் பாதுகாப்பையும் உரிமையையும் உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச தொழிலாளர் தினத்தில் தமது தொழிற்சங்க செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தைக் கேட்டுக் கொள்கிறோம் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீதிமன்ற...

(01 ஆம் பக்கத் தொடர்)

இந்தப் பிரிவுகளில் பிரிவு 12 அ(01) இலுள்ள மாகாண நீதிமன்றங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் விடயம், அரசியலமைப்பின் 154 க (3) (அ) இற்கு முரணாக உள்ளது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்பட வேண்டும்.

12 அ(2) திருத்தத்தின்படி, நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்றத்துக்காக நீதிபதிகளை முன்மொழிவதை எடுத்துரைக்கிறது. இதுவும், 12 அ (07) திருத்தமும் அரசியலமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

MINDRICH
COLLEGE OF MANAGEMENT STUDIES
كلية الدراسات الإدارية
Enrichment of Excellence

ஆங்கில மொழிமூலம் A/L COMMERCE மற்றும் AAT பரீட்சைகளை 'A' தர சித்திகளுடன் பூர்த்தி செய்வதற்கு தமிழ் மொழிமூல மாணவர்களை பயிற்றுவிப்பதில் வெற்றி கண்ட ஒரு முன்னோடி நிறுவனம்

புதிய மாணவர் அனுமதி - 2018 (HIJRI-1439)

- இஸ்லாமிய பின்னணியையும் ஆளுமைப் பண்புகளையும் உருவாக்குகின்ற குர்ஆனிய கற்கையுடனான பாடத்திட்டம்
- தலைநகரில் பாதுகாப்பான இஸ்லாமிய சூழல்
- 9 வருட கால அனுபவம்
- A/L பரீட்சைக்கு பின்னால் உயர் கல்வித் தகைமைகளை (DEGREE/ ICASL/CIMA/ACCA/CIM/CMA) நிறைவு செய்வதற்கான சந்தர்ப்பம்

பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் (2018-2020)

- A/L Commerce (English Medium)
- AAT - 1,2&3 (English Medium)
- Thajweed & Hifz
- Tharbiya & Thafseer
- Development of Soft Skills
- IT Skills
- Physical Fitness & Games

தகைமைகள்

- க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு ஆங்கிலம் அல்லது தமிழ் மொழி மூலம் தோற்றிய ஆண் மாணவனாயிருத்தல்.
- கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் 'C' தர சித்திகளைப் பெற்றிருத்தல்.

AN OPPORTUNITY TO OBTAIN A/L & PROFESSIONAL QUALIFICATIONS WITH ISLAMIC BACKGROUND BY THE AGE OF 19.

தகுதியுடைய மாணவர்ககளுக்கு புலமைப்பரிசில்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலதில விபரங்களுக்கும் பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பத்திற்கும்

Text your name and address to

0777 23 1234

MINDRICH COLLEGE OF MANAGEMENT STUDIES
No: 49, Second Lane, Dehiwala.
0115 23 1234 | 0112 76 1884 | infomindrich@gmail.com

## SUBSCRIPTION FORM

Name :........................................

Address :........................................

........................................

Tel :........................................

Amount : Rs. .................... Sing: ....................

Publication: மீள்பார்வை ☐ வைகறை ☐ பயணம் ☐ சர்வதேசப் பார்வை ☐

| | | | | |
|---|---|---|---|---|
| வருட இதழ்கள் | 24 | 04 | 04 | 04 |
| உள்நாடு | 1100/- | 300/- | 300/- | 300/- |

உங்கள் பணத்தை காசோலை மூலமாகவோ அல்லது வங்கியில் வைப்புச் செய்வதன் மூலமாகவோ அனுப்பலாம்.

Meeparvai Publishers, Bank: People's Bank, A/C No.: 056100153078164,
Branch: Sri Sangaraja Mw, Colombo 10.
No 49, Sri Mahinnda Dhamma Mawatha Colombo 09 T.P 0777581661

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. தயாரித்திருக்கும் சொந்தப் பொறி

• தயான் ஜயதிலக




கென்னடியின் சகாப்தத்தில் பெரும் தாராளவாதியாகவும் அவரது நிருவாகத்தில் உயர்ந்த அறிஞருமாக இருந்த ஆர்தர் ஷ்லெசஞ்சர், வியட்னாமில் அமெரிக்க கொள்கை ஒரு எட்டுப் பக்கப் பெட்டிக்குள் அடைபட்டு விட்டதால் வியட்னாமில் அது தோல்வியைத் தழுவியது என்ற பிரபலமான வாசகத்தை எழுதியிருந்தார்.

அதேபோல ஐ.தே.க. பல பக்கங்கள் உள்ள ஒரு பெட்டிக்குள் சிக்கிக் கொண்டதனால் நல்லாட்சி அரசாங்கமும் அதற்குள் சிக்கிக் கொண்டுள்ளது.

(1) அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கிட்டத்தட்ட 25 வருடங்களாக தனது கட்சி வெற்றி அடைவதற்கு வழி வகுக்கவில்லை.

(2) அவர் அதன் தலைமைப் பதவியை விட்டு விலகமாட்டார்.

(3) அவரின் கீழுள்ள தலைமைத்துவ சபை தெரிவு செய்யப்பட்ட மற்றவர்களிடத்தில் தோல்வியை மட்டுமே பகிர்ந்தளித்து, மாகாண சபை மற்றும் ஜனாதிபதி தேர்தல்களில் தவிர்க்க முடியாத தோல்வியைச் சந்தித்து பின்னர் அதற்கான பழியை அவர்கள் மீதே சுமத்தி அவர்களை இழிவுபடுத்தும்.

(4) ரணிலை பதவி நீக்கம் செய்ய முடியாது. ஏனென்றால் 1994 இல் அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஐ.தே.க. வின் யாப்பு மிகவும் ஜனநாயகமான ஒன்றைத் தவிர்த்துள்ளதுடன் முடிவு எடுக்கும் அமைப்பில் அவரது வேட்பாளர்களையே பெருமளவு நிரப்பியும் உள்ளது.

(5) ஐ.தே.க. சீர்திருத்தவாதிகளால் பழைய, ஜனநாயகமான, பரந்த அடிப்படையிலானதுமான கட்சி யாப்பினை மீட்டெடுக்க இயலாது.

(6) விக்கிரமசிங்காவின் இடத்துக்கு மிகவும் வெளிப்படையாக அடுத்து வர விருப்பவர்கள் 2020 இல் அவரது மொத்த தோல்வியும் இடம்பெறும் வரை காத்திருக்க வேண்டும். அல்லது பெரும் தலைவர் ரணசிங்க பிரேமதாஸ செய்ததைப் பின்பற்ற வேண்டும், 1988 இல் ஐ.தே.க. தலைமையை ஏற்றுக் கொண்ட அவர் தனது பதவியைப் பற்றி விளக்கமளிக்கையில் அது இருமுனைகளிலும் தீப்பற்றி எரியும் பந்தம் என்று விபரித்ததுடன் கட்சியால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவிலிருந்து விலகவும் திட்டமிட்டார் (சிறிசேன குரே உறுதிப்படுத்தியது போல). அவர் கட்சியால் தெரிவு செய்யப்படவில்லை.

(7) டிஎஸ் சேனநாயக்கா வரலாற்றுச் சிறப்பு மிக்க இலங்கைத் தேசிய காங்கிரஸைத் தள்ளிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியை அமைத்தது போல, அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, 1970 இல் ஐ.தே.க. தேர்தலில் தோல்வியடைந்து கட்சிக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டபோது ஆர். பிரேமதாஸ 'புரவசி பெரமுன' அமைப்பை உருவாக்கியது போல ருக்மன் சேனநாயக்கா 'ஈ.எல்.ஜே.பி' கட்சியை உருவாக்கியது போல மற்றும் லலித் அத்துலத் முதலியும் காமினி திசாநாயக்காவும் சேர்ந்து 1991 இல் 'டியுஎன்எப்' இனை உருவாக்கியது போல ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணி அங்கத்தவர்கள் மொட்டுக்குச் சமமான ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு இயலாமலோ அல்லது விரும்பாமலோ உள்ளார்கள்.

(8) நல்லாட்சி மாதிரியில் உள்ள சாத்தியமான அர்த்தமுள்ள மிதவாத சீர்திருத்தத்தை தடுப்பதன் மூலம் ஐ.தே.க. தீவிரவாத தேசியவாதிகளின் மாற்றீட்டை நல்லாட்சி அரசாங்கத்தில் உருவாக்குவதை தவிர்க்க முடியாதபடி செய்துள்ளது.

பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை முக்கியமான இரகசியங்களை வெளிப்படுத்தும்.

முதலாவதாக ஒரு வழியில் அல்லது மற்ற வகையில் வாக்களிப்பவரது உண்மையான தன்மையை முழு நாட்டுக்கும் அது வெளிப்படுத்துகிறது.

இரண்டாவதாக இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் எதிர்காலம் மற்றும் தேர்தல் அதிர்ஷ்டம் என்பனவற்றைப் பற்றிய ஒரு துல்லியமான அடையாளத்தை அது வழங்கும். ஏப்ரல் 4 இல் அவர்கள் வாக்களிக்கும் வழியைப் பொறுத்துத்தான் 2020 வரை உள்ள தேர்தல்களில் மக்கள் அவர்களுக்கு எப்படி வாக்களிப்பார்கள் என்பதை அறிவிக்கும் ஒரு முக்கிய தீர்மானமாக அது இருக்கும்.

மூன்றாவதாக, வரப்போகும் பல வருடங்களுக்கு நாடு எந்தத் திசையில் செல்லப் போகிறது என்பதை அது வெளிப்படுத்தும். நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி பெற்றால், நாட்டில் மிதமான ஸ்ரீ.ல.சு.க. மற்றும் தாராளவாத தேசியவாதிகள் அல்லது நடைமுறைக் கேற்ற பிரபலமான ஐ.தே.க. அதிருப்தியாளர்களைக் கொண்ட ஒரு அரசாங்கம் உருவாகும், அதற்கு கூட்டு எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் வல்லமைமிக்க வியுகம் 'பொறுப்பான ஒத்துழைப்பு' என்கிற கொள்கையின் அடிப்படையில் ஆதரவு வழங்குவார்கள் அதேவேளை பதவிகள் எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இது ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கும் மற்றும் தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவதற்குமான சாத்தியமான சிறந்த சூத்திரமாகும்.

எனினும் எண்ணிக்கை குறைவாக இருந்தால் மற்றும் பிரேரணை மேற்கொள்ளப்படாமலும் இருந்தால், ஒன்றில் கூட்டு எதிர்க்கட்சி மற்றும் பெரும்பாலான ஸ்ரீ.ல.சு.க. அங்கத்தவர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு விரிவடைந்த எதிர்க்கட்சி, அநேகமாக ஐ.தே.க மற்றும் ரி.என்.ஏ ஆகியவற்றைக் கொண்ட ஒரு பலம் குன்றிய அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும், அல்லது கூட்டு எதிர்கட்சி, எதிர்கட்சியில் நீடித்து இருக்கும் அதேவேளை ஸ்ரீலசுக ஒரு போதும் மீளமுடியாத ஒரு அரசியல் குழப்பத்தில் சிக்கிக்கொள்ளும், மற்றும் 1977 இல் லங்கா சமசமாஜக் கட்சிக்கு நடந்ததைப் போல தேர்தலில் அது முற்றாக ஓரங்கட்டப்படும் நிலைக்கு வந்துவிடும்.

இந்த நேரத்தில் ஸ்ரீ.ல.சு.க. க்கு இன்னமும் பேரம் பேசுவதற்கான ஒரு வாய்ப்புள்ளது. ஆனால் ரணிலின் ஐ.தே.கவுடன் சேர்ந்து இருக்கும் வரை அந்த வாய்ப்பு வாய்க்குள் போட்ட இனிப்பு மிட்டாயைப் போல கரைந்து போய்விடும். இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முடிவை பாராளுமன்றத் தேர்தலுக்கு அமைவாக மாற்றியமைத்தால் கூட்டு எதிர்க்கட்சி - எஸ்.எல்.பி.பி பாராளுமன்றத்தில் 102 ஆசனங்களுக்கு மேல் பெற முடியாது, மற்றும் ஸ்ரீ.ல.சு.க. 30 ஆசனங்களைப் பெற முடியும். ஆனால் அடுத்து வரும் தேர்தலில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு சாத்தியம் உள்ளது அதன்படி கூட்டு எதிர்க் கட்சி - எஸ்எல்பிபி வளரும், ஐ.தே.க மற்றும் ஸ்ரீ.ல.சு.க தேயும்.

மிதவாத ஸ்ரீ.ல.சு.க ஏப்ரல் 4 இல் மற்றும் அதற்குப் பிறகும் கூட்டணிக்கு உடன்படாவிட்டால் கூட்டு எதிர்க்கட்சி - எஸ்.எல்.பி.பி க்கு அடுத்த வருட இறுதியில் அதன் சொந்த ஜனாதிபதி வேட்பாளரை களமிறக்கும் வரை, தனியாகச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. தற்போதைய நிலவரப்படி கூட்டு எதிர்க்கட்சி - எஸ்.எல்.பி.பி.க்கு ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு ஸ்ரீ.ல.சு.க வின் ஆதரவு தேவைப்பட்ட போதிலும், அடுத்த பாராளுமன்றத் தேர்தல் நடக்கப் போவது ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரே தவிர முன்பு இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

சிறுபான்மை வாக்குகளில் ஏற்படும் இழப்பை, ஐதேகவின் சிங்கள சார்பான கட்டமைப்பு வாக்குகள் மற்றும் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரின் வாக்குகள் என்பனவற்றை மாற்றியெடுப்பதின் மூலம் ஈடு செய்து கூட்டு எதிர்க்கட்சி - எஸ்.எல்.பி.பி ஆதரவளிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் வெற்றிபெற்று அவரின் தலைமையின் கீழேயே அடுத்த பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறப் போகிறது.

(பக்.14)

# ஜேர்மனியின் நாசிஸமும் இலங்கையின் பாசிஸமும்

• சமாரா வெத்திமுனி

ஒரு சில சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்களால் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நபரொருவர் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார். கடுமையாகத் தாக்கப்பட்டு காயத்துக்குள்ளான நபர் இரண்டு நாட்களுக்குப் பின் பரிதாபகரமாக உயிரிழக்கிறார். சில மணித்தியாலங்களில் கோபம் கொண்ட ஒரு கும்பல் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களை உடல் ரீதியாகத் தாக்கி, அவர்களது வியாபார நிலையங்களைக் கொள்ளையிட்டது மட்டுமன்றி, அவர்களது வீடுகள் மற்றும் மதஸ்தலங்களையும் எரியூட்டுகின்றது. இது கிரிஸ்டல் நாக்ட் அல்லது உடைந்த கண்ணாடிச் சில்லுகளின் இரவு என்றழைக்கப்படும் நாசி ஜேர்மனியின் 1938 ஆம் ஆண்டின் நவம்பர் 9 - 10 ஐ ஒத்த சம்பவமாகும்.

பெப்ரவரி 22, 2018 அன்று கண்டியில் சிங்கள நபர் ஒருவர் ஒரு சில முஸ்லிம் நபர்களினால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு மோசமான காயங்களுக்கு உள்ளாகிறார். பாதிக்கப்பட்ட அந்த நபர் மார்ச் 3 ஆம் நாள் மரணத்திற்குள்ளாகிறார். மார்ச் 4 மாலைப் பொழுதில் போர்க்குணமிக்க ஒரு கும்பல் முஸ்லிம்களின் வீடுகள், வியாபார நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்களைத் தாக்க ஆரம்பிக்கின்றனர். அதனைத் தொடர்ந்து சில தினங்களாக முஸ்லிம்களுக்குச் சொந்தமான உடைமைகள், பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சமூக வலைதளங்களில் முஸ்லிம்களிற்கெதிராக வெறுப்புணர்வையும் வன்முறையையும் தூண்டும் கதையாடல்கள் என்பன அதிகரிக்கத் தொடங்கின.

கண்டியில் நடைபெற்ற இவ்வன்முறைக்கு ஒரு வாரத்துக்கு முன்னர், அம்பாறை நகரில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான உணவகத்தில் சிங்களவர்களுக்குப் பரிமாறப்பட்ட உணவில் கருத்தடை மாத்திரை கலக்கப்பட்டது என்ற வதந்தியை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இவ்வன்முறையைத் தூண்டியவர்கள், சிங்கள இனம் பெருகுவதைத் தடுக்க முஸ்லிம்கள் முற்படுவதாகவும் அதன் மூலம் அவர்களது சனத்தொகையைச் சிங்களவர்களைவிட அதிகரிக்க முற்படுவதாகவும் குற்றம் சுமத்தினர்.



இவ்விரு நிகழ்வுகளில் உள்ள ஒற்றுமைகளை மிகைப்படுத்தாது இருத்தல் முக்கியமாகும். பொதுவாக சிறுபான்மையினரை அநியாயமாகப் பழிசுமத்தும் நிகழ்வு வெவ்வேறு தளங்களில் இடம்பெறும். நாசி ஜேர்மனியில் யூதர்களுக்கு எதிரான வன்முறை அதன் தீவிர நிலை ஆகும். எனினும், ஜேர்மனியில் யூதர்கள் மற்றும் இலங்கையில் முஸ்லிம்கள் அநியாயமாக பழிசுமத்தப்படுதலை ஒப்பிட்டுப் பார்த்தால், இலங்கை அதன் தீவிர நிலையை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பது வெளிப்படும்.

தவிர, 1915 ஆம் ஆண்டை மறந்து விடலாகாது. சிலோனில் முஸ்லிம்களு[illegible]க்கு எதிரான நாடு தழுவிய வன்முறை நிகழ்ந்த அதே வருடம் - சிங்கள பௌத்த சித்தாந்தி அநாகரிக தர்மபால இலங்கை முஸ்லிம்களை ''யூதர்களைப் போல் செழிப்படைய முனையும், ஷைலோகியன்ஸ்'' என வர்ணித்தார்.

கண்டி மற்றும் கிரிஸ்டல்நாக்ட் நிகழ்வுகள் இரண்டிற்கும் இடையிலான பிரதான வேறுபாடு அதில் அரசின் வகிபாகம் ஆகும். நவம்பர் 9ஆம் நாளன்று ஒரு ஜேர்மனியப் பிரஜையின் இறப்பையொட்டி நாஜி பரப்புரைக்குப் பொறுப்பான அமைச்சர் ஜோசப் கொப்பல்ஸ் ஒரு உரையை நிகழ்த்தினார்.

அதில் அவர் தெரிவித்ததாவது, ''அதிபர் ஒரு முடிவை எடுத்துள்ளார்... ஆர்ப்பாட்டங்கள் கட்சியினால் ஏற்பாடு செய்யப்படவோ, ஆரம்பிக்கப்படவோ கூடாது. அதுபோலவே ஆர்ப்பாட்டங்கள் தன்னிச்சையாக மேலெழும் சந்தர்ப்பங்களில் அவை அடக்கப்படலாகாது.'' இது சாதாரண குடிமக்கள் உட்பட நாஜி விசுவாசிகளுக்கு ஜேர்மனியில் (மற்றும் ஆஸ்டிரியா, சுடடன்லன்ட இல்) வாழ்ந்த யூதர்களை பழிவாங்க வழங்கப்பட்ட தகுந்த சந்தர்ப்பமாகக் கருதப்பட்டது. நாம் அவ்வாறான சந்தர்ப்பங்களை இலங்கையில் காணவில்லை. ஆனால், அந்நிலை கடந்த காலங்களில் - 1983 தமிழர்களுக்கு எதிரான கலவரத்தின் போது மற்றும் குறிப்பிடத்தக்களவு 2014 முஸ்லிம்களுக்கெதிரான கலவரத்தின் போது காணப்பட்டது.

கண்டி மற்றும் கிரிஸ்டல்நாக்ட் நிகழ்வுகள் இரண்டிற்கும் இடையிலான பிரதான ஒத்த தன்மைகள் குறிப்பிட்டு நோக்கத்தக்கது. நிகழ்வுகளை தூண்டிய விடயங்களுக்கு இடையிலான ஒற்றுமையினைத் தாண்டி பரந்தளவில் அநியாய[illegible] யினைக் கொண்டுள்ளது. முதலாவது ஒத்த தன்மை, சிறுபான்மையினரை பொருளாதார காரணங்களுக்காக பழி சுமத்தல், இரண்டாவது, மக்கள் தொகை அரசியலை உள்ளடக்கியது.

முதலாவது, இலங்கை முஸ்லிம்களை சிங்கள பௌத்த பொருளாதார ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலான தரப்பினர்கள் என பழிசுமத்தல். குறிப்பாக பொருளாதார நெருக்கடியான காலங்களில் முஸ்லிம்களின் பொருளாதார ரீதியான வெற்றியைப் பார்த்து அவர்கள் சினம்கொள்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையில் அஹிலன் கதிர்காமர், பொருளாதார மந்த நிலையின் போது பொருளாதாரத்தில் வெற்றிகரமான சிறுபான்மையினரை இலக்காகக் கொள்ளும் இந்தப் போக்கை மிகத் துள்ளியமாக விளக்குகிறார். இதேபோல், 1929 மற்றும் 1933க்கு இடையில் ஜேர்மனியை உலுக்கிய பொருளாதார நெருக்கடியின் போது (மற்றும் அதற்கு முன்னர் வெய்மர் தசாப்தத்தின் போதும்) யூதர்கள் ஒப்பீட்டளவில் பாதிப்புகளுக்கு உள்ளாகாமை நாஜி ஜேர்மனியர்களை கடுமையாக சினம் கொள்ளச் செய்தது.

இரண்டாவது, இலங்கை முஸ்லிம்கள் ஏனைய இன மதக் குழுமங்களை விட சனத்தொகையில் அளவுக்கு மீறிய வளர்ச்சியைக் கொண்டுள்ளனர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் முஸ்லிம்களை சிங்கள பௌத்த சமூகத்தின் மக்கள் தொகையிலான மேலாதிக்கத்திற்கான அச்சுறுத்தலாக முன்னிறுத்தல். அம்பாறையில் நாம் அவதானித்தது போல் போர்க் குணமிக்க குழுக்கள் முஸ்லிம்கள் சிங்கள இனத்தவர்களை மலட்டுத்தன்மைக்கு உள்ளாக்குகின்றனர் என்ற பிரச்சாரத்தினைப் பரப்ப இவ்வாறு மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கைகளை தகுந்த சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

மக்கள் தொகை அரசியலும் நாஜி ஜேர்மனியில் கணிசமானளவு காணப்பட்டது. ஆனால், அது மிகத் தெளிவாக அதிதீவிரத்தன்மை கொண்டிருந்தது. ஆரிய இனத்தின் 'தூய்மை'யினை உறுதிப்படுத்த ஆரியர்கள் மற்றும் யூதர்களுக்கு இடையிலான திருமண ஒப்பந்தங்கள் 1935ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்டது. மேலும், யூத மக்களது சனத்தொகையைக் குறைக்க நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன - முதலாவது கட்டாய வெளியேற்றமும் அதனைத் தொடர்ந்து அடியோடு அழித்தலும். இவை மிகைப்படுத்திய ஒப்பீடுகள் எனக் கூறி இலகுவாக நிராகரிக்கப்படலாம். ஆனால், இவ்வன்முறைகள் எவ்வித தண்டனைகளும் வழங்கப்படாமல் தொடருமானால் எதிர்காலத்தில் முஸ்லிம்களும் இந்நாட்டை விட்டு வெளியேறுவதற்கு கட்டாயப்படுத்தப்படுவார்கள் என்பது உறுதி.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலை, நாஜி ஜேர்மனியில் இருந்தது போல், தீவிர தேசியவாத போர்க்குணமிக்க குழுக்களின் வனப்புரைகளுடன் மக்கள் தொகையின் பெரும் பகுதி உடன்படுகிறது. இதற்கிடையில் இலங்கையின் அரசியல்வாதிகள் மற்றும் சட்ட அமுலாக்கத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் இவ் வன்முறையாளர்களுக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கத் தவறிவிட்டனர். அத்துடன், 2014 அளுத்கம கலவரத்தினைத் தொடர்ந்து பொதுபலசேனா மற்றும் சிங்ஹல ராவய போன்ற போர்க்குணமிக்க தேசியவாதக் குழுக்கள் சட்ட விலக்கல்கள் அனுபவித்து வருவது மேலும் அவர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களைக் கூட்டும்.

நாஜி ஜேர்மனியில் காணப்பட்டது போன்ற வெளிப்படையான பாசிச நிலைக்கு இலங்கை இன்னும் தள்ளப்படவில்லை. ஆனால், இப்பாசிச நிலையின் இறுதிநிலையில் என்ன இருக்கின்றது என்பதை முன்னோக்கியே அறியாதவிடத்து நாங்கள் திரும்ப முடியாத ஒரு புள்ளியை அடையும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# நாட்டின் வளங்களை சூறையாடும் நாடு

யுத்தத்தின் பின்னரான வடுக்களில் இருந்து நாடு இன்னும் மீளவில்லை. இனியும் கிட்டிய எதிர்காலத்தில் மீள்வதற்கான சாத்தியமும் இல்லை என்பதனைத் தான் நாட்டின் நிகழ்வுகள் எதிர்வு கூறுகின்றன. யுத்தத்தை வென்றவன் என்ற பெருமிதத்தில் யுத்தகாலத்தில் நாட்டுக்குத் தலைமை வகித்த மஹிந்த ராஜபக்ஷ கொள்ளையடித்ததாகக் கூறப்பட்ட எந்தச் சொத்துக்களும் மீளப்பெறப்படவில்லை. அது தொடர்பான கதையாடல்களும் தற்போது நடப்பதுமில்லை. இதனால் எகிறி உயர்ந்த வெளிநாட்டுப் படுகடன்களை மக்களே தமது தலைகளில் சுமந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் தமது அரசியல் இலாபங்களை அடைந்து கொள்வதற்காக தற்போது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாதச் செயற்பாடுகள் முஸ்லிம் சமூகத்தை நோக்கியதாக இருந்தாலும் அது மொத்த நாட்டையும் மீண்டும் வெளிநாடுகளிடம் அடகு வைக்கும் நிலைக்கே தள்ளிவிடப்போகின்றன. முஸ்லிம் சமூகம் வியாபாரத்துறையில் சிறப்பாகச் செயற்படுகின்றார்கள் என்பதை வைத்து அந்த இனத்துக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் வீழ்ச்சி அடையப் போவது முஸ்லிம் சமூகம் மட்டுமன்றி இலங்கையின் வர்த்தகத் துறையும் தான் என்பதை இந்த இனவாதிகள் கவனத்தில் கொள்வதில்லை.

முஸ்லிம் சமூகத்தின் வர்த்தகம் வாங்கி விற்கும் சில்லறை வியாபாரமாகவே பெரும்பாலும் அமைந்திருக்கின்றன. இலங்கையின் உற்பத்திச் சமூகத்தில் அவர்களது பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருக்கிறது. இந்த வகையில் இலங்கையின் உற்பத்திச் சமூகத்தின் உற்பத்திகளை வாங்கி விற்கின்ற வியாபாரத்தைத் தான் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பெரும்பாலானோர் செய்து வருகிறார்கள். யாரும் விற்க முடியுமான அத்தியாவசியப் பொருட்களுக்கப்பால் எந்தப் பொருட்களையும் விற்பனை செய்ய முடியுமான ஆற்றல் முஸ்லிம் வியாபாரிகளிடம் இருப்பது மறுப்பதற்கில்லை. இந்த வகையில் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் தாக்கப்படுவதனூடாக இலங்கையின் ஒட்டு மொத்த வர்த்தகமும் பாதிக்கப்படுகிறது.

அத்தோடு தன்னிடமுள்ள திறமையினூடாக தன்னை வளர்த்துக் கொள்ளும் ஒரு சமூகத்தை கீழே தள்ளிவிட முனைவது முழு நாட்டினதும் வளர்ச்சியை கீழே தள்ளிவிடுவதற்கு ஒப்பானதாகவே கருத வேண்டியுள்ளது. தமது சீவனோபாயத்துக்காக வியாபாரம் செய்யும் மக்களது வாழ்வாதாரத்தினை அழித்தொழித்து அவர்களை நடுதெருவில் நிற்கச் செய்வதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கப் போகின்ற நன்மை என்ன? இந்த வகையில் இனவாதிகளின் இந்தச் செயற்பாடுகளை நாட்டின் அபிவிருத்தியை முடக்குவதற்கான உத்தியாகவே கருத வேண்டியுள்ளது.

முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டதன் ஊடாக அவர்களிடம் தொழிலுக்காக இணைந்திருந்த சிங்களக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. புத்தாண்டு களைகட்டும் இந்த வேளையில் இந்த வன்முறைகள் காரணமாக தமது தொழில்களை இழந்து தவிக்கும் பல சிங்களக் குடும்பங்கள் இந்த இனவாதிகளின் செயற்பாடுகளினால் பரிதவிக்கின்றன. எனவே தனி ஒரு இனத்தை இலக்காக வைத்து இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டாலும் அது இலங்கையின் எல்லா இனங்களிலும் பாதிப்புச் செலுத்துவதாகவே அமைகிறது.

எந்த வகையில் பார்த்தாலும் இனவாதிகளின் இந்த வன்முறைகள் ஒன்றுபட்டு முன்னேற நினைக்கும் ஒரு நாட்டை அழிவை நோக்கி இட்டுச் செல்வதாகவே அமைகின்றன. அந்த வகையில் நாட்டைக் குட்டிச் சுவராக்க முனையும் இந்த நாசகாரக் கும்பல்களுக்கு எதிராக முஸ்லிம்கள் மட்டுமன்றி நாட்டுப் பற்றுள்ள அனைத்து மக்களும் திரண்டெழ வேண்டும். இனவாதத்தின் கோர முகத்தை அனுபவத்தில் கண்ட ஒரு நாடு என்ற வகையில் எமது அடுத்த தலைமுறையும் இதுபோன்றதொரு அழிவை எதிர் கொள்வதற்கு தேசப் பற்றுள்ள மக்கள் இடமளிக்கக் கூடாது. இந்த அழிவுகளுக்கு பின்னாலிருந்து முண்டு கொடுக்கும் அரசியல்வாரிசுகளையும் நாட்டு மக்கள் தோலுரித்துக் காட்ட வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறையீடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. 96, கிருல வீதி, கொழும்பு 05
தொலைபேசி 011 5353635
பெக்ஸ் 011 5335500
ஈமெயில் srpckwood@pccsl.lk
இணையத்தளம் www.pccsl.lk

# எல்லை மீள் நிர்ணயமும் முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளின் வகிபாகங்களும்

• கலாநிதி எச்.எஸ். ஹஸ்புல்லாஹ்

எல்லை நிர்ணயம் என்கின்ற விடயத்தில் முஸ்லிம் சமூகம் கவனத்திற்கொள்ளப்படாமை தெரிகிறது. உதாரணமாக கிராம சேவகர் பிரிவு, பிரதேச செயலகப் பிரிவு, உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் போன்ற கட்டமைப்புக்கள் முஸ்லிம்களுக்கு சவாலாகவே இருந்து வந்துள்ளன.

முஸ்லிம்களை இனரீதியாக நோக்குகையில் அவர்கள் இந்த நாட்டில் வாழும் தன்மை ஏனையவர்களை விடவும் வித்தியாசமானது. முஸ்லிம்கள் நாடு முழுவதிலும் பரந்த அடிப்படையில் வாழ்கிறார்கள். இந்தப் பரந்து வாழும் தன்மையானது இன மையப்படுத்தலுடன் சேர்ந்து வருகின்றபோது அங்கு பிரச்சினைகள் வருகிறது. குறிப்பாக எல்லை மீள் நிர்ணய விடயத்திலும் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன.

இலங்கையில் ஏறக்குறைய 14,000 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றுள் 7000 கிராம சேவகர் பிரிவுகளில் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். சில இடங்களில் அதிகமாகவும் இன்னும் சில இடங்களில் குறைவாகவும் வாழ்கின்றார்கள். உதாரணமாக கிழக்கு மாகாணத்தில் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள் வாழ்கின்ற கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஏனைய பகுதிகளில் முஸ்லிம்கள் பரந்து வாழ்கிறார்கள். இது பொதுமையானது. கிழக்கில் போருக்குப் பின்னர் முஸ்லிம்கள் ஓரிடத்தில் குவிந்து வாழ்கிறார்கள். ஏனைய பிரதேசங்களில் உதாரணமாக கொழும்பு மாவட்டத்தில் 10 வீதத்திற்கு அதிகமாகவும், கண்டி மாவட்டத்தில் 15 வீதத்திற்கு அதிகமாகவும் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள்.

எல்லை நிர்ணயம் செய்கின்ற போது உதாரணமாக மாகாண சபையை எடுத்துக் கொண்டால், பரந்து வாழ்கின்ற மக்களை எவ்வாறு ஒன்றிணைத்து ஒரு தேர்தல் தொகுதியாக மாற்றுவது என்கின்ற விடயத்தில் பிரச்சினை எழுகிறது. கிழக்கில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. இங்கு சனத்தொகைக்கு ஏற்ற தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணம் அல்லாத ஏனைய பகுதிகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மாகாண சபைக்கான எல்லை நிர்ணயமானது ஒரு சட்ட மூலத்தின் அடிப்படையிலேயே எமக்குத் தரப்பட்டுள்ளது. இறுதியாக மேற்கொள்ளப்பட்ட 2012 ஆம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீட்டின் பிரகாரமே எல்லை மீள்நிர்ணயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் ஏலவே குறிப்பிடப்பட்ட சவால்களை மையமாகக் கொண்டு மாகாண சபைக்கான எல்லை நிர்ணயத்தை செய்யும்போது முஸ்லிம்களுக்கு கிடைக்க வேண்டிய தேர்தல் தொகுதிகளில் ஏறக்குறைய 50 வீதமானவை மாத்திரமே முஸ்லிம்களுக்கு கிடைக்கக் கூடிய தன்மையுள்ளது.

9 மாகாணங்களுள் 5 மாகாணங்களில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவங்கள் இல்லை. 25 மாவட்டங்களுள் 18 மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கு ஒரு பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே முஸ்லிம்களை பொறுத்தவரையில் எல்லை நிர்ணயம் என்கின்ற விடயத்தில் பாரதூரமான பிரச்சினைகள் உள்ளன.

இது எப்படி நடந்தது? நான் இரண்டு விடயங்களை குறிப்பிடுகிறேன். ஒன்று, சட்டம் தரப்பட்ட முறை இது. அதாவது குறுகியதொரு காலப்பகுதியில் முடிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. எமக்கு 4 மாத காலம் தரப்பட்டது. இது எமக்கு பல விதத்தில் இறுக்கத்தையும், flaxiblity இல்லாத தன்மையையும் தந்தது.

மறுபுறத்தில் முஸ்லிம்கள் பிரதேச ரீதியாக செறிவின்றி வாழ்வதால் ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட சட்டத்தன்மை, எல்லோரும் சமமானவர்கள் என எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக என்னால் அந்தக் குழுவில் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை காணப்பட்டது.

எல்லை மீள்நிர்ணயப் பணி ஆரம்பிக்கப்பட்ட சமயத்திலிருந்து நான் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்று வந்தேன். "உங்களால் முடிந்ததை செய்யுங்கள், எஞ்சியதை நாம் பாராளுமன்றில் பார்த்துக் கொள்கின்றோம்" என அவர்களில் சிலர் என்னிடம் தெரிவித்தார்கள்.

எனவே தமிழர்களுக்கு அவர்களது விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரதிநிதித்துவங்கள் கிடைக்கக்கூடிய நிலைமைகள் இருக்க, முஸ்லிம்களை பொறுத்தவரையில் 50 வீதத்திற்கு கூடுதலான முஸ்லிம்கள் உள்ள இடங்களில் மாத்திரமே அவர்களுக்கான பிரதிநிதித்துவம் கிடைக்கின்ற சந்தர்ப்பங்கள் உள்ளன. இன ரீதியாகப் பார்க்கின்ற போது முஸ்லிம்கள் பின்னடைவில் உள்ளார்கள்.

தற்போது மாகாண சபைகளில் 34 அங்கத்தவர்கள் உள்ளார்கள். இந்நிலையில் புதிய முறையில் அதையும் விட குறைவான உறுப்பினர்கள் தெரிவாகக் கூடிய பாதகமான நிலைமைகள் காணப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் 2, மட்டக்களப்பு மாவட்டத்தில் 2, அம்பாறை மாவட்டத்தில் 3 என்ற அடிப்படையிலேயே பிரதிநிதித்துவங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளது. அம்பாறையில் கல்முனை தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது. கல்முனையோடும் சம்மாந்துறையோடும் காலா காலம் இருந்து வந்த நாவிதன்வெளி தற்பொழுது உகனயோடு இணைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் துரதிஷ்டமான தன்மை. புத்தளத்தில் 50 வீதம் முஸ்லிம் பிரதிநிதித்துவம் உள்ளது. இருந்தபோதிலும் இங்குள்ளவர்களுள் சுமார் 40 வீதமானவர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள்.



மாகாண சபை எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழு தமது அறிக்கையை உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கையளிப்பு

இது சனத்தொகை அடிப்படையில் செய்யப்பட்டதாகும். நாளை தினம் வாக்காளர் அடிப்படையில் எவ்வாறான நிலைமைகள் வரப்போகிறது என்பது சவாலாக உள்ளது. கொழும்பில் 52 வீதம் உள்ளது. எனினும் இங்கு பல கட்சிகள் போட்டியிடுகின்ற போது அதுவும் எவ்வாறு அமையும் என்பது தெளிவில்லை. கண்டியில் அகுரணையையும் பூஜாபிடிய பிரதேசத்தையும் இணைத்தால் மாத்திரமே அங்கு 56 வீதம் முஸ்லிம்களுக்கு கிடைக்கும். ஆனால் பூஜாபிடிய மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே 13 தேர்தல் தொகுதி என்பது 50 வீதத்திற்கு அதிகமாக இருந்தாலும் அவையும் கூட எமக்கு முழுமையான பிரதிநிதித்துவத்தைத் தருவதில்லை. எனவே 14 மாவட்டங்களை உள்ளடக்கிய தென் மாகாணம், வடமாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் ஆகிய 5 மாகாணங்களிலும் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவங்கள் இல்லை. இங்கு எல்லா மாவட்டங்களிலும் முஸ்லிம்கள் உள்ளார்கள்.

இந்த மாகாணங்களில் முஸ்லிம்கள் வாழ்கின்ற மிகப் பெரிய பரப்பான பகுதிகளில் கூட இந்தத் தேர்தல் முறைக்கூடாக பிரதிநிதித்துவங்களைப் பெற முடியாமல் உள்ளது. முஸ்லிம்களை பொறுத்தவரையில் பழைய முறைமை சிலபோது சாதகமாக இருக்கலாம்.

முஸ்லிம்களது பிரதிநிதித்துவம் எங்கெங்கு இல்லாமல் போனதோ அந்தந்த மாவட்டங்களில் முஸ்லிம்களது பிரதிநிதித்துவங்களை பெறக்கூடிய சூழ்நிலை இருந்தும் கூட எங்களுக்கு தரப்பட்ட அளவுகோல் (Criteria) படி, அது முடியாமல் போனது. எல்லா மக்களும் ஒரே மாதிரியாக பார்க்கப்பட வேண்டும் என்பதே அந்த அளவுகோல். பொலன்னறுவையில் நிச்சயமாக முஸ்லிம்களுக்கான ஒரு தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டிருக்க முடியும். ஆனால் அங்கு தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்றும், ஜனாதிபதி பிறந்த இடமென்றும் கூறி அங்கு முஸ்லிம்களுக்கான தேர்தல் தொகுதி உருவாக்கப்படவில்லை.

காலி மாவட்டத்தில் 4 வீதத்திற்கும் குறைவான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். எனினும் நகர்ப் பகுதியில் முஸ்லிம்கள் செறிவாக உள்ளனர். அந்தச் செறிவை சாதமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை என்னிடம் முன்வைக்கப்பட்டது. என்றாலும் அந்தத் தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. இவ்வாறு பல இடங்களில் முஸ்லிம்களுக்கான தொகுதிகள் உருவாக்கப்பட்டிருக்கலாம். மாத்தளை, அநுராதபுரம், கேகாலையிலுள்ள மாவனெல்லை பிரதேசத்தில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்கிறார்கள். அங்கும் ஒரு தொகுதியை உருவாக்கியிருக்கலாம்.

இதுவல்லாமல் கண்டியில் அகுரணை தொகுதியொன்றை உருவாக்கியிருக்கலாம். அதற்கு பூஜாபிடியவிலிருந்தும் இணைக்கப்பட வேண்டும். எனவே எங்களுக்கு பல இடங்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது.

முசலியை மையமாகக் கொண்டு ஒரு தேர்தல் தொகுதி உருவாக்கும் படி கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் சனத்தொகை ரீதியாக ஒன்றில் முசலியும் நானாட்டானும் இணைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் முசலியுடன் ஏனைய பகுதிகள் இணைக்கப்பட வேண்டும். இந்தக் கட்டத்தில் நானாட்டானோடு முசலி இணைக்கப்பட்டால் எதிர்காலத்தில் எப்படியும் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்காது.

இந்தப் பின்னணியில் தமிழர்கள் சிபாரிசு செய்த மடு, மாந்தையை மையமாகக் கொண்டு பெரியதொரு தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்துக்களுக்கு பிரதிநிதித்துவம் ஒன்றை பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே இது உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது கவனிக்கத்தக்க விடயம். இது தொடர்பிலும் பாராளுமன்றத்தில் கதைக்க முடியும்.

இதேநேரம் சுமார் 140,000 வடக்கு முஸ்லிம்களுள் ஏறக்குறைய 30 வீதமானவர்கள் வடக்கில் உள்ளார்கள் என்றும் ஏனையவர்கள் தெற்கில் உள்ளார்கள் என்றும் வைத்துக் கொண்டால், ஒரு 8 வருட காலத்தில் வட பகுதிக்கு இம்மக்கள் திரும்பி வருவார்கள் (sunset clause) என்று வைத்துக்கொண்டால் ஆகக் குறைந்தது 2 பிரதிநிதிகளையாவது வடக்கு முஸ்லிம்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும். இந்த விடயத்தையும் பாராளுமன்றத்திற்கூடாக சாத்தியப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

நீண்ட காலமாக அகதிகளாக உள்ள மக்களுக்காக வேண்டி சன்செட் முறையை வேண்ட முடியும். பல நாடுகளில் இது பின்பற்றப்பட்டு வருகின்றது.

எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் கைச்சாத்திடுவதா? இல்லையா? என்கின்ற கட்டத்தில் நான் இருந்த போது சமூக ரீதியான ஆர்வமுள்ள சிலர் இதில் கைச்சாத்திட வேண்டாம் என்றும், அப்போது முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி வெளியே தெரிய வரும் என்றும் கூறினார்கள். உடனடியாக நான் சகல முஸ்லிம் அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டேன். அதன்போது அவர்கள் நீங்கள் கைச்சாத்திடுங்கள், பாராளுமன்றத்தில் நாம் பார்த்துக் கொள்கின்றோம் என்றார்கள்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**றவூப் ஸெய்ன்**

படிமம் மறைந்து கொண்டிருக்கும்போது
மனதில் காற்று வீசுகிறது
மொழிபெயர்க்கப்பட்ட மனிதர்கள்
மொழிபெயர்த்தவற்றுக்குள் மறைகிறார்கள்
- றொபின் பிளேஸர்

# சம்பிக்கவின் மதியுரை: தடியைக் கொடுத்து அடிவாங்கிய தலைவர்கள்

திகன இனவெறித் தாக்குதல்களின் காயங்கள் இன்னும் ஆறவில்லை. அதன் உளவியல் பின்னடைவும் சொத்திழப்பும் இயல்பு வாழ்க்கையை முடக்கியுள்ளது. அது முஸ்லிம்களின் உள்ளத்தில் ஒரு கறுப்பு விம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தாக்குதலின் அழிவு விபரங்களை சேகரித்துக் கொண்டிருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது.

சூத்திரதாரிகளில் சிலர் மெல்ல மெல்ல விடுதலையாகி வருகின்றனர். அரசாங்கம் சுடச் சுட வழங்கிய வாக்குறுதியிலிருந்து விலகத் தொடங்கியுள்ளது. நம்மை நோக்கி ஒரு வெறித் தாண்டவம் வந்தது; ஓய்ந்தது என்று அமைதியடையும் சமூகம் மீளவும் நடந்ததை மறக்கத் தொடங்கியுள்ளது. கஃபா இடிக்கப் பட்டாலும் முஸ்லிம்கள் மூன்று நாட்களுக்கு மேல் கவலைப்பட மாட்டார்கள் என்று



அறிஞர் முஸ்தபா ஸிபாஈ சொன்னது உண்மைப்பட்டு வருகின்றது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம்களின் தலைமைத்துவம் பற்றிய விவாதங்கள் மேற்கிளம்பியுள்ளன. பெப்ரவரி 5 முதல் 10 ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் தொடர்ச்சியாகக் கட்டவிழ்க்கப்பட்ட இனவெறி தாக்குதல்களின் போதே தலைமைகளின் பொறுப்பீனம், கையாலாகாத் தனம் குறித்த காரசாரமான கருத்துக்கள் ஊடகங்களில் வெளிவந்துகொண்டிருந்ததை நாம் நினைவுபடுத்துகிறோம். இந்த விவாதம் இன்னும் முடிவடையவில்லை. முடிவடையவும் கூடாது.

முஸ்லிம்கள் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட சமூகம் அல்ல என்பதையும் அவர்களுக்கு சரியானதோர் தலைமைத்துவம் இல்லை என்பதையும் திகன கலவரம் உணர்த்தியுள்ளது. இனவெறித் தாக்குதல்களை எதிர்கொள்ளல் குறித்து முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்ட எதிரும் புதிருமான நிலைப்பாடுகளும் அணுகுமுறைகளும் தமக்கொரு தலைமை இல்லை என்பதையே உணர்த்தி நின்றது.

சமூக ஊடகங்களில் வெளிவந்த விமர்சனங்களையும் அதிருப்திகளையும் உன்னிப்பாக நோக்கும்போது முஸ்லிம்களுக்கு மூலோபாய ரீதியில் (Strategic) வழிகாட்டத் தக்க, எதிர்கால நோக்குள்ள (Visionary), ஆய்வையும் திட்டமிடலையும் அடிப்படையாகக் கொண்ட தன்னியல்பாக முன்வந்து கருமமாற்றுகின்ற (Pro-active) தலைமையொன்று இல்லை என்பது உறுதியானது. தற்போது தேசியளவில் முஸ்லிம்களின் தலைவர்கள் என்று தம்மை தம்பட்டம் அடிப்பவர்கள் அதற்குரிய தகுதி விதிகள் தம்மிடம் உள்ளனவா என்பதைப் பரிசீலிப்பது மிகவும் நல்லது.

2012 இல் தம்புள்ளை பிரச்சினையுடன் ஆரம்பித்து, ஹலால் சர்ச்சை வழியாக வளர்ந்து, இன்று இனக்கலவரம் ஒன்றுக்கு வழிகோலியுள்ள சூழ்நிலைகள் கடந்த 6 ஆண்டுகளாக படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தன. முஸ்லிம்களுக்கு எதிராக BBS உம் அதன் மடியில் வளர்ந்த பிற தீவிரவாத அமைப்புகளும் பல்வேறு விசப் பிரச்சாரங்களையும் போலிக் குற்றச்சாட்டுக்களையும் சுமத்தி வந்தன.

இக்குறிப்பிட்ட இனவாத சக்திகளுக்கு யாரும் பதிலளிக்க வேண்டியதில்லை என்பது நமது பொதுப் புத்தியாக இருக்கலாம். ஆனால், சிங்களவர்களுக்கு மத்தியில் அச்சத்தை விதைத்து வந்த இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு நாம் அறிவுபூர்வமாக பதிலளித்தோமா? இன்று அவை வைரஸ் போல் பரவி, சிங்கள மக்கள் நம்பும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

திகன கலவரத்திற்கான தூண்டுதல் இன்று நேற்று வெடித்துச் சிதறியதல்ல. ஆறு ஆண்டுகள் அதற்கு அத்திவாரம் இடப்பட்டது. (1990 களிலிருந்தே இது தொடங்கியது.) இக்கால இடைவெளியில் 250 இற்கும் மேற்பட்ட அசம்பாவிதங்கள் பதிவாகியுள்ளன. நாட்டில் இத்தகைய புரளியைக் கிளப்பி, இனங்களுக்கிடையில் அமளி துமளிகளை உருவாக்க முயலும் சக்திகளை எதிர்கொள்ளத் தெரியாமல் பட்டும் படாததுமான சகஜீவன உரையாடல்களில் மாத்திரமே தலைவர்கள் ஈடுபட்டனர். அதுவும் தலைநகரைச் சுற்றி வந்ததே ஒழிய, பிராந்திய ரீதியில் விஸ்தரிக்கப்படவோ தொடர்ச்சியாக இடம்பெறவோ இல்லை.

ஒரு சமூகத்தின் இருப்பு, பாதுகாப்பு, கௌரவம் மற்றும் அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதே தலைமையின் அடிப்படைப் பொறுப்பாகும். இதை விடுத்து அதிகார பீடங்களுக்கு வளையவோ மசிந்து போகவோ தலைமைகள் தயாராக இருக்கக் கூடாது. இறுதிக் கட்டப் போரில் மஹிந்த அரசாங்கம் இழைத்த போர்க் குற்றங்களை இல்லை என்று சாதிக்க ஜெனீவா சென்ற தலைமைகள் உள்ளிட்டு, இன்றைய தலைமைகள் வரை இந்தப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை.



அரசியல்வாதிகளுக்கும் அதிகார பீடங்களுக்கும் ஜால்ரா போடுவதும் பூசி மெழுகுவதும் ஆட்சியிலுள்ளவர்களைத் திருப்திப்படுத்துவதுமே எமது தலைமைகளின் பிரதான அக்கறையாக உள்ளது. இதற்கு அரசியல்வாதிகளோ ஆன்மீகத் தலைவர்களோ விதிவிலக்கில்லை.

தாக்குதல் நடந்து கொண்டிருந்த போது பிரதமர் ரணிலின் அவசர அழைப்பில் அவரைச் சந்தித்த தலைவர்கள் கேட்டு வந்து சமூகத்திற்கு ஒப்புவித்த செய்தி என்ன? முஸ்லிம்களை அமைதிப்படுத்துங்கள் என்பதுதான் ரணிலின் வேண்டுதல். ஏதோ முஸ்லிம்களே இனக்கலவரத்தைத் தூண்டியதுபோல் உள்ளது இந்தக் கூற்று.

மறுநாள், ஒன்றுகூடிய 15 முஸ்லிம் சமூக நிறுவனங்கள் விடுத்த கூ[illegible]

இராணுவம் பொலிஸார் உள்ளிட்டு இனவாதிகள் மூர்க்கமாகவும் ஆக்ரோஷமாகவும் நன்கு திட்டமிட்டு கடைகளையும் பள்ளிகளையும் எரித்துக் கொண்டிருந்த தருணத்தில், முஸ்லிம்களே அமைதியாக இருங்கள் என்றுதான் அறிக்கை கூறியது.

அரசாங்கத் தரப்பால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாது என்றோ, இராணுவத் தரப்பும் காடையர்களின் பக்கம் நின்று செயல்படுகின்றது என்றோ அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் அறிக்கையொன்றை விடுவதற்கு இந்நிறுவனங்களுக்கு துணிவில்லாமல் போனதேன்?

இலங்கையில் இன்று முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனவெறித் தாக்குதல்கள் கடந்த சில ஆண்டுகளாக திட்டமிட்டு, நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படுகின்றன. கங்கொடவில சோம தேரர், ஓமல் பே, ரத்ன தேரர் உள்ளிட்டு BBS இன் ஞானசார, சுமன ரத்ன போன்ற மத குருக்களும் நளின் டி சில்வா, சம்பிக்க போன்ற இனவாத கொள்கைச் சிற்பிகளும் முன்னைய ஆட்சியின் முக்கிய அரசியல்வாதிகளும் இவற்றுக்குப் பின்னணியில் உள்ளனர்.

திகன கலவரத்திற்கு மூல காரணமாயிருந்த அம்பாறை அசம்பாவிதத்திற்கு சிங்களத் தரப்பில் கூறப்பட்ட காரணம் மிக வேடிக்கையானது. தாக்குதலைத் திட்டமிட்டவர்கள் கர்ப்பத் தடை மாத்திரை கொத்து ரொட்டியில் இருந்ததாகக் கூறி, சிங்களம் தெரியாத முஸ்லிம் காசாளரின் வாக்கு மூலத்தை வீடியோ செய்து சமூக வலைத்தளங்களில் பரப்பியதன் மூலம் தாக்குதலுக்கான காடையர் அணியைத் திரட்டினர். சிங்கள ஊடகங்களும் அரசியல்வாதிகளும் ஏன் கல்விமான்களும் கூட இச்சம்பவத்தை எவ்வாறு வியாக்கியானம் செய்தனர் என்பதை நாம் எவரும் உன்னிப்பாக நொக்கவில்லை.

அதாவது, கொத்து ரொட்டி உண்ட ரங்காவிற்கு கர்ப்பத் தடை மாத்திரை இருப்பதாக ஏற்பட்ட சந்தேகமே கலவரத்திற்குக் காரணம் என்று இவர்கள் எல்லோரும் கதை அளக்கிறார்கள். கொத்து ரொட்டிக்குள் இருந்த அதே கோதுமையிலான மா உருண்டை ஒன்று; கர்ப்பத் தடை மாத்திரை தான் என்ற சந்தேகத்தை எடுத்த எடுப்பிலேயே எப்படி ஏற்படுத்தியது என்று நாம் அறிவுபூர்வமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அங்கு இடம்பெற்றது முற்றிலும் ஒரு நாடகம். ஏற்கனவே, முஸ்லிம்களின் உணவகங்களிலும் ஆடை விற்பனை நிலையங்களிலும் சிங்களவர்களின் சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் வகையிலான கருத்தடை மாத்திரைகள், மருந்துகள் சேர்க்கப்படுகின்றன என்று இனவெறியர்கள் பரப்பி வந்த போலிக் குற்றச்சாட்டை அம்பாறை சம்பவத்தில் உண்மையாய் காண்பித்து காஸிம் ஹோட்டலையும் பள்ளிவாயலையும் அடித்து நொறுக்கினர். அவ்வளவுதான்.

ஆனால், ஊடகங்களும் மருத்துவர்களும் இதனை தவறான நம்பிக்கையினால் ஏற்பட்ட மோதல் என்று வியாக்கியானம் செய்தனர். இன்னும் செய்துகொண்டிருக்கின்றனர். இது முகநூல் பயங்கரத்தினால் ஏற்பட்ட மோதல் என்று தலதா அதுகோரல சொல்வதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

ஏற்கனவே இந்நாட்டில் முஸ்லிம்கள் குறித்த [illegible] செயற்கையான அச்ச

ங்களை, போலியான குற்றங்களை கற்பிதம் செய்து பரப்பி வருகின்ற இனவாதிகள், அவற்றின் மூலம் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள இளைஞர்களைக் கிளரச் செய்கின்றனர்.

பேரினவாதத்திற்குப் பின்னால் ஒரு கருத்தியல் தளம் உள்ளது. அதனைக் கட்டமைக்கின்ற கருத்தியலாளர்கள் உள்ளனர். அல்கையிதா, அல் ஜிஹாத் என்றும், அல்லாஹு அக்பர் என்று பத்தகமெழுதி, சிங்கள இளைஞர்களை இனவாதத்தால் வெறியூட்டிய சம்பிக்க, அத்தகைய கொள்கை சிற்பிகளில் ஒருவர்.

சமீபத்திய திகன கலவரத்திற்குப் பின்னால் இருந்தவர் இவர்தான் என்று விமல் வீரவன்ச, வாசுதேச நாணயக்கார, லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்ட பலர் ஆவேசமாகக் குரலெழுப்பியிருந்தனர். லங்கா தீப பத்திரிகை இக்குற்றச்சாட்டுக் குறித்து நேரடியாகவே சம்பிக்கவிடம் கேள்வியெழுப்பியது.

கலவரம் நடந்துகொண்டிருந்தபோதும் அதைத் தொடர்ந்து வந்த நாட்களிலும் இன அமைதி பற்றியும் சட்டத்தின் ஆட்சி பற்றியும் அபரிமிதமாகப் பேசிய ஒரே அரசியல்வாதி இவர்தான். கடந்த வாரம் இவரது அழைப்பின் பேரில் இவரது வாசஸ்தலத்திற்குச் சென்ற முஸ்லிம் தலைவர்கள் முகத்தில் கரிபூசிக் கொண்டு திரும்பியிருக்கிறார்கள்.

"அரசியல் ரீதியிலும் சமய ரீதியிலும் கூட்டுத் தலைமைத்துவமும் சரியான வழிகாட்டல்களும் இல்லாமையே முஸ்லிம் சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளக் காரணம். கிறிஸ்தவ சமூகத்தை பேராயர் கர்தினால் சரியாக வழிநடத்துவது போன்று முஸ்லிம் சமூகத்தையும் வழிநடாத்த முஸ்லிம் சமயத் தலைவர்கள் முன்வர வேண்டும்." இது சம்பிக்க முஸ்லிம் தலைவர்களுக்கு வழங்கிய மதியுரை. சந்திக்கச் சென்றவர்களின் முகத்தில் ஓங்கி விழுந்த அறை. தடியைக் கொடுத்து அடிபட்ட கதை.

இனவஞ்சகமும் சூழ்ச்சியும் உள்ளே இருக்கின்ற நிலையில், சம்பிக்க கூறிய அடுத்த வாக்கியத்தைப் பாருங்கள்.

"ஹலால் விவகாரத்தை திறந்த மனதுடன் பேசி தீர்வு கண்டது போல் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும்." இது அடுத்த மதியுரை. தலையைத் தடவிக் கொண்டே முதுகில் குத்தும் இந்த வஞ்சகத்தை நமது தலைவர்கள் புரிந்துகொள்ளாமை ஆச்சரியமானது.

நாட்டின் இன்றைய கொதிப்பான சூழல், தொடர்ச்சியான இனவாதப் பிரச்சாரம், குற்றவாளிகள் அனைவரும் இதுவரை கைதுசெய்யப்படாமை, இனவாதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் உள்ள உறவு, முஸ்லிம் தலமைகளின் அசமந்தம் இவற்றையெல்லாம் நோக்கும்போது நாம் இன்னொரு இனவெறித் தாக்குதலைக் காத்திருக்கின்றோமா என்ற சந்தேகமே எழுகின்றது.

இத்தனைக்கும் மத்தியில் வருமுன் காப்பது பிராந்தியங்களின் பொறுப்பு, வந்தபின் பார்ப்பது தேசியத்தின் பொறுப்பு என்று அறிக்கை விடுகிறது. இன்னொரு தலைமை.

ஜாஹிலிய்யக் காலத்தில் தைம் என்றொரு கோத்திரம் இருந்தது. அது அன்றைய சமூகத்தில் யாராலும் கவனிக்கப்படுவதில்லை. அரசியல், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கூட்டங்கள் நடைபெறும்போது தைம் கோத்திரத்திற்கு அழைப்பு வருவதில்லை. அவ்வாறு வந்தாலும் கூட்டங்களுக்குச் சென்றாலும் ஆக்கபூர்வமான கருத்துக்கள் எதையும் அவர்கள் சொல்வதில்லை. அத்தி பூத்தாற் போல் ஏதேனும் கருத்துச் சொன்னாலும் கூட அவை எடுபடுவதில்ல. யாரராலும் கவனிக்கப்படாத, எல்லோராலும் புறக்கணிக்கப்படுகின்ற கோத்திரமாகவே அவர்கள் இருந்தனர். இன்றைய இலங்கை முஸ்லிம்களின் நிலையும் தைம் கோத்திரத்தையே நினைவு படுத்துகின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# இஸ்லாம் தொடர்பில் மாற்று மதத்தவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்

கடந்த சில வருடங்களாக விஷேடமாக தம்புள்ள பள்ளி வாசல் பிரச்சினை ஆரம்பித்தது முதல் இன்று நாட்டில் உருப் பெற்றுள்ள மோதல் நிலைமைகள் வரை இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் இலக்கு வைத்து இலங்கையில் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற தாக்குதல்களை இஸ்லாமியப் பார்வையில் நோக்குகையில் அதற்குரிய பிரதான காரணம் மாற்று மதத்தவர் களுக்கு இஸ்லாம் பற்றிய தெளிவுகளை வழங்காமையாகும்.

பல்வேறு இஸ்லாமிய அறிஞர்களும் சிந்தனையாளர்களும் இதன் அவசியம் குறித்து நீண்டகாலமாவே எமக்கு சொற் பொழிவுகளை செய்துவருகின்ற போதிலும், இஸ்லாமிய மத அமைப்புகள் உள்ளிட்ட முஸ்லிம்கள் தங்களுக்குள்ளால் மாத்தி ரம் சில வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றனரே ஒழிய, இந்நாட்டில் வசிக்கின்ற மாற்று மதத்தவர்களுக்கு ஒரு முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பில் இஸ்லாத்தைத் தெளிவு படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்களில்லை. இதன் விளைவையே நாம் அனுபவித்து வருகின்றோம்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சிதைந்து போன இஸ்லாமிய கிலாபத் ஆட்சியின் பின்பு வாழ்ந்த முஸ்லிம்கள் அதன் விளை வாக அரசியல் பொருளாதாரம் மற்றும் இராணுவ ரீதியில் முகம் கொடுத்து வந்த கஷ்டமானதொரு சூழலில் இஸ்லாம் மிக வேகமாக பரவ ஆரம்பித்து, முஸ்லிம்கள் மீண்டும் அல்குர்ஆன், சுன்னா வழிமுறையில் பிரவேசிக்கலானார்கள். இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் மத்தியிலும் இந்த நிலையைக் கண்டு கொள்ள முடிந்தது. இது தவிர இன்னும் பல மாற்று மதத்த வர்கள் இஸ்லாத்தின் பால் கொண்டிருந்த ஈர்ப்பில் இஸ்லாத் தைத் தழுவிக்கொண்டார்கள்.

இவ்வாறானதொரு சூழலில் இஸ்லாம் தொடர்பானதொரு புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்கு சிங்கள மக்களும் முனைப்புக் காட்ட ஆரம்பித்தார்கள். அதற்கொப்பான வகை யில் மேலெழுந்த இஸ்லாமிய எதிர்ப்பலைகள் அதனை குரோத மாகப் பார்த்தார்கள். இதற்கு முன்பு எவ்வகையிலேனும் அல் குர்ஆன் மற்றும் இஸ்லாம் தொடர்பில் எழுதப்பட்ட புத்தகங் களை வாசிப்பதற்கு ஆர்வம் காட்டாத பௌத்த துறவிகள் உள்ளிட்ட பெரும்பான்மையினர் இஸ்லாம் பற்றிய தெளிவு களைப் பெற்றுக்கொள்வதற்கும் அது தொடர்பில் பல்வேறு கருத்துக்களை சமூகமயப்படுத்துவதற்கும் முன்வந்தார்கள்.

எனினும் நாம் தெளிவான முறையில் அறிந்துகொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், இஸ்லாம் தொடர்பில் அவர்கள் எத்தகைய மூலாதாரங்களிலிருந்து புரிதல்களை பெற்றுக்கொண்டார்கள் என்பது பற்றியாகும். சீ.என்.என் மற்றும் பொக்ஸ் போன்ற சியோனிஸ ஊடகங்களுக்கூடாக அல்லது இஸ்லாமோபோபியாவை முதன்மையாகக் கொள்பவர்களிட மிருந்தே பொதுபல சேனா போன்ற அமைப்புக்களும் சில சிங் கள மக்களும் இஸ்லாம் தொடர்பில் பிழையான புரிதலொன்றை பெற்று, இஸ்லாத்தை விமர்சிப்பதற்குக் காரணமாக அமைந் துள்ளது.

உதாரணமாக பொதுபல சேனா உள்ளிட்ட அமைப்புக்களும் சாதாரண சிங்கள சிங்கள மக்களும் ஜிஹாத் குறித்தும் ஹலால் குறித்தும் தெரிந்துகொள்வதற்கு சம்பிக்க ரணவக்க எழுதிய இஸ்லாம் தொடர்பில் திரிபுபடுத்தப்பட்ட விளக்கங்களை சுமந் துள்ள நூலையே வாசிக்கிறார்கள். உலகம் பூராகவும் மிக வேக மாகப் பரவி வருகின்ற இஸ்லாம் குறித்த அச்சத்தின் காரண மாக முஸ்லிம்களை பலவீனப்படுத்தும் நோக்கில் பல பில்லி யன் கணக்கிலான டொலர்கள் அள்ளியெறியப்பட்டு இயங்கி வருகின்ற சக்திகள் அதற்கு உரிய காலத்தில் பசளையிடும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

உதாரணத்திற்கு, இலங்கையில் தான் விரும்பிய எந்தவொரு ஆடை அலங்காரத்தையேனும் அணிந்துகொண்டு பயணிப்ப தற்கான சுதந்திரம் காணப்பட்டது. பெண்கள் குளியல் ஆடையை உடுத்தி கடற்கரையோரத்தில் அல்லது வீதியில் பயணிக்கின்ற போது அதைக் காண்கின்ற இளைஞர்களுக்குள் இயல்பாகவே தோன்றும் ஹோமோன் செயற்பாட்டின் தாக்கத்தை ஒருபோதும் பிரச்சினையொன்றாகக் கொள்ளாத நிலையில், தங்களது முகத்தை மூடிக்கொண்டு வினயமாக வீதியில் பயணிக்கின்ற முஸ்லிம் பெண்களால் நாட்டிற்கும் இனத்திற்கும் பாதிப்பேற் படலாம் என நினைப்பது வெறும் போலி ஜோடிப்பாகும் என்பதோடு, அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை. ஆனால் முஸ்லிம் பெண்களைப் போன்று ஆடை அணிந்து வினயமான முறையில் தமது உடல் தெரியப் பயணிக்கின்ற கத்தோலிக்க சகோதரிகளால் நாட்டிற்கு எவ்விதப் பாதிப்பு களும் ஏற்படுவதில்லை.

தர்க்க ரீதியான அறிவும் (Logic), பொது அறிவும் (General knowledge) மூடி மறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிந்தனை கள் ஒருபோதும் மனிதச் சிந்தனைகள் அல்ல என்பதுடன், அது மனிதனாலேயே உருவாக்கிக்கொள்ளப்பட்ட போலியான கற்ப னைகளாகும். அவர்கள் இஸ்லாத்தை பற்றி எவ்வாறான பார்வையை கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ள இது சிறந்ததொரு சான்றாக உள்ளது.

தொடரும்..

# நிப்பொன் செரமிகா கடையெரிப்பு: கவனத்தை திசைதிருப்பும் முயற்சியா?

• மெய் விளம்பி

### சம்பவம்

நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திஹாரிய, மல்வத்த என்ற இடத்திலுள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான கடை கடந்த 1ஆம் திகதி ஞாயிறன்று அதி காலை தீக்கிரையாக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் கண்டி, ஹன்தானையைச் சேர்ந்த நிஷான்த என்கின்ற சந்தேக நபர் கடந்த 2ஆம் திகதி கைதுசெய்யப்பட்டதுடன், சந்தேகத் தின் பேரில் கடை உரிமையாளர் 3ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 4 ஆம் திகதி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. திஹாரிய மல்வத்தை சிங்கள சகோதரர் ஒருவரது கட்டிடத்தை குத்த கைக்கு பெற்ற முஸ்லிம் ஒருவரின் கடையே தீயினால் எரியுண்டு சேதமடைந்துள்ளது. கடையில் கிட்டத்தட்ட 15 மில்லியன் பெறு மதியான பொருட்கள் இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### பொலிஸ் விசாரணை

தீவைக்கப்பட்ட கடையினுள் இருந்து கேஸ் லைட்டர் ஒன்றும், அந்தக் கடைக்குப் பக்கத்தில் வீழ்ந்து கிடந்த நிலையில் கையடக்க தொலைபேசியொன்றும் பொலி ஸாரினால் மீட்கப்பட்டது. கையடக்கத் தொலைபேசியில் பதிவுசெய்யப்பட்ட இலக் கங்களைப் பரிசோதித்த பொலிஸார், தீ வைப் புச் சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று அதி காலை 5.30 மணியாகும் போதே கையடக்கத் தொலைபேசிக்கு சொந்தக்காரர் யாரென் பதைக் கண்டுபிடித்துள்ளனர். இவர் பற்றிய விசாரணைகளை துரிதப்படுத்திய நிட்டம்புவ பொலிஸ் நிலைய அதிகாரிகள், இந்த நபர் கண்டி, ஹன்தான பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

கடந்த ஞாயிறன்று (01) மாலை வேளை யில் ஹன்தான பிரதேசத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். எனி னும் கையடக்கத் தெலைபேசிக்கு சொந்தக் காரரது முகவரியை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. அதனைத் தொடர்ந்து ஹன்தானை, கண்டி நகர்ப் புறப்பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் சந்தேக நபர் நிஷான்த என்னும் பெயரை யுடையவர் என்பதும் அவர் பழைய ஆடை களை கொண்டு வந்து கண்டி YMBA கட்டி டத்தில் விற்பனை செய்து வருபவர் என்ப தும் தெரிவந்துள்ளது.

நிஷான்த காயமடைந்து வைத்தியசாலை யொன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை அறிந்த பொலிஸார், முத லில் பேராதனை வைத்தியசாலையிலும் அதன் பின்னர் கண்டி வைத்தியசாலையிலும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத் துள்ளனர். ஈற்றில் நிஷாந்த என்ற பெயரை யுடைய ஒருவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை அறிந்துகொண்ட னர்.

இரு கை, கால்கள் உள்ளிட்ட முகப்பகுதி தீக்காயங்களுக்கு உட்பட்டிருப்பதையும், கை கால்களுக்கு பெண்டேஜ் போடப்பட்டுள்ள தையும் பொலிஸார் கண்ணுற்றுள்ளனர். உட னடியாக அந்த இடத்தில் பொலிஸ் அதிகாரி கள் ஈடுபடுத்தப்பட்டு சந்தேக நபரை வைத் தியசாலையில் அனுமதித்தவர்கள் தொடர் பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டது. வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட முகவரியை உறுதியாக தெரிந்துகொள்ள முடியாமல் போயுள்ளது. பொலிஸாரின் இந்த தேடுதல் நடவடிக்கைகள் அனைத்தும் கடந்த 01ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையே முன்னெடுக்கப்பட்டுள்ளது.

### திட்டமிடப்பட்ட செயல்

மறுநாள் (02) திங்கட்கிழமை காலையில் பொலிஸார் நிஷாந்தவின் மனைவியிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர். இதன்போது நிஷாந்தவின் மனைவி பல்வேறு தடவைகளில் கடை உரிமை யாளருடன் தொலைபேசியில் உரையாடியது தெரிய வந்துள்ளது. நிஷாந்தவுக்கும் கடை உரிமையாளருக்கும் இடையில் முன்பிருந்தே தொடர்புகள் இருந்து வந்திருப்பதை பொலி ஸார் [illegible] அறிந்துள்ளனர்.

இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள தகவல் களின் படி, இதுவொரு திட்டமிடப்பட்ட செயல் என தெரிய வந்திருப்பதாக நிட்டம் புவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி திஹாரிய பள்ளிவாசலில் கடந்த 3 ஆம் திகதி இரவு நடைபெற்ற கலந்துரையாடலின் போது தெரிவித்தார். ஏப்ரல் 2 ஆம் திகதி தீப் பற்றிய இடத்தில் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் மேற்கொண்ட தடய விசாரணைகளிலும் இதில் திட்டமிடப்பட்ட சதியொன்றிருப்பது உருதிப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டுள்ள விசாரணை களின்படி, இற்றைக்கு ஒன்றரை மாதங் களுக்கு முன்பு நிப்போன் செரமிக்ஸ் உரிமை யாளரும் நிஷாந்த என்கின்ற நபரும் யக் கலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் சந்தித் துள்ளனர். நிஷாந்த முன்பிருந்தே வியாபார நோக்கில் யக்கலைப் பிரதேசத்திற்கு வந்து செல்பவராக இருந்துள்ளார். நிஷாந்தவுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளும் நிப் போன் செரமிக்ஸ் உரிமையாளர் ஆடை வியாபாரம் செய்வது குறித்தும் உரையாடி யுள்ளார். இவ்வகையிலேயே இருவருக் கிடையிலுமான தொடர்பு ஏற்பட்டுள்ளது. சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் கடந்த 29ஆம் திகதியும் இருவரும் சந்தித்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.




மேலும், கடைக்கு தீயிட்ட நிஷாந்த என்கின்ற நபர் பஸ்ஸிலேயே திரும்பிச் சென்றுள்ளார். அத்தோடு ரதாவடுன்ன பகுதி யில் கடையொன்றில் தவறவிட்டுச் சென்றி ருந்த பணப் பையொன்றும் கண்டெடுக்கப் பட்டிருந்தது. இவர் பஸ்ஸில் பயணித்த நேரம், பணப்பை தவறிய நேரம், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நேரம் ஒன் றோடொன்று தொடர்புபடுவதாலும், கடை உரிமையாளர் ஹுஸைன் என்பவருடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடல் களை வைத்துப் பார்க்கும் போதும் இது திட்டமிடப்பட்ட சம்பவம் என்பது தெளிவா வதாகவும் நிட்டம்புவ பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

சிங்கள முஸ்லிம் பிரச்சினையை மூட்டு வதற்கு சிங்களவர் ஒருவர் கடைக்கு தீயிட் டார் என்பதற்கு எவ்வித ஆதாரங்களுமில் லை என்றும் இது தனிப்பட்ட தேவைகளுக் காக வேண்டி மேற்கொள்ளப்பட்டதொரு சம்பவமே என்றும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

ஏதாவதொரு இடத்தில் ஒருவர் ஒரு சம்ப வத்தைச் செய்தால் அங்கு ஏதாவதொரு தடயத்தை விட்டுச் செல்வார் என்பது குற்ற வியல் விஞ்ஞானத்தின் விதியாகும் என தெரிவிக்கும் நிட்டம்புவ பொலிஸ் நிலை யத்தின் பொறுப்பதிகாரி, அனுபவமற்ற ஒரு வர் பெற்றோல் ஊற்றி லைட்டரால் கொளுத் திய வேளையில் தனது உடம்பையே காயப் படுத்திக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

### பொலிஸாரின் அவசரம்

மல்வத்தை கடையெறிப்புச் சம்பவத்தை மையமாக வைத்து பிரதேசத்தில் இனமோத லொன்று உருவாகக் கூடாது என்பதற்காக வேண்டியும், இந்தச் சம்பவம் பல்வேறு வடிவங்களில் உரையாடப்பட்டு வருவதை தடுப்பதற்காக வேண்டியும் நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தின் கோரிக்கைக்கு அமைய, திஹாரிய பெரிய பள்ளிவாசலில் நிட்டம்புவ பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரியின் தலைமையில் உண்மையைத் தெளிவுபடுத்தும் நிழக்வொன்று கடந்த 3ஆம் திகதி இரவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இங்கு உரையாற்றிய பொலிஸ் பொறுப்பதி காரி, இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டே நாட்களில் பொலிஸார் மேற்கொண்ட விசார ணையை ஒரு கதை வடிவில் சொல்லிக் காண் பித்தார்.

கண்டி, திகன தாக்குதல் சம்பவங்களின் சந்தேக நபர்கள், சூத்திரதாரிகளை கண்டு பிடிப்பதற்கு இவ்வளவு வேகமாக முனைப் புக் காட்டியிருக்காத பாதுகாப்புத் தரப்பு இந்தச் சம்பவத்தில் படுவேகமாகச் செயற் பட்ட விதம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக் கிறது. கருத்தடை மாத்திரை என்றொன்று உலகிலேயே இதுவரையில் கண்டுபிடிக்கப் படாத நிலையில் அம்பாறை காசிம் ஹோட் டலில் ஒரு குடிகாரன் தனக்கு வழங்கப்பட்ட உணவில் கருத்தடை மாத்திரை கலக்கப் பட்டது எனக் கூறிய மறுகணமே அந்தப் பகுதியில் காடையர்கள் அத்துமீறிப் பிரவே சித்து கடைகளையும், பள்ளிவாசலையும் தாக்கினார்கள். இத்தனைக்கும் பொலிஸார் வெறுமனே 500 மீற்றர் தூரத்திலேயே படுத் துக் கிடந்துள்ளனர். இதைக் கண்டும் காணா மலும் இருந்த பொலிஸார் மல்வத்தை கடை யெறிப்பு விவகாரத்தில் தடல் புடலாகவே செயற்பட்டுள்ளது.

உண்மையில் இது பாராட்டப்பட வேண் டிய விடயம்தான். முஸ்லிம் கடை உரிமை யாளர் ஒருவர் சிங்கள சகோதரர் ஒருவருக்கு பணம் கொடுத்து தனது கடையை கொளுத்தி விடுமாறு கோரியுள்ளார் என்றே கதை பரவிக் கொண்டுள்ளது. இந்தச் சம்பவத்தை மேலெ ழுப்புவதன் மூலம் கண்டியில் சிங்களத் தீவிரவாதக் குழுக்கள் அரங்கேற்றிய வன் முறைகளுக்கு பொறுப்புச் சொல்லக்கூடிய வர்கள் மூடி மறைக்கப்படுகிறார்களோ என் றொரு அச்சம் பெரும்பான்மை முஸ்லிம் களுக்குள் வலுத்துள்ளது.

கடை உரிமையாளர் கடந்த காலங்களில் பொதுபல சேனா அமைப்புடன் தொடர்பு களைப் பேணி வந்துள்ளார் என்ற கருத் தொன்றும் முன்வைக்கப்படுகிறது. அப்படி யென்றால் பொதுபல சேனா, கடை உரிமை யாளருக்கு பணம் கொடுத்து நீயே உனது கடையைக் கொளுத்திக் கொள் எனக் கூறி யிருக்கவும் வாய்ப்புள்ளது தானே?

அளுத்கமை இனவாதச் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கடத்தப் பட்டதாக ஒரு செய்தி வெளியானது. அவர் கடன் தொல்லையின் காரணமாக ஒளிந்தி ருந்து விட்டு வெளியே வந்ததாக பின் செய்தி வெளியானது. இந்தச் சம்பவத்தைப் போன்று மல்வத்தை கடையெரிப்புச் சம்பவமும் நடை பெற்றிருக்க வாய்ப்புள்ளது.

கடந்த மாதத்தின் ஆரம்பப் பகுதியில் அம் பாறையில் துவங்கி திகன, தெல்தெனிய, அகுரணை உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்க ளில் பரவிய இனவாதத் தாக்குதல்கள் திஹா ரிய போன்ற பிரதான நகரங்களிலும் இடம் பெறலாம் என்றொரு அச்சம் மக்களிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்தது. பிரதேச மக்கள் கூட்டாக இணைந்து பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதும் இந்தச் சம் பவங்கள் இடம்பெறாமைக்கு ஒரு காரணம் எனக் குறிப்பிடலாம்.

### சமூகப் பொறுப்பு

நாட்டின் கொந்தளிப்பான நிலை மையை சாதகமாகப் பயன்படுத்தி சொந்தப் பிரச்சினை களுக்கு தீர்வு காண முற்படுகின்றவர்களும் உள்ளனர். அப்படியானதொரு சம்பவமாக வும் இது அமைந்திருக்கலாம். எது எப்படி யிருப்பினும், பொலிஸாரின்


(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# சமூக வலைத்தளங்களை சிறந்த நோக்கத்தில் பயன்படுத்தினால் அனைவரும் பயன் பெறலாம்

**பொறியியலாளர் மபீல் பாறூக்**





- **சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் எவ்வளவு வரையறைகள் காணப்படுகின்றன?**

முகநூல், வாட்ஸப் போன்ற சமூக ஊடகங்கள் எமது நாட்டின் சட்டத்தின்படி இயங்குவதில்லை. முகநூல் அமெரிக்க நிறுவனமொன்றுக்குச் சொந்தமாக உள்ளது. எனவே அந்த நாட்டின் சட்டங்களின் கீழேயே அது இயங்குகிறது. அந்த நிறுவனத்திற்கு எமது நாடு அனுமதிப் பத்திரம் வழங்கவில்லை. இணையத்தளத்திற்கு மேலாக இவை இயங்கிக் கொண்டுள்ளன. இதற்கு ஆங்கிலத்தில் Over The Top (OTT) என்பார்கள். இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு OTT என்ற அடிப்படையில் அவற்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது. முகநூல் கணக்கினை ஆரம்பிக்கும் போது நாம் உடன்படுகின்ற நிபந்தனைகளே அவற்றின் சட்டமாகக் காணப்படுகின்றது.

அது எமது நாட்டின் சட்டத்திற்கு ஒத்துப் போகும். அல்லது ஒத்துப் போகாமலும் இருக்கும். சில நாடுகள் முகநூல், வாட்ஸப் போன்ற சமூக ஊடகங்களில் பிரவேசிப்பதை தடை செய்துள்ளன. ஈரான், சீனா, மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகள் இவற்றை தடைசெய்துள்ளன. அந்தந்த நாடுகளே இந்த முடிவுகளை மேற்கொள்கின்றன.

சீனாவில் கீகுவெல் என்னும் குறுந்தகவல் முறை அமுலில் உள்ளது. இந்த சமூக ஊடகங்களை எப்படி சட்டத்திற்குள் உள்வாங்கலாம் என்பது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. Ciber Crime என்றொரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- **முகநூல் பாவனையில் விதிமுறைகளை மீறும் வகையிலான கருத்துக்கள் பதிவிடப்பட்டால் அது தொடர்பில் யாரிடம்? எப்படி முறையிடுவது என்பது பற்றி சற்று குறிப்பிட முடியுமா?**

முகநூல் கணக்கொன்று ஆரம்பிக்கப்படுகின்ற போது என்னென்ன விடயங்கள் செய்யக்கூடாது என்கின்ற தகவல்கள் அங்கு குறிப்பிடப்படும். அவற்றை செய்ய மாட்டோம் என்ற நிபந்தனைக்கு உடன்பட்டே நாம் முகநூலில் பிரவேசிக்கின்றோம். எனவே அந்த விதிமுறைகளை மீறி ஏதேனும் கருத்துக்கள் பதிவிடப்பட்டால் அது குறித்து முறைப்பாடு செய்ய முடியும். அதற்கு சில வழிமுறைகள் உள்ளன.

முகநூலில் உள்ள கருத்துக்கு (Post) பிற்குறிப்பிட (Feedback) முடியும். அதாவது முகநூலில் உள்ள பதிவை வாசித்ததன் பின்னர் அதற்கான Feedback இல் சில வகைப்படுத்தல்கள் (Categories) உள்ளன. அவை 1. Nudity, 2. Vieolence, 3. Harassment, 4. Suicide, 5. Self-injury. 6. Hate speech என்றவாறு குறிப்பிடப்பட்டிருக்கும். நாம் ஒரு பதிவை பார்த்ததன் பின்னர் அது Hate speech என்ற வகையைச் சேர்ந்ததாக இருந்தால் அதைக் குறிப்பிட்டு (click பண்ணி) அனுப்ப வேண்டும். இந்த முறைப்பாடு நேரடியாகவே முகநூல் நிறுவனத்தை சென்றடைகிறது. அங்கு முறைப்பாட்டுக் குழுவொன்று உள்ளது. அவர்கள் இது பற்றி ஆராய்ந்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

மற்றுமொரு முறையாக Notice to Notice என்கின்ற முறை உள்ளது. ஒரு பதிவு தொடர்பில் முறைப்பாடொன்று முன்வைக்கப்படும் பட்சத்தில் முகநூல் அந்தப் பதிவை இட்டவருக்கு அதை மீள எடுக்குமாறு அறிவிக்கும். இதுவே நோடிஸ் டு நோடிஸ் முறையாகும். எனவே இவ்விரண்டு முறைகளுக்கூடாகவும் பதிவுகளுக்கு எதிராக முறைப்பாடு செய்யலாம்.

- **நேரடியாக முகநூல் நிறுவனத்துக்கு முறைப்பாடு செய்வதைப்போன்று இலங்கையிலும் வெறுப்புப் பேச்சுக்கள் உள்ளிட்ட தகாத விடயப்பதிவுகளுக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்குரிய வழிமுறைகள் காணப்படுகின்றனவா?**

நேரடி முறைப்பாடுகள் தவிர இலங்கையிலும் அந்தப் பதிவுகள் குறித்து முறைப்பாடு செய்யும் இடங்கள் காணப்படுகின்றன. முகநூலுடன் இணைந்து பணியாற்றி வருகின்ற நிறுவனமொன்றாக (Srilanka Computer Emergency Readlines Team - SL CERT) காணப்படுகின்றது. www. sl cert.lk எனும் இணையளத்தில் இந்த நிறுவனம் பற்றிய மேலதிக தகவல் களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். BMICH இல் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வருகின்றது. முகநூல் தொடர்பான சகல விட யங்களையும் இந்த நிறுவனமே கையாள்கிறது.

Civil Related, Harrassment Related போன்ற எல்லாவற்றையும் இந்த நிறுவனமே கையாண்டு வருகிறது. எனவே இதுபோன்ற விடயங்களை நாம் இவர்களிடம் முன்வைக்கும் போது அவற்றை நேரடியாகவே முகநூலுக்கு அறிவிக்கும் பணியை இவர்கள் செய்து வருகின்றார்கள். அதற்கான நடவடிக்கையை முகநூல் மேற்கொள்கிறது. மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் Help Desk at goverment இனது 1919 இலக்கத்திற்கு அறிவிக்கவும் முடியும்.

**VPN Proxy என்பது நூறு வீதம் நம்பக்கூடிய சேவையோன்றல்ல. ஒழுங்கான நிறுவன மோன்றுக்கூடாக வாங்கும் போதே அது பாதுகாப்பாக அமைகின்றது. இல்லாவிட்டால் அது பாதுகாப்பில்லை. அதனால் இதைப் பயன்படுத்துவது மிகவும் பிரச்சினைக் குரிய விடயம். இதைப் பயன்படுத்து வதால் வேறு வேறு பிரச்சினைகளுக்கு முகம்கோடுக்க வேண்டியேற்படும்.**




- **போலி முகநூல் பக்கங்களை கண்டுபிடிப்பதற்குரிய வழிகள் ஏதும் உள்ளனவா?**

முகநூல் தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் அதற்கான நிறுவனமே பொறுப்பாக உள்ளது. முகநூலுக்கூடாக முன்னெடுக்கப்படும் ஏதாவது குற்றச்செயல்கள் தொடர்பில் SL Cert நிறுவனத்திற்கூடாக சட்டபூர்வமான முறையில் முகநூல் நிறுவனத்தை அணுகும் போது அது சம்பந்தமான தரவுகளை அவர்கள் தருவார்கள் என்பதே தற்போதைய நிலைமை. இதற்கு நீதிமன்ற உத்தரவு பெறப்பட வேண்டும். அதற்கு உதவி செய்வதே அவர்களது பொதுவான விதிமுறை.

Fake ID வைத்திருப்பது குற்றமாகும். அவ்வாறு வைத்துக் கொள்ளாமல் இருப்பதற்குரிய சில நடவடிக்கைகளும் உள்ளன. போலி முகநூல் பக்கமொன்றை தொடங்கும் போது அதற்கான ஈமெயில் முகவரி, மற்றுமுண்டான ஆரம்ப விடயங்களை தற்பொழுது அவதானிக்கவுள்ளார்கள். இதற்கு ஆங்கிலத்தில் Check list verification எனப்படும். ஒருவர் பிழையான முகவரியில் வந்து அது உறுதிப்படுத்த முடியாமல் போகின்ற போது அது Fake ID ஆக கொள்ளப்படும். எனவே போலி முகநூல் பாவனையாளர்களை முகநூலுக்கு தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் தற்போதைய விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒருவர் ஒரு பதிவை இடும் போது சில நேரம் அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால் இவர் உண்மையான நபரா என்பதை உறுதிப்படுத்திக் கேட்பார்கள். குறுந்தகவலூடாக ஒரு இலக்கத்தை அனுப்பி அதை திருப்பிப் பதிவுசெய்யும் படி கூறுவார்கள். இது போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்படும் போது போலி முகநூல்களை வைத்துக்கொள்ள முடியாமல் போகும்.

- **தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அண்மையில் சமூக ஊடகங்களில் பிரவேசிப்பதை இடைநிறுத்திய போது சிலர் VPN ஊடாக சமூக ஊடகங்களை பயன்படுத்தினார்கள். சமூக ஊடகப் பாவனையில் இதுவொரு ஆரோக்கியமான விடயம் என நீங்கள் கருதுகிறீர்களா?**

Virtual Private Network (VPN) என்பது ஒரு குகைக்குள்ளால் பயணிப்பது போன்றதாகும். அதாவது வெளிப்படையாகச் சென்றால் யார் செல்வதென்பது தெரியும். மறைந்து சென்றால் யாரென்று தெரியாது. இதுவே VPN. இது வழங்கும் சேவையில் வேறு வேறு உள்நோக்கங்களும் இருக்கும். சிலபோது இந்த App தரவுகளை எடுக்கும் வாய்ப்புள்ளது. பாஸ்வேர்ட் போன்ற இன்னோரன்ன விடயங்களை எடுக்கும் சாத்தியங்களும் உள்ளன.

VPN Proxy என்பது நூறு வீதம் நம்பக்கூடிய சேவையொன்றல்ல. ஒழுங்கான நிறுவனமொன்றுக்கூடாக வாங்கும் போதே அது பாதுகாப்பாக அமைகின்றது. இல்லாவிட்டால் அது பாதுகாப்பில்லை. அதனால் இதைப் பயன்படுத்துவது மிகவும் பிரச்சினைக்குரிய விடயம். இதைப் பயன்படுத்துவதால் வேறு வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும். இதைப் பயன்படுத்திய பலபேர் தற்பொழுது பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள் என்பதே உண்மை.

- **சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் ஒழுங்குமுறைகள் குறித்து சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

சமூக வலைத்தளங்களை சிறந்த நோக்கத்தில் பயன்படுத்தினால் அது எல்லோருக்கும் பிரயோசனமாக இருக்கும். சமூக ஊடகங்களை பிழையான வழியில் பயன்படுத்தும் போது அதன் இருப்பு கேள்விக்குறியாக மாறும். ஒவ்வொரு தனிமனிதனும் அதைப் பயன்படுத்த வேண்டிய ஒழுங்குமுறைகளில் பயன்படுத்த வேண்டும். சுமார் 4-6 மில்லியன் மக்கள் இலங்கையில் முகநூல் பாவனையாளர்களாக உள்ளனர். எனவே இவர்கள் இதனை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

- **ஒருவரின் கையடக்கத் தொலைபேசி காணாமல் போகும் பட்சத்தில் அது தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்?**

கையடக்கத் தொலைபேசியொன்றை கொள்வனவு செய்த பின்னர் அதன் Imei இலக்கத்தை குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். தொலைபேசி காணாமல் போகும் பட்சத்தில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்ய வேண்டும். அதன் பின்னர் அந்த முறைப்பாட்டுடன் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும்.

காணாமல் போன தொலைபேசியை வேறு யாராவது பயன்படுத்துகிறார்களா? என்பது குறித்து கண்டுபிடிப்பதற்கு TRC டெலிகொம் நிறுவனத்துடன் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ளும். இது தொடர்பில ஏதும் தகவல் கிடைத்தால் பொலிஸாருக்கு அறிவிக்கும். கையடக்கத் தொலைபேசி என்பது பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டியதொரு பொருள். அதனைப் பாதுகாப்பான முறையில் வைத்துக் கொள்ள சில பாஸ்வேர்ட்களை உபயோகிக்க வேண்டும்.




அறையில் ஆடித்தான் அம்பலத்தில் ஆட வேண்டும் என்று சொல்வார்கள். நான்கு சுவர்களுக்குள்ளால் தமது குறைகளை நிவர்த்தி செய்து விட்டு, பின்னர் சபையில் அரங்கேற்றும்போது பிசகின்றி தமது செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்குத்தான் இப்படிச் சொல்வார்கள். பொது மேடைக்கு வந்த பின்னர்தான் அறைக்குள் என்ன நடந்திருக்கும் என்பதை பொது மக்கள் விளங்கிக் கொள்வார்கள்.

முஸ்லிம்கள் மீதான கண்டித் தாக்குதல்கள் எமது பள்ளிவாசல்கள் இவ்வளவு காலமும் என்ன செய்து வந்திருக்கின்றன என்பதனை அம்பலப்படுத்தி இருக்கிறது. ஐந்து நேரத் தொழுகைக்காக திறந்து மூடப்படும் ஒரு நிறுவனமாக, தத்தமது கொள்கைகளின் கிளைக் காரியாலயங்களாக மட்டுமே பள்ளிவாசல்கள் தொழிற்பட்டு வருகின்றன என்பதனை இந்தச் சம்பவங்கள் நிரூபித்திருக்கின்றன.

முஸ்லிம் சமூகம் தனது ஆரம்ப ஆளுகை மையமாக பள்ளிவாசல்களை போற்றி வருகிறது. தனிமனிதனது விவகாரங்கள் முதல் சமூக, அரசியல் விவகாரங்கள் வரை பள்ளிவாசலின் வழிகாட்டல் இருக்க வேண்டும் என்று அது ஆதங்கப்படுகிறது. தமது அனைத்து விவகாரங்களிலும் பள்ளிவாசலைச் சார்ந்து நிற்பதற்கும், பள்ளிவாசலின் வழிகாட்டலின் கீழ் செயற்படுவதற்கும் சமூகம் தயாராகத்தான் இருக்கின்றது.

ஆனாலும் இந்தத் தலைமைத்துவத்தையோ அல்லது வழிகாட்டியின் வகிபாகத்தையோ வகிக்கும் நிலையில் சமூகத்தின் முதல்நிலை ஆளுகை மையங்களான பள்ளிவாசல்கள் இல்லை என்பது அம்பலத்தில் வந்து ஆடும் போதுதான் அம்பலமாகிறது. இனவாதிகளின் கண்டித் தாக்குதல்களின் போது சமூகம் தன்னால் வகுத்துக் கொண்ட கட்டுக்கோப்பை காப்பதற்கு பள்ளிவாசல்களின் தயவை நாடியபோது சில பள்ளிவாசல்கள் நடந்து கொண்ட விதம் இவ்வளவு காலமும் அறையில் என்ன பயிற்சியை அவர்கள் பெற்றிருக்கின்றார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

முஸ்லிம்களின் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுகின்றன, வாழுமிடங்கள் தாக்கப்படுகின்றன, வாகனங்கள் எரிக்கப்படுகின்றன, வாழ்வைக் கையில் பிடித்துக் கொண்டு பெண்களும் குழந்தைகளும் வயோதிபர்களும் ஓடுகிறார்கள், இனவாத வெறியர்கள் கண் முன்னால் அத்துமீறுகிறார்கள், நாங்கள் அடுத்து என்ன செய்ய வேண்டும் என பல கேள்விகளுடன் பள்ளிவாசல்களை நாடியவர்களுக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது. இந்த நிலையில் தான் பள்ளிவாசல்களை ஆக்கிரமித்து வைத்திருப்பவர்களின் சமூகக் கடப்பாடு அமைந்திருந்தது.

எமது கொள்கையைப் பாதுகாப்பதற்குத் தான் பள்ளிவாசல், அதனைத் தான் எங்களால் பாதுகாக்க முடியும், சமூகத்தைப் பாதுகாக்கின்ற விடயங்களில் எல்லாம் எங்களால் தலையிட முடியாது என்று சொல்லுகின்ற தோரணையில் தான் பள்ளிவாசல்களின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. பொதுவாக வர்த்தக நிலையங்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வர்த்தக சம்மேளனங்களை அமைத்துக் கொள்வதுண்டு. பள்ளிவாசல்கள் பல தாக்கப்பட்ட பின்னராவது பள்ளிவாசல்கள் இணைந்து ஒரு பள்ளிவாசல் சம்மேளனத்தை சந்தர்ப்பத்தைக் கருத்தில் கொண்டேனும் உருவாக்கி சமூகத்தை வழிநடத்த முடியாமல் போனது ஏன்? கட்டுப்படுவதற்கும் வழிப்படுவதற்கும் தயாராக இருந்த இளைஞர் சமூகத்தை இயக்குகின்ற தளமாக பள்ளிவாசல்கள் அமையப் பெறாமல் தடுத்தவர்கள் யார்?


இனியும் திறந்து மூடப்படுகின்ற கொள்கைக் காரியாலயங்களாக மட்டும் பள்ளிவாசல்கள் இயங்குவதில் எந்தப் பயனுமில்லை. சமூகம் கட்டுப்படுவதற்குத் தயாராகி ஒரு வழிகாட்டலை வேண்டி நிற்கின்ற இந்தத் தருணத்திலாவது பள்ளிவாசல்கள் தமது சமூகப் பொறுப்பைச் செய்வதற்கு முன்வராவிட்டால் அந்நியன் தாக்கி ஒழிப்பதற்கு முன்னர் பள்ளிவாசல்கள் சமூகத்தின் ஆளுகை மையங்கள் என்ற பெறுமானத்தை விட்டு சமூகமே ஒதுக்கி விடும் நிலை ஏற்பட நேரிடும். இந்த இடத்தை சமூக நிறுவனங்களோ, அல்லது அரசாங்கத்தின் பொறிமுறைகளோ நிரப்பவும் கூடும்.

அந்தப் பாவத்தைச் செய்த பெரும் பேற்றை பள்ளிவாசல்களை ஆக்கிரமித்து வைத்திருப்பவர்கள் செய்யாமல் இருப்பதில் இருந்து சமூகம் தான் காப்பாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை


# சிறையில் உள்ள முர்ஸியின் உடல் நிலைமை மோசமடைந்து வருகிறது



எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முஹம்மத் முர்ஸி சிறிது சிறிதாக மரணித்து வருகிறார் என்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். முர்ஸிக்குப் போதுமான மருத்துவ வசதிகள் வழங்கப் படாமையே இதற்கான காரணம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். முர்ஸியின் உடல் ஆரோக்கியம் குன்றியமைக்குப் பிரதான காரணம், உடல் ரீதியான சித்திரவதைகளும் உள ரீதியான நெருக்கடியுமே என்று கூறப்படுகின்றது.

எகிப்தின் புரட்சிகர சபைத் தலைவர் மஹா அஸாம் middleast monitor எனும் இணையத்தளத்திற்குக் கருத்து வெளியிடுகையில், ''முர்ஸிக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது. அவரது ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, பாதுகாப்பை உறுதி செய்வதானால் சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட வேண்டும். எகிப்திய சிறைக் கூடங்களில் சித்திரவதை நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்று. தற்போதைய இராணுவ அரசாங்கம் இதனை மிகக் கவனமாக முன்னெடுத்து வருகின்றது'' எனத் தெரிவித்துள்ளார்.

முர்ஸி ஏற்கனவே நீரிழிவினால் பாதிக்கப்பட்டுள்ளார். உயர் குருதி அமுக்கம் மற்றும் நுரையீரல் அழற்சி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார். ஆனால், போதுமான சிகிச்சை வழங்கப் படாமல் தொடர்ந்தும் தோரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீது சுமத்தப்பட்ட போலியான குற்றச்சாட்டுக்கள் எதுவும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

அவருடன் கைதுசெய்யப்பட்ட ஏனைய அரசாங்கத் தலைவர்களுக்கும் சிகிச்சை மறுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முர்ஸி கைது செய்யப்பட்டதிலிருந்து மூன்று முறை இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டுள்ளார்.

## சர்வதேசப் பார்வை



# நெடன் யாஹூ ஒரு பயங்கரவாதி இஸ்ரேல் ஒரு பயங்கரவாத நாடு

### - அர்துாகான் காட்டம்

பலஸ்தீனர்களின் நில தினத்தில் அமைதியாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் சரமாரியாகச் சுட்டதில் 17 அப்பாவிப் பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதோடு, 1500 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இஸ்ரேலின் இந்நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட துருக்கிய பிரதமர் அர்துாகான், இஸ்ரேலியப் பிரதமர் ஒரு பயங்கரவாதி என்றும் இஸ்ரேல் ஒரு பயங்கரவாத நாடு என்றும் கண்டித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காஸா பள்ளத்தாக்கின் எல்லைப் புறத்தில் நடைபெற்ற அமைதி ஊர்வலத்தின் மீது இஸ்ரேலிய இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. 1976 மார்ச் 30 அன்று இஸ்ரேலிய அரசாங்கம் பலஸ்தீனர்களின் நிலங்களை கபளீகரம் செய்து 6 பலஸ்தீனர்களை சுட்டுக் கொன்ற சம்பவத்தை நினைவு கூரும் முகமாக ஒவ்வொரு ஆண்டிலும் நில தினம் என்று அனுஷ்டிக்கின்றனர். இந்நிகழ்வு இடம்பெற்று 42 ஆவது ஆண்டை நினைவுகூரும் முகமாகவே மார்ச் 30 ஆம் திகதி அமைதி ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மே 15 வரை இந்த ஊர்வலங்கள் நடைபெறவுள்ளன. மே 15 பலஸ்தீனர்களின் நக்பா தினமாகும். அன்றுதான் பலஸ்தீன நிலத்தில் சட்டவிரோத இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்டது. இஸ்ரேல் உருவாக்கப்பட்டு எதிர்வரும் மே 15 உடன் 70 ஆண்டுகள் நிறைவடைகின்றன. 1948 மே 15 இல் இஸ்ரேல் பிரகடனம் செய்யப்பட்டபோது 750,000 பலஸ்தீனர்கள் அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

நில தினத்தில் பலஸ்தீனர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 17 பேரை கொலை செய்த இஸரேல் துருக்கியை குறைகாண எந்த அருகதையும் அற்றது என்றும் அர்துாகான் தெரிவித்தார். சிரியாவின் அப்ரின் பிராந்தியத்தின் மீது துருக்கியப் படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை நெடன் யாஹூ விமர்சித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கையிலேயே அர்துாகான் நெடன் யாஹூவை பயங்கரவாதி என்றார்.



''நாங்கள் பயங்கரவாதிகளோடு போரிடுகின்றோம். நீங்களோ அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கிறீர்கள். ஏனெனில், உங்கள் நாடு பயங்கரவாத நாடு. இஸ்ரேலியப் பிரதமர் ஒரு ஆக்கிரமிப்பாளர். மட்டுமன்றி, ஒரு பயங்கரவாதியும் கூட. நாம் எந்த நிலத்தையும் ஆக்கிரமிக்கவில்லை. எந்த மக்களையும் அடக்கியாளவில்லை. பலஸ்தீன மக்களுக்கு நீங்கள் செய்த அநியாயங்களை வரலாறு பதிவுசெய்து வைத்துள்ளது'' என்வும் அர்துாகான் தெரிவித்தார்.

# இந்தியாவில் உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக தலித் மக்கள் ஆர்ப்பாட்டம்



1989 இன் சட்டமொன்றை நீக்கும் வகையில் உச்சநீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பை எதிர்த்து தலித் மக்கள் நாடளாவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் குலக் குழுக்களுக்கு எதிரான உரிமை மீறல் சம்பவங்களோடு தொடர்பான நபர்களை கைதுசெய்வதைத் தடுக்கும் தீர்மானமொன்றை இந்திய உச்சநீதிமன்றம் சமீபத்தில் வெளியிட்டது.


1989 இல் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொண்டு வந்த சட்டத்தின்படி தலித்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டது. ஆயினும் புதிய தீர்ப்பு குற்றவாளிகளுக்கு ஜாமீன் வழங்க அனுமதிக்கின்றது. மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் தலித் அமைப்புகள் இது குறித்து கருத்து வெளியிடுகையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் தலித்களை பாதுகாப்பதற்கு விஷேட சட்ட ஏற்பாடுகள் அவசியம்.

இந்தியாவில் தொடர்ந்தும் தலித்கள் மீது சட்டத்தில் பாகுபாடுகள் காட்டப்படுகின்றன சமீபத்தில் குதிரையொன்றை வைத்திருந்தார் என்ற குற்றத்திற்காக குஜராத் மாநிலத்தின் மேற்குப் புறத்தில் தலித் விவசாயி ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார். மறுநாள் அவரது சடலம் கிராமமொன்றில் இரத்த வெள்ளத்தில் கிடந்தது.

இந்தியாவில் 200 மில்லியனுக்கும் அதிகமான தலித்கள் வாழ்கின்றனர். தேசிய குற்றப்பதிவு திணைக்களத்தின் தகவலின்படி கடந்த காலங்களில் அவர்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. இந்நிலையில், உச்சநீதிமன்றத் தீர்ப்பு தலித்களுக்கு எதிரான குற்றச் செயல்களை அதிகரிப்பதை ஊக்குவிக்கும் என்று மனித உரிமை நிறுவனங்கள் கண்டித்துள்ளன.

நரேந்திர மோடி தலித்களுக்கு எதிரானவர் என்றும் சாதி வெறியை ஊக்குவிப்பவர் என்றும் ராகுல் காந்தி அவரது டுவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளார்.

# சவூதி அறேபிய சுமார் 10,000 பாடசாலைகளை மூடுகின்றது



நாட்டில் இயங்கும் சுமார் 10,000 பாடசாலைகளை அடுத்த கல்வியாண்டில் மூடுவதற்கு சவூதி அறேபியாவின் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. இந்தத் தகவலை thenewkhalij.org எனும் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டில் கல்வியமைச்சு நாட்டில் இயங்கும் பாடசாலைகள் பற்றிய கணிப்பீ டொன்றை மேற்கொண்டது. அதில் அநேகமான பாடசாலைகள் 20 மாணவர்களுடனும், 6 ஆசிரியர்களுடனும் இயங்குவது கண்டறியப்பட்டது. இவற்றைப் பராமரிப்பதற்கு வருடாந்தம் 2 இலட்சம் சவூதி ரியால்கள் செலவாகின்றன.

அதேவேளை, நாட்டிலுள்ள 24,000 அரச பாட சாலைகளில் 9553 பாடசாலைகளில் 100 இற்கும் குறைவான மாணவர்களே கற்கின்றனர். இப்பாடசாலைகளை அடுத்த வருடம் மூடுவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. அரச செலவீனங்களைக் கட்டுப்படுத்துவதற்கே அரசாங்கம் இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நெல்சன் மண்டேலாவின் மனைவி வினி மண்டேலா காலமானார்



தென்னாபிரிக்காவில் நிறவாதம் மற்றும் இனவாதத் திற்கு எதிராகப் போராடி வெற்றியீட்டிய நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி வினி மண்டேலா தனது 81 ஆவது வயதில் காலமானார். நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த வினி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

1936 இல் விஸானா நகரில் பிறந்த வினி, 1953 இல் ஜொஹான்பேக்கிற்கு இடம்பெயர்ந்தார். நீண்ட கால சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்ட வினி, அன்றிருந்த தீவிர இனவாதத்திற்கு எதிராக போராடியதில் பங்குகொண்டவர்.

# காஷ்மீரில் இடம்பெற்று வரும் வன்முறைகளில் அப்பாவி மக்கள் பலர் படுகொலை

இந்திய ஆளுகையின் கீழுள்ள காஷ்மீரில் இந்திய இராணுவம் தொடர்ச்சியாக நிகழ்த்தி வரும் தாக்குதல்களைக் கண்டித்து மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இந்திய இராணுவம் சரமாரியாகச் சுட்டது. இதில் 25 இற்கும் அதிகமான காஷ்மீரியர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த சில மாதங்களாக இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் இராணுவம் நூற்றுக்கணக்கான இளைஞர்களை கைதுசெய்துள்ளது. இவர்கள் பிரிவினைவாத இயக்கத்தோடு தொடர்பானவர்கள் என்பதே இந்திய இராணுவத்தின் குற்றச்சாட்டாகும்.

ஆனால், இராணுவத்திற்கு எதிராக நீதி கோரி ஆர்ப்பாட்டம் செய்யும் அப்பாவி இளைஞர்களையே இந்திய இராணுவம் கைதுசெய்கின்றது. அவர்கள் மீது முறையான வழக்குத் தாக்கல் செய்து விசாரணைகளை மேற்கொள்ளாது தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கின்றது. சிலர் சிறையில் இருக்கும் போதே சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படுகின்றனர்.

கடந்த சில மாதங்களாக இந்திய இராணுவம் இவ்வாறான கைதுநடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போகும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இராணுவம் திட்டமிட்டு வன்முறைச் சம்பவங்களை ஊக்குவிக்கின்றது. பின்பு இளைஞர்களைக் கைதுசெய்து விசாரணையின்றி தடுப்புக் காவல் முகாம்களில் அடைத்து வைக்கின்றது என காஷ்மீர் மனித உரிமை அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதி அறேபியா: பழமைவாதத்திலிருந்து தீவிர மிதவாதத்திற்கு

• முஷாஃபித் அஹ்மத்

மத்திய கிழக்கு அரசியலின் சமீபத்திய செல்நெறிகள் உஸ்மானிய பேரரசின் இறுதி நாட்களை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. கடந்த 9 மாத கால இடைவெளியில் சவூதி ஆட்சியாளர்கள் அறிவித்துக் கொண்டிருக்கும் அதிரடி மாற்றங்கள் பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நவீன சீர்திருத்தங்கள் என்ற பெயரில் பல்வேறு மாற்றங்கள் அங்கு பிரகடனம் செய்யப்படுகின்றன.

நாயிப் இளவரசர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு முஹம்மத் பின் சல்மான் முடிக்குரிய இளவரசராக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இராணுவ, அரசியல், ராஜதந்திர, கலாசாரத் தளங்களில் சவூதியில் இடம்பெற்று வரும் அதிரடி அறிவிப்புக்களும் மாற்றங்களும் குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. 'மொடரேட்' இஸ்லாத்தையே தாம் ஆதரிப்பதாகவும் தீவிரவாத சிந்தனைகளை அடியோடு களைவோம் எனவும் முடிக்குரிய இளவரசர் அறைகூவல் விடுத்துள்ளார்.

வளைகுடா ஒப்பந்த நாடுகளில் ஒன்றான கட்டாரை தனிமைப்படுத்தியது உள்ளிட்டு, அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கான இளவரசரின் விஜயம், யெமன் மீதான தாக்குதல், லெபனான் பிரதமர் ஹரீரியுடனான சந்திப்பு, ஷீஆ தலைவர் முக்ததா சத்ருடனான பேச்சுவார்த்தைகள் என அரசியல் மற்றும் ராஜதந்திர ரீதியில் ஆச்சரியமளிக்கின்ற மாற்றங்கள் பல கடந்த வாரங்களில் இடம்பெற்றன.



சவூதி அறேபியாவில் சிவில் சமூகத்தை கலாச்சார கட்டுக் கோப்புடன் வைத்திருப்பதிலும் ஆன்மீக அடையாளத்தைப் பேணுவதிலும் ஆகக் கூடிய அதிகாரங்களைக் கொண்டிருந்தது முதவ்வா எனப்படும் பொலிஸ் அமைப்பாகும். இன்று முதவ்வா பொலிஸ் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, அதன் நிருவாகம் உள்துறை அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இராணுவத் துறை உயர் அதிகாரிகள் பலர் பதவி நீக்கப்பட்டதோடு, இளவரசருக்கு நம்பிக்கைக்குரிய புதிய முகங்கள் அவ்விடங்களுக்கு நியமிக்கப்பட்டன. உள்ளூராட்சித் தேர்தலில் பெண்கள் களமிறங்கலாம் என அறிவித்த ஆட்சியாளர்கள், 2016 தேர்தலில் மாநகர சபைத் தேர்தலுக்கு பெண்களை அனுமதித்தது. அதன் மூலம் பல பெண்கள் மாநகர சபை மற்றும் நகர சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். தற்போது பிரதித் தொழில் அமைச்சராக ஒரு பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.

பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு இத்தனை காலமும் அனுமதி மறுத்து வந்த ஒரே அறபு நாடு சவூதி அறேபியாவே. தற்போது அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சினிமா கொட்டகைகள் இல்லாத இந்நாட்டில் இவ்வருட நடுப்பகுதிக்குள் 2300 சினிமா கொட்டகைகளைத் திறப்பதற்கும் உல்லாசத் துறையை விஸ்தரிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதேவேளை, அறபுலகின் அழகு ராணிகள் கலந்துகொள்ளும் பெஷன் ஷோ இம்முறை எதிர்வரும் மே மாதம் ரியாதில் நடைபெறவுள்ளது. சவூதியின் வரலாற்றில் இது போன்ற நிகழ்வு இதுவே முதன் முறையாகும்.

விளையாட்டு மைதானங்களைப் பார்வையிடவோ மைதானங்களின் பக்கம் செல்லவோ பெண்களுக்கு இதுவரை அனுமதியளிக்கப்படவில்லை. தற்போது விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளிப்பதற்கு பெண்களை அனுமதிக்கும் தீர்மானமொன்றை இளவரசர் வெளியிட்டுள்ளார். நாட்டின் வடமேற்குக் கரையோரத்தில் சுற்றுலா வலயமொன்றை அமைப்பதற்கும் மன்னர் தீர்மானித்துள்ளார். அங்கு சுதந்திர நடமாட்டத்திற்காக சட்ட திட்டங்கள் தளர்த்தப்படவுள்ளன. நாட்டிய மற்றும் இசை நிகழ்ச்சிகளை அரங்கேற்றும் ஒபெரா ஹவுஸ் அரங்கொன்றை ஸ்தாபித்து சிம்பனி ஒக்ர்ஸ்ட்ரா இசைக்குழுவொன்றை அமைப்பது குறித்தும் ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

அறபு-இஸ்லாமிய உலகில் செல்வாக்குப் பெற்றுள்ள சகோதரத்துவ முகாம் சார் சிந்தனைகளையும் அதன் ஆதரவாளர்களையும் நாட்டிலிருந்து முற்றாகக் களையெடுக்கும் தீவிர வேலைத் திட்டங்களில் சவூதி அறேபியாவின் புலனாய்வுப் பிரிவு களமிறங்கியுள்ளது. பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் இஹ்வானிய சிந்தனை ஆதரவாளர்களை ஏற்கனவே அரசாங்கம் பதவி நீக்கம் செய்து வருகின்றது.

மிதவாத இஸ்லாமே தமது அடையாளம் என்று இளவரசர் பிரகடனம் செய்துள்ளதோடு, நாட்டின் நடுநிலைச் சிந்தனையாளர்கள் பலரை சிறையில் அடைத்துள்ளார். ஷெய்க் ஆயிழ் அல் கர்னி, ஷெய்க் ஸல்மான் அல் அவ்தா உள்ளிட்டு நூற்றுக்கணக்கான இஸ்லாமிய அறிஞர்கள் தீவிரவாதத்தோடு குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் தள்ளப்பட்டுள்ளனர்.

மிதவாத இஸ்லாம் என்று திடீரென இளவரசர் முஹம்மத் அறிவித்தமை பெரிய சர்ச்சையை உருவாக்கியுள்ளது. சவூதி அறேபியா அறபுலகிலேயே மிகுந்த பழமைவாதத்தை (Extreme Orthodex) பின்பற்றி வந்த நாடு. முஸ்லிம் உலகின் தலைமையகம் என்று இரு புனிதஸ்தலங்களின் காவலர்களால் அறிவிக்கப்பட்ட நாடு. எதையும் இஸ்லாத்தின் இரு மூலாதாரங்களான குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதாகக் கூறிக் கொள்ளும் நாடு. இப்போது அதன் சடுதியான கலாசார சீர்திருத்தக் கோட்பாடு, மிதவாத இஸ்லாம் என்று ஒரு புதிய பரிமாணத்தை அறிவிப்பது ஏன்? தீவிரவாத இஸ்லாம், மிதவாத இஸ்லாம் என்று இஸ்லாத்தை வகை பிரிப்பவர்கள் யார்? இப்போது ஆட்சியாளர்கள் பிரகடனம் செய்துள்ள மாற்றங்கள்தான் மிதவாத இஸ்லாமா? இந்தக் கேள்வி பலராலும் பரவலாக எழுப்பப்படுகின்றது.

எடுத்தோம் கவிழ்த்தோம் என்பது போல தீவிர பழமைவாதத்திலிருந்து தீவிர நவீனத்துவத்திற்குத் தாவும் சவூதியின் நகர்வுகள் பெரிய சந்தேகத்தைக் கிளறுகின்றன. மத்திய கிழக்கில் இன்று சவூதியின் நகர்வுகள் ஒரு திரில் வகை நாடகம் போல். எதிர்பாராத காட்சிகளுடன் அரங்கேறுகின்றது.

2017 நவம்பர் முதல் வாரம் அரச குடும்பத்து இளவரசர்கள் பலர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர். ஊழல் மோசடி விசாரணைக்காகவே அவர்கள் கைதுசெய்யப்பட்டதாகக் கூறிய அரசாங்கம் அவர்களிடமுள்ள பில்லியன் டொலர்களைத் திருப்பித் தந்தால் விடுதலை செய்யப்படுவார்கள் என்று நிபந்தனையிட்டது. பலர் இந்த [illegible] இணங்கியதால் விடுதலை செய்யப்பட்டனர்.

பெற்றோலியப் பொருளாதாரம் வேகமாக சரிந்து வருவதனால் காலியாகிக் கொண்டிருக்கும் திறைசேரியை இளவரசர்களின் சொத்துக்களால் நிரப்ப வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இளவரசர் வந்துள்ளார். பெற்றோலியப் பொருளாதாரத்திலிருந்து உல்லாசத் துறை பொருளாதாரத்திற்கு பொருளாதாரத் திட்டத்தை இடம் மாற்றும் '2020 திட்டம்' நடைமுறைக்கு வந்துள்ளது. அதன் எதிரொலிப்பே இராணுவ, பொருளாதார, அரசியல், ராஜதந்திர மாற்றங்களாகும்.

எவ்வாறாயினும், இத்தனை மாற்றங்களும் மிதவாத இஸ்லாம் என்ற பெயரிலேயே இடம்பெறுகின்றது. துருக்கிய பிரதமர் அர்தூகான், இளவரசர் முஹம்மதின் இக்கூற்றை கடுமையாகச் சாடியுள்ளார். இஸ்லாத்தில் மிதவாதம், தீவிரவாதம் என்ற வகை பிரிப்புக் கிடையாது. சவூதி ஆட்சியாளர்கள் மக்களையும் அறபு சமூகங்களையும் பிழையாக வழிநடாத்த முயல்கின்றனர் என அர்தூகான் விமர்சித்துள்ளார்.

'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற பெயரில் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் போர் தொடக்க அமெரிக்காவும் அதன் கூட்டு ஏகாதிபத்திய சக்திகளும் கண்டுபிடித்த ஒரு புதிய சொற்பிரயோகமே மிதவாத இஸ்லாம். 2004 இல் அமெரிக்காவில் பொது அபிப்பிராயத்தை உருவாக்கும் நிறுவனங்களுள் ஒன்றான Rand Co-operation வெளியிட்ட ரேண்ட் அறிக்கையில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்லாத்தை முழு வடிவில் அமுல்படுத்தக் கோருவது தீவிரவாத இஸ்லாம் எனவும், இஸ்லாத்தின் பாரம்பரிய ஆன்மீகப் பரிமானத்தைப் பின்பற்றுவது மிதவாதம் எனவும் இந்த அறிக்கை மறைமுகமாகக் கூறுகின்றது. அதன்படி அரசியல் இஸ்லாத்தை ஆதரிப்பவர்கள் எல்லோரும் தீவிரவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் வகைப்படுத்தப்படுகின்றனர். தீவிரவாத இஸ்லாத்தை ஒழிப்பதற்கு அமெரிக்கா அதன் நேச நாடுகளோடு இணைந்து போராட வேண்டும் எனவும், மிதவாத இஸ்லாத்தை வளர்ப்பதற்கு வொஷிங்டன் ஆதரவளிக்க வேண்டும் எனவும் இந்த அறிக்கை கோருகின்றது.

ஆனால், ரேண்ட் அறிக்கைக்கு மறுதலையாகவே வொஷிங்டன் செயற்பட்டது. அறபு இஸ்லாமிய நாடுகளில் ஆயுத ரீதியான தீவிரவாதக் குழுக்களை திட்டமிட்டு உருவாக்கிய வொஷிங்டன், இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழிக்கும் பயங்கரவாதத்தின் மீதான போரை இந்த ஆயுத இயக்கங்களின் பெயரால் நியாயப்படுத்தியது.

1930 இல் ஸ்தாபிக்கப்பட்ட சவூதி அறேபியாவின் ஆட்சியாளர்கள் பரம்பரையாக கடந்த 88 ஆண்டுகளாக இந்நாட்டை ஆண்டு வருகின்றனர். நாடோடிக் கோத்திரமொன்றின் தலைவரான சஊத் தொடக்கத்தில் திரஇய்யா எனும் சிறிய பகுதியை ஆட்சி செய்து வந்தார். அக்காலத்தில் தோன்றிய முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் ஆட்சியாளர் சஊதுக்கு வழங்கிய ஆதரவினை ஒட்டி திரஇய்யாவின் ஆட்சிப் பிரதேசம் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது.

இருவருக்கும் இடையில் நடந்த திரஇய்யா ஒப்பந்தத்தின்படி அப்துல் வஹ்ஹாபின் கொள்கைகளை விஸ்தரிப்பதற்கு மன்னர் சஊத் ஆதரவளிப்பார் என்றும் பகரமாக நாட்டின் இஸ்லாமிய அறிஞர்கள் ஆட்சியாளர்களுக்கு ஆதரவளிப்பர் என்றும் உடன்பாடு எட்டப்பட்டது. அடுத்த 150 ஆண்டுகளில் நடந்த விஸ்தரிப்பை அடுத்து 1930 இல் சவூதி அறேபிய நாடு உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து பாரம்பரிய பழமைவாதத்தின் அடிப்படையில் கட்டுக்கோப்பான சமூக அமைப்பை தக்கவைக்கும் ஒரு ஆட்சிமுறை நீடித்தது.

(பக்.14)

# பொஸ்பரஸ் கரையினிலே...

## துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 28

## துருக்கியின் ஏற்றுமதிப் பொருளாதாரம்

சர்வதேச நாணய நிதியம் துருக்கியை வளர்ந்து வரும் சந்தைப் பொருளாாரம் என Imeging Market Economy என வர்ணித்துள்ளது. அதற்கான காரணம் 2 என பொருளியலாளர்கள் கூறுகின்றனர். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்ற கடனை முழுமையாகத் திருப்பிக் கொடுத்த நாடு துருக்கி. இரண்டாவது, ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் படிமுறையாக முன்னேறி வரும் நாடு துருக்கியாகும். சில பொருளியலாளர்கள் துருக்கியை அபிவிருத்தி அடைந்த நாடு என அடையாளப்படுத்தியுள்ளனர். வேறு சிலரோ மிக வேகமாக முன்னேறி வரும் பொருளாதார நாடு என துருக்கியை அடையாளப்படுத்துகின்றனர்.

2012 ஆம் ஆண்டிலிருந்து துருக்கியின் முன்னணி வர்த்தகப் பங்காளர்களாக ஜேர்மன், ரஷ்யா, ஈரான் என்பன இருந்து வந்தன. தற்போது துருக்கியின் வணிகப் பங்காளர்2களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. 1995 இல் கைச்சாத்திடப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்துடனான நுகர்வோர் ஒன்றிய ஒப்பந்தம் துருக்கிக்கு பெரும் வாய்ப்பைத் திறந்து கொடுத்தது. அதன் மூலம் துருக்கியின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுக்கான ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான கதவுகள் திறந்தன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் துருக்கிக்கான முதலீடும் அதிகரித்தது. மேலும் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் துருக்கி படிப்படியாக முதலீடுகளை அதிகரித்தது. சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் (The Comman Wealth Indipendance States - CIS) நாடுகளிலும் துருக்கி முதலீடு செய்துள்ளது. இந்நாடுகள் நிதி, பொருளாதாரம், பாதுகாப்பு என்பவற்றின் கூட்டுறவுடன் செயல்படுகின்றது. எல்லைப் பாதுகாப்பு, எல்லை கடந்த குற்றச்செயல்கள் தடுப்பு என்பவற்றிலும் இவை கவனம் செலுத்துகின்றன.

இதிலுள்ள 8 உறுப்பு நாடுகள் சுதந்திர வர்த்தக வலயமொன்றை ஸ்தாபித்துள்ளன. அதன் கீழ் மூன்று அமைப்புக்கள் செயல்படுகின்றன. ஐரோ ஆசிரிய பொருளாதார ஒன்றியம், இணைந்த பாதுகாப்பு அமையம் மற்றும் ஐரோ.ஆசிய நுகர்வோர் ஒன்றியம் என்பனவே அவை. துருக்கி இவ்வமைப்புக்கள் ஊடாக பல்வேறு விதமான பொருளாதாரப் பயன்பாடுகளை அடைந்து வருகின்றது.

மத்திய, கிழக்கு ஐரோப்பா மற்றும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்தின் துருக்கி 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை 2012 இலேயே முதலீடு செய்தது. அவற்றில் 32 வீதமானவை ரஷ்யாவில் மட்டும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இயற்கை வளங்கள் மற்றும் கட்டுமானத் துறைகளில் இம்முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 46 வீதமானவை கருங்கடல் அயல் நாடுகளில் பல்கேரியா, ரோமானியா, போலந்து என்பவற்றிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்நாடுகளில் துருக்கிய கம்பனிகள் இயங்குகின்றன. அவற்றின் கொள்ளளவு 100 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

*தொழில் ரீதியில் ஊழியப்படை: (2017)*

| | |
|---|---|
| விவசாயம் | : 18.6% |
| கைத்தொழில் | : 26.8% |
| சேவைத்துறை | : 54.6% |

*பிரதான கைத்தொழில் :*

ஆடை, உணவுப் பொதியாக்கம், கட்டிட நிர்மாணப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள், வாகன உதிரிப் பாகங்கள், நிலக்கரி, உருக்கு, கடதாசி, பெற்றோலிய உற்பத்திகள்.

வெளிநாட்டு வர்த்தகம் (2017) : 157.1 பில்லியன் அமெரிக்க டொலர் (உலகத் தரவரிசையில் 11 ஆவது நாடு)

*ஏற்றுமதிப் பொருட்கள்:*

தைத்த ஆடைகள், உணவுப் பொதிகள், கைத்தொழில் உற்பத்திகள், போக்குவரத்து சாதனங்கள், ஆடை.

*ஏற்றுமதிப் பங்காளர்கள் :*

| | |
|---|---|
| ஜேர்மன் | : 9.3% |
| ஐக்கிய இராச்சியம் | : 7.3% |
| ஈரான் | : 5.9% |
| இத்தாலி | : 4.8% |
| ஐக்கிய அமெரிக்கா | : 4.5% |
| பிரான்ஸ் | : 4.1% |

உலகிலுள்ள 193 நாடுகளில் 190 நாடுகளுக்கு துருக்கியின் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கருங்கடல் நாடுகளில் செயல்படும் ENCA Tekfan, Gama Ukgen போன்ற கட்டுமானக் கம்பனிகள் முக்கியமானவை. அதேவேளை, பாரிய துருக்கிய கைத்தொழில் குழுமங்களும் இந்நாடுகளில் இயங்குகின்றன. அவற்றுள் Enadulu Efes Group, Vestal Group என்பவை முக்கியமானவை. வெளிநாடுகளில் முதலீடு, வெளிநாடுகளுக்கான கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதி என துருக்கியின் வெளிநாட்டுப் பொருளாதாரம் முன்னேறி வருகின்றது.

உலகிலுள்ள 193 நாடுகளில் 190 நாடுகளுக்கு துருக்கியின் உற்பத்திகள் ஏற்றுமதியாகின்றன. 2007 இல் 115.3 பில்லியனாக இருந்த துருக்கியின் ஏற்றமதிப் பெறுமானம், 2013 இல் 200 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. 2017 இல் அத்தொகை 450 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. ஏற்றுமதித் துறையில் ஏற்பட்டுள்ள பாரிய முன்னேற்றத்தையே இது காட்டுகின்றது. குறிப்பாக துருக்கியின் கைத்தொழில் துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. 1980 இல் 5 வீதமாக இருந்த வெளிநாட்டுப் பொருளாதாரம் 1990 இல் 14 வீதமாகவும் 2005 இல் 43 வீதமாகவும் 2017 இல் 60 வீதமாகவும் உயர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தமானி அறிவித்தலின்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவானோர் விபரம்

| இல | மாவட்டம் | உள்ளூராட்சி சபை | வட்டாரம் |
|---|---|---|---|
| 01. | அம்பாந்தோட்டை மாவட்டம் | அம்பாந்தோட்டை மாவட்டம்<br>அம்பாந்தோட்ட மாநகர சபை | |
| | | 04 கல்வல | மொஹமட் ஹுஸைன் மொஹமட் ரிஸான் |
| | | 05 சிறிபோபுர | மொஹமட் ஷரீப்டீன் பாரிஸ் |
| | | 10 அம்பாந்தோட்ட பஸார் தெரு | காமிலீன் முஹமத் சம்சுதீன் |
| | | பட்டியல் | செய்யது முபாரக் குத்ஸி ஓமர் |
| | | **தங்கல்ல பி.ச** | |
| | | 08 பள்ளிக்குடாவ | மொஹமட் அலாவுதீன் மொஹமட் சிராஸ் |
| | | **அம்பலந்தொட்ட பி.ச.** | |
| | | 15. போலான | மொஹமட் பைஸல் அஹமட் சகூர் |
| | | **திஸ்ஸமஹாராம பி.ச.** | |
| | | 07. கிரிந்த | மொஹமட் லாஹிரீன் மொஹமட் ஹனிபா |

| இல | மாவட்டம் | உள்ளூராட்சி சபை | வட்டாரம் |
|---|---|---|---|
| 02. | கிளிநொச்சி | கிளிநொச்சி மாவட்டம் | |
| | | பூநகரி பி.ச. | |
| | | பட்டியல் | ஹாஜா மொஹமட் கபீர் |

| இல | மாவட்டம் | உள்ளூராட்சி சபை | வட்டாரம் |
|---|---|---|---|
| 03. | | மாத்தறை மாவட்டம்<br>மாத்தறை மா.ச. | மொஹமட் ஸாலி மொஹமட் ஜெஸ்மின் |
| | | 06 கடவீதிய | |
| | | 16 கொட்டுவேகொட | மொஹமட் வாஸிஹ் மொஹமட் வாஹிம் |
| | | பட்டியல் | மொஹமட் உஸ்மான் மொஹமட் ஸபீர் |
| | | | மொஹமட் பாஸுல் அஜ்வாத் |
| | | **வெலிகம ந.ச.** | |
| | | 02. அலுத்வீதிய | மொஹமட் லபீர் மொஹமட் சியாம் |
| | | 03 கல்பொக்க | மொஹமட் ஜபீர் மொஹமட் மின்ஹாஜ் |
| | | பட்டியல் | செய்யது பகீஹுல் ஹிப்ஷி மௌலானா |
| | | | மொஹமட் மஹ்ரூப் அஷ்பாக் அஹமட் |
| | | **அதுரலிய பி.ச.** | |
| | | 07 கொடபிட்டிய | மொஹமட் கமால்டீன் ஸமீம் இக்பால் |
| | | **ஹக்மன பி.ச.** | |
| | | 01 தெனகம மீஅல்ல | மொஹமட் ஹனீபா மொஹமட் பரீஸ் |
| | | **தெவிநுவர பி.ச.** | |
| | | 13 யோனகபுர | செய்னுல் ஆரிப் பௌஸுல் நஸ்மி |
| | | **வெலிகம பி.ச.** | |
| | | 11 வெலிபிட்டிய | மொஹமட் மொஹமட் முஸ்னி |
| | | பட்டியல் | அப்துல் சத்தார் மொஹமட் அஜ்மல் |

| இல | மாவட்டம் | உள்ளூராட்சி சபை | வட்டாரம் |
|---|---|---|---|
| 04. | மொனராகல | மொனராகல மாவட்டம் | |
| | | **மெதகம பி.ச.** | |
| | | 02 கொட்டபோவ | மொஹமட் அலியார் மொஹமட் ரஷீத் |
| | | 09 பக்கினிகஹவெல | மொஹமட் அமானுல்லா மொஹமட் சப்ரி |
| | | பட்டியல் | தாவூத் நளீம் |
| | | **படல்கும்புர பி.ச.** | |
| | | 07 அலுபொத்த | மொஹமட் இப்ராஹீம் மொஹமட் ஹுஸைன் |
| | | 08 தேவதுர | அப்துல்லா மொஹமட் நியாஸ் |
| | | **வெல்லவாய பி.ச.** | |
| | | 05 வெல்லவாய | பாரூக் மொஹமட் ரியாஸ் |

| இல | மாவட்டம் | உள்ளூராட்சி சபை | வட்டாரம் |
|---|---|---|---|
| 05. | இரத்தினபுரி | இரத்தினபுரி மாவட்டம்<br>இரத்தினபுரி மா.ச. | |
| | | 03 மிஹிந்துகம | மொஹமட் பாரூக் மொஹமட் ரம்ஸான் |
| | | 07 இரத்தினபுரி நகரம் மேற்கு | மொஹமட் வபா மொஹமட் ஹஸன் |
| | | 08 இரத்தினபுரி வடக்கு | மொஹமட் இப்ராஹிம் மொஹமட் சியாம் |
| | | **பலாங்கொடை ந.ச.** | |
| | | 06 தெஹிகஸ்தலாவ | மொஹமட் ஜுனைதீன் மாலிக் ஷா |
| | | பட்டியல் | மொஹமட் தாஹிர் மொஹமட் ரூமி |
| | | **எஹலியகொட பி.ச.** | |
| | | 10 கெந்தன்கமுவ | ரியால் கபூர் மொஹமட் ராபி |

| இல | மாவட்டம் | உள்ளூராட்சி சபை | வட்டாரம் |
|---|---|---|---|
| | | பலாங்கொடை பி.ச. | |
| | | 11 தெஹிகஸ்தலாவ | அப்துல் கரீம் மொஹமட் இக்பார் |
| | | கொடகவெல பி.ச. | |
| | | | மொஹமட் புஹாரி மொஹமட் லமீர் |

| இல | மாவட்டம் | உள்ளூராட்சி சபை | வட்டாரம் |
|---|---|---|---|
| 06. | அனுராதபுரம் | அனுராதபுரம் மாநகர சபை | |
| | | 07 ஜெயந்தி பெதஸ | மொஹிதீன் பிச்செ மொஹமட் அன்சார் |
| | | பட்டியல் | ரொஷான் இஸ்மத் புஹாரி |
| | | | முகம்மது ஷஹீத் முகம்மது அல் பாரிஸ் |
| | | மெதவச்சிய பிரதேச சபை | |
| | | பட்டியல் | கே.ஆர் முகம்மது யாசிர் |
| | | ரம்பேவ பிரதேச சபை | |
| | | 01 கதுருகஸ்டமான | சாலிபுகே தையிபு |
| | | 03 இங்கிரிகொல்லாவ | சீனி மொஹமட் மொஹமட் ஷாஃபி |
| | | கெபிதிகொல்லேவ பிரதேச சபை | |
| | | 10 பண்டார உல்பத | நெய்னகே இப்ராஹிமி |
| | | கஹடகஸ்கிலிய பிரதேச சபை | |
| | | 03 மகாகிரிபேவ | நைனா முஹம்மது சாஹித் |
| | | பட்டியல் | அப்துல் மஜீதுகே நஜீம் |
| | | ஹொரொபோதன பிரதேச சபை | |
| | | 03 கபுகொல்லேவ | காதர் சாஹிப் முகமது ரிஸ்வான் |
| | | 05 நிகவேவா | நூர் முஹம்மது ஃபாஸில் |
| | | 08.முக்கரவெவ | ஹனீபா முகம்மது தில்ஷான் |
| | | பட்டியல் | செய்யது முகம்மது அலி |
| | | 04 காம்பிரிகாஸ்வெவ | இஸ்மாயீல் அசுரபூ |
| | | | ஜைனுல் அபீதீன் முஸாதிக் |
| | | | மஹாமத் ரஷீத் மொஹமட் மஹரூப் |
| | | நொச்சியாகம பிரதேச சபை | |
| | | கள்நெவ பிரதேச சபை | ஹுஸன் மொஹமட் ஃபாரூக் |
| | | 09 நேகமா | மம்மது லெப்பே ஹிஜாஸ் |
| | | | ரியால்தீன் ரிஸ்வி மொஹமத் |
| | | இபலோகம பிரதேச சபை | |
| | | 09 கலாவெவ | முஹம்மது ரசீது முஹம்மது நலீம் |
| | | | அப்துல் சத்தார் முஹம்மது அஸ்மீர் மௌலானா |
| | | மிஹிந்தலை பிரதேச சபை | |
| | | 10 கசமடுவ | மின்ஸார் முஹம்மது |
| | | திருப்பேன் பிரதேச சபை | |
| | | 01 நட்சதுடு | ஹம்ஸதீன் முகமத் நாசிம் |
| | | 10 மரியகடவல | யூசுப் முகமத் தௌபீக் |
| | | | அபுசலி அன்வர் சதக் |
| | | கெகிராவ பிரதேச சபை | |
| | | 04 கனேவல்பொல | யாசிம் மரிக்கார் ஹபீல்மரிக்கார் |
| | | 14 உடுருவ | மொஹமத் தாஹிர் அப்துல் காதர் |
| | | | முஹம்மது லெப்பெ ஹிலால்தீன் |
| | | | குலாம் முகீதின் முகம்மது ரபீக் |
| | | திருப்பேன் பிரதேச சபை | |
| | | 02 பாலலுவெவ | ஜபர்தீன் அபீஸ்டீன் |
| | | 03 கடுகெலியாவ | ஹம்சா லெப்பே இர்சாத் |
| | | | பத்திரு லெப்பே அப்துல் ரசீது |

| இல | மாவட்டம் | உள்ளூராட்சி சபை | வட்டாரம் |
|---|---|---|---|
| 07. | காலி | காலி மா நகர சபை | |
| | | 06 தெத்துகொடை | முகமத் சாகிர் முகமத் சிராஜ் |
| | | 08 தங்கெதர | பியாஸ் மொஹமத் லதீஃப் |
| | | 12 கந்தவத்த | அப்துல் காபர் கமல் ஹுசேன் |
| | | **16 தலாபிட்டிய** | முகமத் மவ்ஸூன் முகமட் ரொஷான் |
| | | 17 மகுளுவ | மொஹமட் ஹஊசைன் பவ்ஸுல் நியாஸ் |
| | | 18 மில்லிதுவ | செய்த் முகமத் முகமத் நிலாம் |
| | | **20 கட்டுகொடை** | மொஹமட் அன்சார் அன்வர் |
| | | | முகமத் மஹரூஃப் பாத்திமா ரிஹானா |
| | | | பிஷ்ருல் ஹஃபி மு. நஃப்ரான் ஜிஃப்ரி சாலி |
| | | | முகமத் சவுகத் மொஹமத் இயாஸ் |
| | | அக்மீமன பிரதேச சபை | முகமத் நைசர் முகமத் ரிஃபாய் |
| | | போப் - போதல பிரதேச சபை | |
| | | 07 குருந்துவத்த | முகமத் நயீம் ஹுசைன் கியாஸ் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு சமிக்ஞை கருவிகளை வழங்கும் தன்னார்வ தொழிலை மேற்கொள்ளும்

# கண்டுபிடிப்பாளர் இஸ்பாக்!

• அனஸ் அப்பாஸ்

புத்தளம் கனல் வீதியைச் சேர்ந்த மரத் தளபாட வேலைப்பாடுகள் செய்யும் தொழிலாளியான முஹம்மது இல்யாஸ் அவர்களின் மகன் முஹம்மது இஸ்பாக் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'ஸஹஸக் நிமவும்' கண்டுபிடிப்பாளர் போட்டியில் தேசிய விருது வென்றார். 05 வினாடிகளில் பாதிப்பேதும் இன்றி ஒரு கிலோ கிராம் வெள்ளைப் பூண்டின் தோளை அகற்றும் எளிய பொறிமுறையைக் கண்டுபிடித்த சாதனைக்காகவே அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. சூழலுக்கு பாதிப்பில்லாத இவ் இயந்திரத்துக்கான பதிப்புரிமை சான்றிதழுக்காகவும் அவர் விண்ணப்பித்துள்ளார்.

இவரின் தாயார் ரம்சியாவுக்கு இஸ்பாக்கையும் சேர்த்து நான்கு புதல்வர்கள். இலத்திரனியல் விஞ்ஞானியான சேர் நிகேலோ டெஸ்லாவை தனக்கான வலுவூட்டல் முன்மாதிரியாகக் கொண்ட இஸ்பாக் இன்னும் பல படைப்புகளையும் மேற்கொண்டுள்ளார். தாங்கியில் நீர் நிரம்பியதும் மின்குமிழ் ஒளிர்ந்து அதனை உணர்த்துவதுடன், நீர் விரயத்தைத் தவிர்க்கும் தன்னியக்க ஆளி செயற்பாட்டைக் கொண்ட "தன்னியக்க சமிக்ஞை மின்தாங்கி", மனித வள வேலையை குறைத்து, நேர சிக்கனத்துடன் இயங்கும் நவீன மா-அரி இயந்திரம், கண் பார்வையற்றவருக்கு முன்னால் வரும் வாகனத்தை ஒலி மூலம் சமிக்ஞை கொடுக்கவும், வாகன ஓட்டுனருக்கு ஒளி மூலம் சமிக்ஞை காட்டும் "வெள்ளைப் பிரம்பு பாவிப்போருக்கான உணரு தடி", "இடியப்பம் தயாரிக்கும் கருவி", "சாதாரண கையடக்கத் தொலைபேசி மூலம் (தூர எல்லையின்றி) தொழிற்படும் நீர் பாய்ச்சும் மோட்டர்", "வாகன பாதுகாப்புக் கருவி", "முத்திரை அடிக்கும் கருவி" என அவரது படைப்புக்கள் நீள்கின்றன.

தற்போது 23 வயதான இஸ்பாக் ஒரு மெக்கானிக்கல் இஞ்சினியராக




(பழுது பார்த்தல் பொறியியலாளராக) தான் ஆக வேண்டும் என்ற நோக்கில் குளியாப்பிட்டியில் அமைந்துள்ள வயம்ப பல்கலைக்கழகக் கல்லூரியில் பயின்று வருகின்றார். தனது பாடசாலைக் கல்வியை புத்தளம் சாஹிராக் கல்லூரியில் பயின்றதுடன், உயர்தரக் கல்வியை தொழிநுட்பப் பிரிவில் கற்றமை விசேடமானது.

"எமது அன்றாட வேலைகளை இலகுபடுத்துவதன் மூலம் நேரத்தையும், வீண்விரயத்தையும் குறைக்க முடியும். மேலும் நாட்டின் வளர்ச்சிக்கும் பங்களிக்க அது உதவும்" என தனது கண்டுபிடிப்புக்களுக்கான நோக்கத்தை அவர் குறிப்பிடுகின்றார்.

பல பரீட்சைகள், பரீட்சிப்புகள், ஊண், உறக்கம் தொலைத்து தொழிற்பட்ட பல கடினமான அனுபவங்கள் தான் இவ் அறுவடைகளுக்கான மூலதனம் என அவர் குறிப்பிடுவதுடன் இவற்றைச் சந்திக்காமல், இவற்றை வெற்றி பெறாமல் இலக்கை அடைவது சாத்தியமற்றது என்கின்றார். அதுமட்டுமன்றி, "புத்தாக்கம் ஒன்றை மேற்கொள்ளும்போது, பலரின் பார்வைக் கோணங்களில் இருந்து ஒத்துணர்வால் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் முழுமையான வெற்றி கிட்டும். உதாரணமாக, கண்பார்வை அற்ற ஒருவரின் மனோ நிலையில் இருந்து யோசித்தால் மட்டுமே அவருடைய பிரச்சினை எமக்குப் புரியும். இதே சிந்தனையுடன் பயணிப்பதே ஒரு கண்டுபிடிப்பை மேற்கொள்ள முனையும் புதிய நபருக்கான எனது அறிவுரை" எனக் கூறுகின்றார் இஸ்பாக்.

சமூகத்தில் காணப்படும் பரிதாபத்துக்குரிய வலது குறைந்தோர் குறித்து தான் அதிகம் கரிசனை செலுத்துவதாகக் குறிப்பிடுகின்றார் இஸ்பாக். தனது அடுத்த இலக்குகள் குறித்து அவர் குறிப்பிடுகையில் வலது குறைந்தோரை சுயாதீனமாகச் செயற்பட வைப்பதற்கான புத்தாக்கங்களை மேற்கொள்வது தனதும், இதர கண்டுபிடிப்பாளர்களதும் கடமை என்பதால் அது தொடர்பில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

மாதாந்தம் கொழும்பில் நடைபெறும் கண்டுபிடிப்பாளர் கமிஷனின் கூட்டங்களுக்கு சமுகமளிப்பதன் மூலம் தனது புத்தாக்க திறனை அவர் பட்டை தீட்டி வருவதுடன், இறைவனின் அருளாலும், பெற்றோர், ஆசிரியர்களின் வழிகாட்டலாலும் தான் பெற்ற கண்டுபிடிப்பு ஆற்றலை வளர்ந்துவரும் மாணவர்களுக்கு ஊட்டுவதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றார். குறிப்பாக, புத்தளத்தில் ஸாஹிராக் கல்லூரி, பாத்திமா கல்லூரி, மணல்குன்று முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் தனது திறன் சார்ந்த அனுபவப் பகிரலையும் பயிற்சியையும் வழங்கியுள்ளார். மட்டுமன்றி, தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று பயிற்சிகளை வழங்கி வருகின்றார்.



அத்தோடு நின்றுவிடாமல் இன்று சிறுபான்மை சமூகங்கள் அச்ச சூழலில் எதிர்நோக்கி வரும் பாதுகாப்பு சார்ந்த தேவைகளுக்கு தீர்வுகளை இவர் முன்வைக்கினார். அதாவது, வதிவிட மற்றும் சொத்து பாதுகாப்பு சமிக்ஞை (Home and Property Security Alarm System), அறிவார்ந்த ஸ்மார்ட் வீட்டு பொறிமுறை (Smart Home Intelligent System), இலத்திரனியல் பொறிமுறை மூலமான பிரச்சினை தீர்த்தல் (Problems Solving by Using Electronic System). இவற்றை தனது பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு சேவை அடிப்படையிலும், தன்னார்வ தொழிலாகவும் தற்போது மேற்கொண்டு வருகின்றார் இஸ்பாக்.

அஸ்லம் சேர், ஹஸீனா டீச்சர், நமாஸ் சேர், ஹுமாயூன் சேர், ரில்ஷாட் சேர் ஆகிய ஆசிரியர்களுடன் சேர்த்து முபீஸ், முஸ்தாக், தாஸீன், ஹதீத் ஆகிய நண்பர்களும் இவரது நன்றிக்குரியவர்கள்

இளம் கண்டுபிடிப்பாளர் இஸ்பாக்கின் தேசிய கண்டுபிடிப்பாளர் அடையாள அட்டை இலக்கம் 754294462150001. தொடர்பிலக்கங்கள்: 0719399814 / 0758680164

# நாவலப்பிட்டிய முஸ்லிம்களை பாதுகாத்ததால் கிடைத்த பரிசு

2018 மார்ச்05 ஆம் திகதி கண்டி, தெல்தெனியவில் இருந்து கிரமமாகப் பரவிய இனவெறுப்புத் தாக்குதல்களை அடுத்து முஸ்லிம்கள் சிறு எண்ணிக்கையில் வாழும் ஊர்கள் அச்சத்தில் உறைந்தன. இச்சந்தர்ப்பத்தில் கண்டியை அண்டிய நாவலப்பிட்டிய பிரதேசம் எவ்வித சிறு அசம்பாவிதங்களும் இடம்பெறாது பாதுகாக்கப்பட்ட பின்னணியே இச்சம்பவம்.

நாவலப்பிட்டிய பொஹொட்டுவ கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய மஹிந்தானந்த அளுத்கமகே அவர்கள் கண்டியில் தாக்குதல்கள் ஆரம்பித்த மறுதினமே நாவலப்பிட்டிய முஸ்லிம் தரப்பிலுள்ள மதத் தலைவர்கள், அமைப்புக்கள், குழுக்கள் என்பவற்றுடன், பௌத்த மத தலைவர்கள், வணிக அமைப்புக்கள், சங்கங்களையும் அழைத்து ஒரு வினைத்திறனான கூட்டத்தை நடாத்தினார்.

இதுவரை பாதுகாக்கப்பட்ட மத ரீதியான மதிப்புகளைப் பாதுகாப்பதுடன், நூறு வீதம் இனவாத செயற்பாடுகளில் இருந்து நாவலப்பிட்டிய பகுதியை பாதுகாக்கும் உத்தரவாதமும் அதன் போது எட்டப்பட்டது.

நாவலப்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மதிப்பிற்குரிய R.D. ஆனந்த ராஜபக்ஷ அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 48 விகாரைகள், 40 பள்ளிவாயல்கள் உள்ளன. இதில் ஏராளமான மதஸ்தளங்களுக்கு விஜயத்தை ஆரம்பித்தார் அவர். முஸ்லிம்களை உறுதியாகவும், அச்சமின்றியும் வாழ தான் சட்ட ரீதியாக உதவ இருக்கும் உத்தரவாதத்தையும் வழங்கியதுடன் ஒற்றுமையுடனும், இன நல்லிணக்கத்துடனும் வாழுமாறு பணித்தார்.

பெரும்பாலும் சிங்களவர்கள் வாழும் பிரதேசமொன்றில் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் இருப்பதாகத் தகவல் கிடைத்த நேரம் நள்ளிரவு 1.40 மணி. ஐந்தே நிமிடத்தில் தனது பொலிஸ் பரிவாரங்களுடன் ஸ்தலத்திற்கு விஜயம்



**Mr. R.D. Ananda Rajapaksha**
Chief inspector of police
Officer in&charge, Nawalapitiya.

செய்து மக்களை உற்சாகப்படுத்தி, பீதியினின்றும் பாதுகாத்தார். பின்னர், பிரதேச சபை அரசியல்வாதிகள், அதிகாரிகள், குழுக்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டதுடன் உறுதியான பாதுகாப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். சட்டவிரோத சம்பவங்களின் போது தனது செயற்பாடு குறித்தும் தெளிவாகக் கூறினார். பேச்சுவார்த்தை மூலம் எதையும் தீர்க்கலாம் என்பதை அவர் ஆழமாக நம்புகின்றார்.

இந்த அர்ப்பணிப்புமிகு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு நாவலப்பிடியவில் உள்ள 15 பள்ளிவாயல்களின் தலைமைகளை உள்ளடக்கிய தலைமை நிலையமான நாவலப்பிட்டி மத்திய சபை உள்ளிட்ட அமைப்புக்கள் அவரை சந்தித்து முஸ்லிம் சமூகத்தின் சார்பான நன்றிகளை தெரிவித்து நாட்டின் சட்ட ஒழுங்கைப் பேணவும் சமய நல்லிணக்க வேலைத் திட்டங்களுக்கு அவரோடு கைகோர்த்து செயற்பட எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறோம் என்பதனையும் உறுதியளித்தனர். அத்தோடு நன்றி கூறி எழுத்து வடிவிலும் அறிக்கையொன்றினை முன்வைத்தனர்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த 5 வகையான அடிப்படையில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

1. **மனிதநேயம்:** அனைவரும் மனிதர்களே என்ற எண்ணத்தை மக்கள் உள்ளங்களில் ஆழமாக விதைத்தல்.
2. **மொழி:** மொழி சார்ந்த பரீட்சயத்தை சமூகத்தில் ஏற்படுத்தல்
3. **வரலாறு:** வரலாற்றை கற்றல்
4. **அனைத்து மதங்கள் சம்பந்தமான அடிப்படை அறிவு:** இதனை மதஸ் தலங்கள் மூலம் ஊக்குவித்தல், அதற் கான பரிசுகளை வழங்கல்
5. **பாடசாலைகளை ஒன்றுபடுத்தல்:** சகல இனத்தவரும் ஒரே பாடசாலையில் கற்றல் எனும் கரு.

இப்படி இருந்தும், இவரால் பொறுப்பான போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அரசியல் சுயலாபத்துக்காக மட்டரகமான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இடமாற்றம் செய்வதற்கான எழுத்துமூல நடவடிக்கைகளும் நகர்வுகளும் கூட மேற்கொள்ளப்படுகின்றது. இதனை பிரதேச முஸ்லிம்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர். இது சம்பந்தமான உண்மைகளை வெளிக்கொண்டு வர அப்பிரதேச முஸ்லிம்கள் சார்பில் நம்பத் தகுந்த ஒருவர் எம்மிடம் முறைப்பட்டார்.

இலஞ்ச, ஊழல் தொடர்பற்ற, மது, மாது விவகாரங்களில் ஈடுபடாத ஆனந்த ராஜபக்ஷ போன்ற நேர்மையான பொறுப்பதிகாரிகள் இருக்கும் இதே நாட்டில்தான் சட்டவிரோத செயல்களுக்கு துணைபோகும் பொறுப்பற்றவர்களும் கடமை புரிகின்றனர். நேர்மையான அதிகாரிகளை பாராட்டுவதும், ஊக்குவிப்பதும், பாதுகாப்பதும் நாட்டினதும், சமூகங்களினதும் கடமை!

# உதட்டிலிருக்கும் லிப்ஸ்ரிக் போன்றதா தேசிய நல்லிணக்கம்?

பெண்கள் தங்கள் உதட்டில் பூசியிருக்கும் 'லிப்ஸ்ரிக்' அழியாமல், கழராமல் உணவு உண்பதைப் போலவும் நளினமாகப் பேசுவதையும் போன்ற கதையாகத்தான் நமது நாட்டின் தேசிய நல்லிணக்கம் என்கிற செயல்பாடு இருக்கிறது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், 'சமாதானப் புறா' என்று புகழப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க (தலைவி: தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம்) எனப் பலர் இலங்கை நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த செயற்பட்டு வருகின்றனர்.

நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கையின் முன்னெடுப்பே நாட்டுக்குத் தேவை என்ற வகையில், அமைச்சுகள் சார்ந்தும் அமைப்புகள் சார்ந்தும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், இவற்றினால் முழுமையானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கை இருக்கிறதா; இது நிறைவுக்கு வருமா என்பதுதான் சந்தேகம்.

இந்த நாட்டில், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுவதையும் ஒன்றுக்கு மேற்பட்ட மதங்கள் கடைபிடிக்கப்படுவதையும், ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழ்வதையும் நிதர்சனமாகப் பார்க்கும் ஒருவர், இன, மத, மொழி, சமூக, அரசியல், பொருளாதார காரணிகளால் வரலாற்று ரீதியாக பல்வேறு பிரிவுகள் தேசிய வாழ்விலிருந்து புறந்தள்ளப்பட்டுள்ளன என்பதையும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். எனவே, தேசிய நல்லிணக்கத்தினூடாக சகவாழ்வுக்கு முன்னோடியாக, மும்மொழிக் கொள்கை கடைபிடிக்கப்பட வேண்டும் என்பது தேசியக் கொள்கையாக நமது நாட்டில் கொள்ளப்பட்டு வருகிறது.

தேசிய நல்லிணக்கம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள், பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வுகள், யுத்த காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கான தொழில் உபகரணங்களை வழங்கி மிகக் குறைந்த நிதியுதவிகளை வழங்குதல், கலாசார நிகழ்வுகளை நடத்துதல், புகைப்படக் கண்காட்சிகள், போட்டிகளை நடத்துதல் என்று பட்டியல் நீண்டு செல்கின்றது.

தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க அமைச்சால் தேசிய நல்லிணக்கத்தை பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கும் வேலைத் திட்டத்தைக் கடந்த வருடத்தில் ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார். நாட்டில் மூன்று மொழிப் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இருந்தாலும், 1948ஆம் ஆண்டு பிரித்தானியரிடமிருந்து நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்திருந்தாலும் தமிழ் மக்களால் தமது உரிமைகளுக்காக நடத்தப்பட்ட 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டம், சிங்களம் மட்டும் சட்டம் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட வன்முறைகள், அஹிம்சை ரீதியான சத்தியாக்கிரகங்கள், போராட்டங்கள் எதுவும் பயனற்றுப் போன கதைகள் தான் இருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக வெலிக்கடைக் கலவரம், 83ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் இவையெல்லாம் இலங்கை நாட்டில் வடுக்களாக இருந்த வண்ணம் தான் இருக்கின்றன.

தேசிய ஒருமைப்பாட்டின் அவசியம் உணரப்பட்டாலும், நமது நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நம்பிக்கையும் புரிந்துணர்வும் இதுவரையில் ஏற்பட்டதாகவே தெரியவில்லை. கடந்த மாதத்தில் நடைபெற்ற அம்பாறைச் சம்பவம், அதன் பின்னர் ஏற்பட்ட கண்டிச் சம்பவம் ஆகியன மனிதர்களின் மனங்களில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதனையே காட்டி நிற்கின்றன.

பாடசாலை மாணவர்களைக் கொண்டு முன்னெடுக்கப்படும் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் எதிர்கால சந்ததியினருக்கானது என்ற வகையில்தான் முன்னெடுக்கப்படுகின்றன. நாமெல்லாம் சிந்திப்பது போன்று நம்முடைய காலத்தை இழந்து விட்டோம் பிள்ளைகளாவது வாழ்ந்துவிட்டுப் போகட்டும் என்று நீண்ட பெரு மூச்சை விட்டுவிட்டு சிரமப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்கிரையாகும் சொத்துக்கள் மீதான காப்புறுதி தவக்குலுக்கு முரண் அல்ல

• முஹம்மத் பகீஹுத்தீன்

இன்சூரன்ஸ் எனும் காப்புறுதி முறைமை அடிப்படையில் இஸ்லாம் வரவேற்கின்ற ஆகுமான ஒரு விடயமாகும். இது கழா கத்ர் எனும் விதியை நம்புதல் என்ற கோட்பாட்டுடன் முரண்படுவதில்லை. அவ்வாறே காப்புறுதி தவக்குலுக்கு முரணான ஒரு செயற்பாடும் அல்ல.

பொதுவாக மனித வாழ்க்கையில் மனங் கவரும் விடயங்கள் நிகழ்வது போலவே வெறுப்புக்குரிய நிகழ்வுகளும் நடைபெறும். ஒரு முஸ்லிம் இரு நிலைகளையும் திருப்தியோடு எதிர்கொள்வான். விருப்பத்துக்குரியதாக இருந்தால் இறைவன் ஏற்பாடான விதியை முழுமையான மனத் திருப்தியுடன் ஏற்று நன்றியுடையவனாக இருப்பான். வெறுப்புக்குரிய விடயமாக இருந்தாலும் விதியை திருப்தியோடு ஏற்றுக் கொள்வதுடன் மிகுந்த பொறுமையுடன் கவலைகளை மிகைத்து வாழ்வான்.

ஆனால், வெறுப்புக்குரிய நிகழ்வுகளின் போது திருப்தியுடன் ஏற்று வாழும் முஸ்லிம் அதன் விளைவுகளை தவிர்ப்பதற்கும் அல்லது குறைப்பதற்கும் கண்டிப்பாக பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுவான். விரும்பத்தகாத அந்த நிகழ்வு ஏன் வந்தது என்றும் இனி வராமல் தவிர்க்க எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் சிந்திப்பான். இது விதிக்கு முரண்படுவதல்ல என்பது தெளிவு.

உதாரணமாக, வறுமையை யாரும் விரும்புவதில்லை. ஆனால் அதனை ஒழிப்பதற்கு போராடுவது இயல்பு. பொருளாதார நெருக்கடி, அல்லது, விபத்து விரும்பத்தகாத நிகழ்வுகள். அதன் தீய விளைவுகளை எதிர்த்துப் போராடுமாறே இஸ்லாம் தூண்டுகிறது. இந்த வாழ்க்கைப் போராட்டத்தை மனித இயல்பு பிழையாக காணுவதில்லை.

இந்த வகையில் ஆயுள் காப்புறுதி, சொத்துக்களையும் உடமைகளையும் காப்புறுதி செய்வது போன்ற அனைத்துவகையான காப்புறுதி வகைகளும் இழப்புக்களை குறைப்பதற்கான சிறந்த வழிமுறையாகும். இது நவீன காலத்தில் பரவலாக காணப்படும் இழப்பீடு நடவடிக்கையாக உள்ளது. இதனை அடிப்படையில் இஸ்லாம் தடை செய்யவில்லை. பதிலாக இத்தகைய தற்காப்பு சிந்தனையை தூண்டியுள்ளது.

இன்று வழக்கில் உள்ள காப்புறுதி என்பது ஒரு தனி மனிதன் அல்லது நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் எதிர்காலத்தில் நிகழலாம் என்று கருதும் இழப்பை தவிர்ந்து கொள்வதற்கு மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை காப்புறுதிக் கம்பனிக்கு வழங்குவதன் ஊடாக குறிப்பிட்ட காலத்திற்குள் இழப்புக்கள் வரும்போது கம்பனி அதற்கான இழப்பீட்டை வழங்க வேண்டும் என்று செய்து கொள்ளும் இரு தரப்பு உடன்படிக்கையாகும். இது இஸ்லாமிய சட்டத்தில் எந்த விதத்திலும் தடை செய்யப்பட ஒன்றல்ல.

இந்த ஒப்பந்த அடிப்படையில் செயற்படுவது விதிக்கு முரணும் அல்ல, தவக்குலுக்கு முரணும் அல்ல. குறித்த கம்பனி மீது நம்பிக்கை வைத்தல் என்ற குருட்டு நம்பிக்கையும் அல்ல. காப்புறுதி செய்தாலும் செய்யாவிட்டாலும் இறைவன் ஏற்பாட்டால் நடப்பதை யாரும் தடுக்க முடியாது. அனைத்தும் இறை நாட்டப்படியே நடக்கிறது என்பது முஸ்லிமின் விசுவாசமாகும்.

எனவே, காப்புறுதி ஒழுங்கு அந்த நம்பிக்கைக்கு எதிரானது அல்ல. விரும்பத்தகாத நிகழ்வுகளின் போது நஷ்டங்களை தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு பரஸ்பர உதவி என்ற வகையில் காப்புறுதிக் கம்பனி இணக்கம் கண்ட ஒப்பந்தத்தின் படி நஷ்டத்திற்கு இழப்பீடு தருகிறது. இது ஷரீஆ அங்கீகாரம் பெற்ற கூட்டுப் பராமரிப்பு முறையாகும். உதாரணமாக சுத்தம், சுகாதாரம், சூழல் பராமரிப்பு போன்ற வழிமுறைகள் மனிதனுக்கு நோய் நொடிகளின்றி வாழ்வதற்கான தற்காப்பு வழிகளாகவே இஸ்லாம் அறிமுகம் செய்துள்ளது.

இருந்தும் நோய்கள் வரத்தான் செய்கின்றன. அப்படி நோய் வருவது அல்லாஹ்வின் ஏற்பாடு. அதனை கத்ர் என்று திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளும் மனிதன் நோய்க்கு மருந்து எடுக்காமல் இருப்பதில்லை. அதற்கு தகுந்த வைத்தியரை நாடிச் செல்வது இயல்பானதே. இதன் பொருள் வைத்தியர் மீது நம்பிக்கை வைப்பது அல்ல.

அவ்வாறே வீட்டை கட்டிவிட்டு வாயிற் காப்பாளர் நியமிப்பது அல்லது தற்காலத்தில் cctv கெமராக்களை பொருத்துவது தவக்குலுக்கு முரணானது என யாரும் யோசிப்பதில்லை.

காரணம் தவக்குல் என்பது முடியுமான அனைத்து மனித முயற்சிகளையும் எடுத்த தன் பின்னர் அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டுவதாகும். இவ்வாறுதான் தவக்குல் வைக்க வேண்டும் என நபிகளார் நடைமுறையில் காட்டித் தந்துள்ளார்கள்.

முதலில் ஒட்டகத்தைக் கட்டு, பின்னர் அல்லாஹ்விடம் தவக்குல் வை என இறைதூதர் (ஸல்) வழிகாட்டியுள்ளார்கள். அவ்வாறே நபிகளார் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்தின் போது முடியுமான சகல முயற்சிகளையும் செய்து விட்டுத்தான் இறைவனிடம் மன்றாடினார்கள். பொதுவாக காப்புறுதி முறைகளுள் ஆயுள் காப்புறுதி குறித்து பிழையான புரிதல் காரணமாக அதனை கடுமையாக தடுக்கும் சிந்தனை பரவலாக உள்ளது.

உண்மையில் ஆயுள் காப்புறுதி என்பது கழா கத்ருக்கு முரணான ஒரு ஒப்பந்தமன்று. காப்புறுதியால் விதியை வெல்லவும் முடியாது, ஆயுளை கூட்டவும் முடியாது. ஒரு ஆத்மாவின் நிர்ணயிக்கப்பட்ட ஆயுள் முடிவடைந்தால் மரணத்தை அது சுவைத்தே தீரும். இது எமது ஈமானாகும். இங்கு ஆயுள் காப்புறுதி என்பது மரணித்தவரின் பொறுப்பில் வாழும் வாரிசுகளின் கஷ்டங்களை நீக்குவதற்கும் குறைப்பதற்கும் செய்து கொள்ளும் ஒப்பந்தமாகும்.

ஒப்பந்தத்தின் படி மரணித்தவரின் இழப்பீட்டுப் பங்கை பெறுவதற்கு நம்பிக்கையாளராக நியமிக்கப்பட்டவர் இறந்தவரின் வாரிசுகளுக்கு உரிய முறையில் காப்பீட்டின் மூலம் பெற்ற தொகையை பிரித்துக் கொடுப்பார். இதனைத்தான் ஆயுள் காப்புறுதி என்பர். இந்த முறையும் இஸ்லாம் அங்கீகரித்த இழப்பீட்டு முறையாகும்.


நபி (ஸல்) அவர்கள் ஸஃத் பின் வக்காஸ் (ரழி) அவர்களுக்கு உபதேசம் செய்த போது 'உனது பிள்ளைகளை மக்களிடம் கையேந்தும்படி வாழவிட்டுப் போவதை விட வசதியானவர்களாக விட்டுச் செல்லுதல் சிறந்ததாகும்' என்று கூறிய ஹதீஸ் புஹாரியில் பதிவாகியுள்ளது. இங்கு பிரச்சினை யாதெனில் நடைமுறையில் உள்ள பாரம்பரிய காப்புறுதி கம்பனிகளில் காப்புறுதி செய்வதாகும்.

இது குறித்து அறிஞர்களிடையே மூன்று நிலைப்பாடுகள் உள்ளன. அனைத்து வகையான பாரம்பரிய காப்புறுதி வகைகளும் ஹராம் ஆகும் என பல அறிஞர்கள் கூறுவர். இந்த நிலைப்பாட்டில் உள்ள அறிஞர்கள் தான் அதிகம்.

இன்னும் சிலர் நிர்ப்பந்த சூழ்நிலையில் அனுமதி வழங்கியுள்ளனர். ஹராம் என்று கூறிய பலரும் இலங்கை போன்ற நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் நிர்ப்பந்த சூழ்நிலை என்ற விதிக்கமைய பாரம்பரிய காப்புறுதிக் கம்பனிகளில் இழப்பீடுகளை பெறுவதற்காக ஒப்பந்தம் செய்வதை ஆகும் என்றே கூறியுள்ளனர். இலங்கையின் இன்றைய சூழலில் காப்புறுதி 'சமூக தேவை' என்ற நிலைக்கு மாறியுள்ளதால் அது ஆகும் என்பதில் முரண்பாடுகள் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. மூன்றாவது சாரார் பாரம்பரிய காப்புறுதி ஒழுங்கு அனுமதிக்கப்பட்டதே என்பதை அழுத்தமாகக் கூறியுள்ளனர். இந்தக் கருத்து தற்கால சூழலில் இலங்கைக்குப் பொருத்தமான கருத்தாகும்.

இஸ்லாமிய ஷரீஆ அங்கீகரிக்கும் தகாபுல் காப்புறுதி அமைப்பையே தற்காலத்தில் பெரும்பான்மையான அறிஞர்கள் ஆகும் என்றும் அதற்கான பூரண விளக்கங்களையும் வழங்கி வருகின்றனர். தகாபுல் காப்புறுதி ஒழுங்கு முறை காலத்தின் தேவையை நிவர்த்தி செய்யும் அளவிற்கு இலங்கையில் வியாபிக்கவில்லை. அதேவேளை பாரம்பரிய காப்புறுதி ஒழுங்கில் பங்கு கொள்வது இன்றைய போராட்ட உத்தியாகவும் பேணப்பட வேண்டிய தேவை உள்ளது.

இலங்கையில் தகாபுல் முறை காப்புறுதி நாட்டின் எட்டுத்திக்கிலும் பரவலாக அறிமுகம் இல்லாத நிலை காணப்படுகிறது. முஸ்லிம்களின் சொத்துக்களை [illegible] வேண்டும் என்ற இனவாதிகளின் திட்டமிட்ட நாசகாரச் செயற்பாடுகளை எதிர்த்துப் போராடும் ஒரு உத்தியாக பாரம்பரிய காப்புறுதியை தெரிவு செய்வது காலத்தின் தேவையாகும். அது ஹராம் என்ற வட்டத்தில் வைத்து நோக்குபவர்களும் குறிப்பிட்ட போர்க்கால சூழலில் ஆகும் என்று திறந்து கொடுப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைவதை உணர்த்துவதற்கும் இழப்பீட்டில் நாட்டு மக்கள் யாவரும் பங்கெடுக்கும் வாய்ப்பு ஏற்படுவதால் அவர்களாகவே நாசகார செயல்களை தவிர்ப்பதற்கும் ஏதுவாக அமையலாம். முஸ்லிம்களின் சொத்துக்கள் இனவாதிகளின் திட்டமிட்ட நடவடிக்கையால் தீக்கிரையாகும் போது உடனே உதவுகின்ற



மனிதாபிமான உள்ளங்களை பாராட்டுகின்றோம்.

நாட்டின் நாலாபாகங்களிலும் சிதறி வாழும் முஸ்லிம் குடும்பங்கள் அநேகமாக கைக்கும் வாய்க்குமான நிலையில் தான் வாழ்கின்றனர். விலைவாசி அதிகரித்துள்ள இந்த காலகட்டத்தில் கல்வி, மருந்து, போக்குவரத்து, பிள்ளைவளர்ப்பு, பல்வகை வரிச்சுமைகள் என பல பொருளாதார சுமைகளுடன் வாழும் மக்கள் காப்புறுதிக்காக ஒரு பங்கை ஒதுக்குவது என்பது எதிர்பார்க்க முடியாத ஒன்று.

எனவே, சூழ்நிலையை கருத்திற் கொண்டு முஸ்லிம்களின் சொத்துக்களை காப்புறுதி செய்வதற்காக நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் அல்லது இழப்புகளின் போது சேரும் நிதியிலிருந்தும் இழப்பீடுகளை வழங்கும் அதே நேரம் பாரம்பரிய காப்புறுதியும் செய்து கொடுப்பது காலத்தின் தேவையாகும். இது இன்று பரவி வரும் இனவாதத்திற்கு எதிரான போராட்ட உத்தியுமாகும். ஷரீஆவின் பார்வையில் ஹராம் என்ற கருத்தில் இருப்பவர்களும் இந்தக் காலத்தில் மாத்திரம் தடுக்கப்பட்டதை திறந்து கொடுப்பது குர்ஆனிய சிந்தனைக்கு முரண் அல்ல.

பாரம்பரிய காப்புறுதி ஒழுங்கு சமூகத் தேவை நிமித்தம் ஆகும் என்ற கருத்தை உள்வாங்கும் போது பிரச்சினையே கிடையாது. இது குறித்து கலாநிதி நயீம் அவர்கள் எழுதிய ஆய்வு காத்திரமானது. அவருடைய ஆக்கத்திலிருந்து சில பகுதிகளை கீழே தருகின்றேன் காப்புறுதியை ஆகுமானது என்போர் தமது கருத்துக்கு பின்வரும் ஆதாரங்களை முன்வைக்கின்றனர்:

**1. காப்புறுதி ஒரு புதிய ஒப்பந்த முறைமை.**

வணக்க வழிபாடுகள் போல அல்லாது, உடன்படிக்கைகளில் புதிய ஒப்பந்த முறைமைகள் ஆகுமானது என்பது ழாஹிரி மத்ஹப் தவிர்ந்த ஏனைய அறிஞர்கள் ஏகோபித்து ஏற்றுக் கொண்ட இஸ்லாமிய சட்ட அடிப்படையாகும். ஆகவே, இது குர்ஆனிலோ சுன்னாவிலோ இல்லாத புதிய ஒப்பந்த முறைமை என்ற அடிப்படையில் இது ஹராமானதாக கருதப்பட முடியாது. இன்னும் இதன் மூலம் சமூக பொது நலன் பாதுகாக்கப்படுகின்றது. புதிய ஒப்பந்த வடிவங்கள் இஸ்லாம் தடைசெய்துள்ள வட்டி, தீங்கு, செல்லுபடியற்ற நிபந்தனைகள் என்பவற்றிலிருந்து நீங்கியிருப்பின் அவை ஆகுமான உடன்படிக்கையாக கருதப்படும்.

**2. [illegible] கூலிக்கு அமர்த்துவது போன்றதாகும்.**

ஏனைய பௌதீக ரீதியான உழைப்பு போன்றதொரு தொழில் அல்ல இது. பாதுகாப்புக்காக நிறுத்தப்படுவதன் மூலம் பாதுகாக்கப்படுவோருக்கு, நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படும் அபாயங்களில் இருந்து பாதுகாப்புணர்வையும் மன அமைதியையும் வழங்குகின்றார். அதற்காக கூலி வழங்கப்படுகின்றது. காப்புறுதியிலும் இது போன்று நிகழலாம் என எதிர்பார்க்கப்படும் அபாயங்களில் இருந்து பாதுகாப்பையும், அது குறித்த மனநிம்மதியையும் பெற்றுக் கொண்டு தவணை முறையில் அதற்கு கூலி கொடுக்கப்படுகின்றது. ஆகவே, காப்புறுதி பாதுகாப்புக்காக ஒருவரை அல்லது கம்பனியை கூலிக்கு அமர்த்துவது போன்றதாகும்.

இந்த ஆதாரத்துக்கு எதிராக, சடரீதியற்ற, மானசீக விடயங்களை விற்பது ஆகுமானதல்ல என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. (பில்தாஜி, உகூத் அல் தஃமீன், ப 132.)

பாதுகாப்பு வழங்குதல் வெறுமனே மானசீகமான விடயம் மாத்திரமல்ல. திடீரென நடைபெறும் அத்துமீறல்கள், தாக்குதல்களுக்கு முகம்கொடுத்து அவற்றை முறியடிக்க வேண்டும். ஆனால், இத்தகைய அத்து மீறல்களும் தாக்குதல்களும் நடக்கலாம் அல்லது நடக்காமலும் இருக்கலாம்.

இஸ்லாமிய சட்டத்தில் இன்னும் பல மானசீக அம்சங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக, புத்தகங்களின் பதிப்புரிமை, வியாபார நன்மதிப்பு (Goodwill) என்பன விற்பனை செய்யப்பட முடியும் என முஃதமர் இஸ்லாமியின் பிக்ஹ் மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (சஞ்சிகை, முஃதமர் இஸ்லாமியின் பிக்ஹ் மன்றம், இதழ் 5, பக் 2581, தீர்மானம் 5.) இது போன்றே பாதுகாப்பு வழங்குவதும் ஆகுமானதாகும்.

**3. காப்புறுதி தவறுதலாக நடக்கும் கொலைக்கான நஷ்டஈடு (தியத்) என்ற விடயத்துடன் ஒப்பீடு (கியாஸ்) செய்யப்படுகிறது.**

அதாவது, நபி (ஸல்) தவறுதலாக நடைபெறும் கொலைக்கான தீர்வாக அதற்கான நஷ்டஈட்டை கொலையாளியின் கோத்திரமோ, குடும்பமோ அல்லது இரத்த உறவு பந்தங்களோ (ஆகிலா) வழங்க வேண்டுமென தீர்ப்பு வழங்கியமை ஸஹீஹான அறிவிப்புகளில் வந்துள்ளது.

இது குறிப்பிட்ட கொலையாளியின் நலன் மற்றும் பரஸ்பர உதவி என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்வாகும். இத்தகைய ஒரு முறைமை குறித்த ஒப்பந்தம் மூலமாக நடைபெறுவதே தற்போதய காப்புறுதி முறைமையாகும். தவறுதலாக கொலைசெய்தவருக்கு ஏற்பட்ட தீங்கை தடுப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் விதித்த நலன், விரிவான வகையில் ஒப்பந்தம், பரஸ்பர கொடுக்கல் வாங்கல் மூலமாக நடைமுறைப்படுத்துவதும் பெரும் நலனாகவே இருக்கின்றது என முஸ்தபா அல் ஸர்கா அவர்கள் வாதிக்கின்றார்கள்.

இதன் மூலம் கொலையாளிக்கு ஏற்பட்ட துன்பமொன்று பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் நீக்கப்படுவது போன்று காப்புறுதி செய்தவரின் துன்பமும் நீக்கப்படுகின்றது.

**4. காப்புறுதி முறைமை ஓய்வூதிய சம்பளத்துடன் ஒப்பீடு (கியாஸ்) செய்யப்படுகின்றது.**

ஓய்வூதியத்தில் தொழிலாளர்களின் சம்பளத்தில் சிறிய தொகைப் பணம் மாதாந்தம் ஒதுக்கப்பட்டு வருகின்றது. எந்தளவு தொகை செலுத்தப்படுகிறது, எந்தக் காலம் வரை செலுத்தப்படும்? என்பன போன்ற அம்சங்கள் அறியப்படாமல், ஓய்வூதியம் பெரும் தொகை செலுத்திய தொகைக்கு அதிகமாகவோ குறைவாகவோ அமைய முடியும். இதனை பொது நலனை அடிப்படையாக கருதி சட்ட அறிஞர்கள் ஆகுமானது என தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர். (அல் கரதாகி, அல் தஃமீன் அல் இஸ்லாமி, பக் 30.) ஆகவே, ஓய்வூதியம் ஆகுமானது எனின் காப்புறுதியும் ஆகுமானதாகவே கருதப்பட வேண்டும்.

**5. பொது நலன் (மஸ்லஹா ஆம்மா) காப்புறுதி மூலம் பாதுகாக்கப் படுகின்றது.**

இது இஸ்லாமிய ஷரீஆ அங்கீகரிக்கும் அடிப்படைகளில் ஒன்றாகும். வியாபாரத்துக்கு கிடைக்கும் பாதுகாப்பு உத்தரவாதமானது செல்வத்தைப் பாதுகாக்கும் வழிமுறையாகும்.

**6. காப்புறுதி நவீன கால வியாபாரத்தில் அத்தியவசிய தேவைகளில் ஒன்றாக மாறியுள்ளது.**

'அத்தியவசியங்கள் தடுக்கப்பட்டவற்றை ஆகுமாக்கும்' என்ற இஸ்லாமிய சட்ட விதிக்கமைய காப்புறுதியின்றி பெரிய வியாபார முயற்சிகளில் ஈடுபடுவது அபாயமான நிலையாகும். (அபுல் பழ்ல் ஹானி, அல் தஃமீன் வ அன்வாஉஹு அல் முஆஸரா, தருல் அஸமா, திமஷ்க், 2009, பக் 85.)

**7. காப்புறுதியானது கூலி கொடுத்து அடமானம் வைப்பது போன்றதாகும்.**

அடமானம் தொலைந்து அல்லது அழிந்து போனால் அதற்கு உத்தரவாதம் கிடைக்கின்றது. அபாயங்களில் இருந்து பாதுகாப்பதற்காக ஒரு தொகைப்பணம் அறவிடப்படுகிறது. (ஸஃதி அபூ ஜைப், அல் தஃமீன் பைன அல் ஹழரி வ அல் இபாஹா, தாருல் பிக்ரி, திமஷ்க், ஹி1403, பக் 62-65.)

இலங்கை சிறுபான்மை முஸ்லிம்கள் சமகாலத்தில் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற முக்கியமான சவால்களில் ஒன்று, அவர்களது வியாபார தளங்களையும் உடமைகளையும் பெரும்பான்மை சமூகத்தின் இன, மத தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதாகும். அண்மைக் கால தாக்குதல்களில் பல கோடி நஷ்டத்தை அடைந்திருக்கும் நிலையில், முஸ்லிம்கள் அவர்களது சொத்துக்களையும் உடமைகளையும் பாதுகாப்பது இஸ்லாமிய ஷரீஆவின் ஐம்பெரும் இலக்குகளில் ஒன்றாகவும், அவற்றைப்பாதுகாப்பது அத்தியவசியமானதாகவும் கருதப்படுவதனால், இந்த சூழ்நிலையில் இலங்கை முஸ்லிம்கள் தமது வியாபார சொத்துக்களை காப்புறுதி செய்வதன் மூலம் பாதுகாத்துக் கொள்வது மேற்குறிப்பிட்ட ஆதாரங்களின் அடிப்படையில் ஆகுமான காரியமாக கருதப்பட முடிகின்றது.

மேற்கூறிய ஆய்வினை கலாநிதி நயீம் அவர்கள் பாரம்பரிய காப்புறுதி ஒழுங்கில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்கள் ஈடுபடலாம் என்பதை விளக்கியள்ளார். அவருடைய முழுமையான ஆக்கம் இணைய தளத்தில் உலாவருகிறது.

உண்மையில் பாரம்பரிய காப்புறுதி முறையில் உள்ள குறைபாடுகளை நீக்கி இஸ்லாமிய தகாபுல் ஒழுங்கை இஸ்லாமிய அறிஞர்கள் அறிமுகம் செய்துள்ளார்கள். அறபுலகிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளிலும் அந்த தகாபுல் முறைமை காணப்படுகிறது. இந்த ஆய்வின் நோக்கம் காப்புறுதி சிந்தனை குறித்து மக்களை விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும்.

இன்று வரை, பல தடவைகள் கோடிக் கணக்கான சொத்துக்கள் தீக்கிரையாகியும் கூட அவற்றுக்கான காப்புறுதி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வெளிப்படையில் இன்னும் காணப்பட வில்லை.

அதற்கான பிரதான காரணம் காப்புறுதி என்பது குர்ஆனிய சிந்தனைக்கு முரணான ஒரு நடவடிக்கை என்று பிழையாக விளங்கியிருப்பதாகும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahanam.org

# பாடசாலை இடைவிலகல்

## ஓர் உலகளாவியப் பிரச்சினை



பாடசாலை மாணவர் இடைவிலகல் ஓர் உலகளாவியக் கல்விப் பிரச்சினையாகும். சமகாலத்தில் உலகின் பல நாடுகளில் கல்வியியலாளர்களின் விவாதத்திற்கு உட்பட்டு வரும் பிரச்சினைகளுள் இடைவிலகலும் ஒன்றாகும். கட்டாயக் கல்வி எனப்படும் பிள்ளையின் 6 - 14 வயது வரையுள்ள காலத்தில் முறைசார் கல்வியை நிறைவு செய்யாது பாடசாலையை விட்டு விலகுதல் இடைவிலகல் என வரையறுக்கப்படுகின்றது. (பா. தனபாலன் மற்றும் அன்டனி தவச்செல்வம்)

2013 இல் மாத்திரம் உலகளவில் 59 மில்லியன் பிள்ளைகள் ஆரம்ப நிலைப் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளனர். மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவே பாடசாலை இடைவிலகலில் முதலாவது நாடாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தெற்காசிய நாடான பாகிஸ்தான் அதற்கு அடுத்த நிலையில் உள்ளது. மேற்கு சஹாரா மற்றும் மத்திய ஆபிரிக்காவின் மொத்த மாணவர் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி உள்ளனர். 2000 - 2013 வரை உலகளாவிய ரீதியில் 99 மில்லியனாக இருந்த பாடசாலை இடைவிலகும் மாணவர் தொகை 2014 இல் 59 மில்லியனாகக் குறைந்துள்ளது. (யுனெஸ்கோ 2015)

25 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களே உலகின் மொத்தப் பாடசாலை இடைவிலகலில் 80 சதவிகிதமான பங்கினை வகிக்கின்றனர். இதில் மேற்கு, கிழக்கு, மத்திய ஆபிரிக்க நாடுகள் உள்ளிட்டு தெற்காசியப் பிராந்திய நாடுகளும் அடங்குகின்றன.

கீழைத்தேய நாடுகளில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர் தொகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இன்னொரு புறம் பாடசாலை செல்லும் வயதை அடைந்தும் பாடசாலைகளில் சேராத பிள்ளைகளின் தொகையும் உயர்ந்து செல்கின்றது. போர்ச் சூழல், வறுமை, பெற்றோரின் அக்கறையீனம், பாதுகாப்பான கல்விச்சூழல் இன்மை போன்ற பல்வேறு காரணிகள் மாணவர்களின் இடைவிலகலைத் தூண்டுகின்றன. (Suh, Suhyum, Jingyo 2007)

நைஜீரியாவுக்கு அடுத்ததாக பாடசாலையிலிருந்து இடைவிலகுகின்ற, மொத்தமாகவே பாடசாலையில் சேராத பிள்ளைகளை அதிகம் கொண்ட நாடு பாகிஸ்தானாகும். பாகிஸ்தானில் 28 சதவிகிதமான பிள்ளைகள் மொத்தமாகவே பாடசாலை செல்லவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் தொகை 5.5 மில்லியனாகும். 18 கோடி மக்களைக் கொண்ட பாகிஸ்தானில் இரண்டில் ஒருவர் எழுத்தறிவற்றவர். பெருந்தொகைப் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாமையே மக்களில் கணிசமானோர் எழுத வாசிக்கத் தெரியாமைக்கான காரணமாக இருக்கலாம். (Dick, Delta Coppen 2009, Ameen Izzadeen 2012)

இந்தியாவின் மனித வள அபிவிருத்தி அமைச்சின் தரவுகளின் படி 2015 இல் ஆரம்ப நிலை மாணவர்களில் 4.34 சதவிகிதமானோரும் இரண்டாம் நிலை மாணவர்களில் 17.86 சதவிகிதமானோரும் பாடசாலைக் கல்வியிலிருந்து இடை விலகுகின்றனர். மாநில அடிப்படையில் ஆந்திராவில் இடைவிலகல் வீதம் 26. 83 சதவிகிதமாகவும் தெலுங்கானாவில் 22.32 சதவிகிதமாகவும் மணிப்பூரில் 18 சதவிகிதமாகவும் ராஜஸ்தானில் 8.39 சதவிகிதமாகவும் கர்நாடகத்தில் 2.3 சதவிகிதமாவும் உள்ளது.

பொருளாதாரத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் சுகாதாரத் துறையிலும் மிகப் பின்னடைவான கண்டம் எனக் கருதப்படுவது ஆபிரிக்கா ஆகும். கல்வி அறிவீனமே இதற்குரிய பிரதான காரணமாக முன்வைக்கப்படுகின்றது.

ஆபிரிக்கக் கண்டத்தில் எரித்றியா, எதியோப்பியா, உகண்டா, சோமாலியா போன்ற நாடுகளில் பாடசாலை இடைவிலகல் வீதம் மிக உயர்வாக உள்ளது. அதே போன்று வட ஆபிரிக்க நாடான லிபியா 2012 இற்குப் பின்னர் பாடசாலை இடை விலகும் மாணவர்தொகை அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் சேர்கின்றது.

ஆசியாவில் ஈராக், யெமன், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பெருமளவு மாணவர்கள் மொத்தமாகவே பாடசாலைகளில் சேரவில்லை என்பது ஒருபுறமிருக்க இன்னொரு புறம் ஆரம்ப, இடைநிலைக் கல்வியிலிருந்து விலகும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளது. இந்நாடுகளில் நடைபெற்று வரும் சிவில் யுத்தங்களும் உள்ளூர் இடப்பெயர்வுமே இதற்கான அடிப்படைக் காரணங்களென யுனெஸ்கோ சுட்டிக்காட்டுகின்றது.



# கலாநிதி அய்ஷத் முனீஸா

## மாலைதீவில் இஸ்லாமிய நிதியியல் துறை முன்னோடி

மாலைதீவில் இஸ்லாமிய நிதியியல் துறை நிறுவனர்களில் முக்கியமானதோர் ஆளுமையாகக் கருதுப்படுகின்றவர் கலாநிதி அய்ஷத் முனீஸா. நூறு வீத முஸ்லிம்களைக் கொண்ட தீவுக் கூட்டங்களைக் கொண்ட மாலைதீவில் கலாசார சீர்குலைவுகள் மற்றும் உல்லாசத் துறையின் தாக்கம் அதிகரித்து வருவதாக கூறப்படும் அதேவேளை, இஸ்லாமிய அடையாளத்துடன் கூடிய ஆலோசகர்களும் அங்கு உருவாகி வருகின்றனர். அதற்கு சிறந்த எடுத்துக் காட்டு கலாநிதி அய்ஷத்.

இஸ்லாமிய நிதியியல் தொழிற்துறையின் பல்வேறு பரிமாணங்கள் குறித்த அனுபவம் பெற்றுள்ள இவர், இஸ்லாமிய நிதித்துறையின் ஆலோசகராகவும் ஆய்வாளராகவும் வளவாளராகவும் பயிற்றுவிப்பாளராகவும் விளங்குகின்றார். இஸ்லாமிய நிதித்துறையில் உதவிப் பேராசிரியையாகப் பணியாற்றும் அய்ஷத் ஒரு சட்டத்தரணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாலைதீவில் ஹஜ் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பதில் முக்கிய பங்காற்றியவர் இவர். இஸ்லாமிய நிதிச் சேவையை வழங்கும் பத்திற்கும் மேற்பட்ட நிதி நிறுவனங்களை மாலை தீவில் உருவாக்குவதிலும் இவர் ஆற்றிய பங்களிப்பு முக்கியமானது. மாலைதீவு அரசாங்கத்தின் இஸ்லாமிய நிதித்துறை ஆலோசகராகவும் இவர் விளங்குகின்றார். இஸ்லாமிய நிதிச் சந்தை இவரது ஆலோசனையின் கீழ் செயல்படுவது கவனிப்புக்குரியது. இத்துறையில் கணிசமான நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். அவை மலேசியா, இந்தியா போன்ற நாடுகளிலும் கிடைக்கப் பெறுகின்றன.


மாலைதீவில் பேசப்படும் பிரதான மொழியான திவேகி மொழியில் இஸ்லாமிய நிதித்துறை குறித்து அபரிமிதமாக எழுதியவர்களின் அய்ஷத் முக்கியமானவர். 2010 இல் கோலாலம்பூர் இஸ்லாமிய நிதித் பேரவை நடத்திய உலகளாவிய இஸ்லாமிய நிதித்துறை சார்ந்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களில் இவரும் ஒருவர். இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதித் துறை தொடர்பில் சர்வதேச ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டமைக்காக இவர் பல்வேறு பதக்கங்களை வென்றுள்ளார். மட்டுமன்றி, நிதித்துறைசார் விருதுகளையும் பெற்றுள்ளார்.


மாலைதீவு அரசாங்கத்தினால் வழங்கப்படும் பெண்களுக்கான அதியுயர் விருதான 'ரெஹென்தி' விருதையும் அய்ஷத் வென்றுள்ளார். இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதியியல் துறை அபிவிருத்திக்கு இவர் வழங்கிய பங்களிப்பினை கௌரவிக்கும் முகமாகவே இவ்விருது வழங்கப்பட்டது.

தற்போது மாலைதீவினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இஸ்லாமிய நிதியியலுக்கான மாலைதீவு நிறுவனத்தின் தவிசாளராகவும் உதவிப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார். இது தெற்காசியாவிலுள்ள மிகப் பெரிய நிதி நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

அய்ஷத் சிறிது காலம் மாலைதீவில் இஸ்லாமிய விவகாரங்களுக்கான பிரதியமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். அதன்போது இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் மற்றும் தஃவா துறைசார்ந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் பலவற்றை அவர் முன்னெடுத்துள்ளார்.

# உளப் பிறழ்வின் பண்புகள்



மனிதர்கள் ஆட்படும் மனப் பிறழ்வுகளுக்கு அல்லது உளக் கோளாறுகளுக்கு பல்வேறுபட்ட பண்புகளும் குணங்களும் உள்ளன. நமது ஐம் பொறிகளைத் தாக்கி, ஐம்புலன்களையும் சிதைத்து விடும் இத்தகைய மனக்கோளாறுகள் மாயப் புலன்களை உருவாக்குகின்றன. அங்கீகரிப்புக்கு அப்பாற்பட்ட நடத்தைகளை மனிதனில் ஏற்படுத்துகின்றன. இயற்கைக்கு முரணான செயல்பாட்டு உணர்வுகளை உருவாக்கி எதிரும் புதிருமான மாயங்களை ஏற்படுத்துகின்றன.

மணிக்கூடு சுற்றுகின்ற ஒழுங்கு அடிதலை மாறிச் சுற்றுவது போல் (Clock wise - anti clock wise) நிலைமை தலைகீழாகின்றது. இத்தகையோரின் நடத்தைகள் தடுமாறுகின்றன.

ஒரு பொருள் கண்பார்வைக்குச் சரியானதாகவே இருக்கும். ஆனால் மாயம் நிறைந்த மனதில் அது தவறான, ஐயப்பாடான காட்சியை உருவாக்கும். சற்று முன்னர் ஏதோ ஒரு பொருளைத் தான் கண்டதாக, அல்லது ஒரு நபர் தன் கண்முன்னே வந்து நின்றதாக உளக் கோளாறுக்கு உட்பட்டவர் கூறலம். இதை கற்புல மாயம் அல்லது பார்வை மாயம் என்பர்.

இவ்வாறு மாயப் புலன்களை உருவாக்கும் சிசப்ரோனியா (Schizophrania) முதல் சாதாரண Phobia disorder வரை மனிதனைப் பாதிக்கும் நூற்றுக்கணக்கான உளக் கோளாறுகள் காணப்படுகின்றன. அனைத்தும் ஒரே வகையானவை அல்ல. அவற்றுக்கிடையே வேறுபாடுகளும் தராதரங்களும் உள்ளன.

**மனக் கோளாறுகளை வகைப்படுத்தல்**

எந்தவொரு அறிவுப் புலனையும் முழுமையாகவும் தெளிவாகவும் புரிந்துகொள்வதற்கு அதனைத் தொகுத்தும் பகுத்தும் பார்ப்பது அவசியம். அப்போதே அவ்வறிவுப் புலன் பற்றிய முழுமைத்துவமான கண்ணோட்டமொன்றை (Holistic View) கட்டியெழுப்பலாம். உள்ளார்ந்த வேறுபாடுகளை விளங்கிக் கொள்வதற்கும் பரிமாற்று வசதிக்காகவும் உளவியலில் வகைப்படுத்தல் இன்றியமையாதது. சிக்கலான தோற்றப்பாடுகளை ஓர் ஒழுங்குமுறைக்குள் கொண்டுவருவதே வகைப்படுத்தல் அல்லது வகையறாக்கம் செய்தல் (Classification) எனப்படுகின்றது.

தரப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், படிமுறையாக்கல் ஆகியன வகைப்படுத்தலில் உள்ளடங்குகின்றன. மனிதனுக்கு ஏற்படும் உடல் நோய்கள் முறையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொற்றா நோய்கள், தொற்றுநோய்கள் போன்ற பிரதான வகைப்பாடுகள் போல இருதய நோய்கள், சிறுநீரக நோய்கள், தோல் வியாதிகள், சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள், சுவாசப் பை தொடர்பான நோய்கள், உள்ளக அவய நோய்கள் என்றென்லாம் உடல் நோய்கள் பல்வேறு வகையில் பட்டியல்படுத்தப்படுகின்றன.

உடல் நோய்களை இவ்வாறு வகைப்படுத்துவது போல் உளநோய்களையும் அதாவது மனப்பிறழ்வுகளையும் உளவியலாளர்கள் வகைப் படுத்தியுள்ளனர். இவ்வகைப்படுத்தலில் சிற்சில கருத்து வேறுபாடுகளும் இருக்கவே செய்கின்றன. ஏலவே நாம் குறிப்பிட்டதுபோன்று பிறழ் நிலையை வரையறுப்பதிலும் நோய்க்குறியை அடையாளப்படுத்துவதிலும் நிலவும் கருத்து வேறுபாடுகளே இதற்குப் பின்புலமாக உள்ளது.

நோய்க் குறியை (Syndrom) அடிப்படையாகக் கொண்டே இந்த வகைப்பாடு அமைகின்றது. Syndrom என்பது ஒரு தொகுதி Syptoms களாகும். உடல் நோயொன்றை இனங்காண்பதற்கு ஒரு நோயாளி வைத்தியரிடம் முன்வைக்கும் நோய்க் குறிகளை வைத்தியர் கேட்டறிகின்றார். அவ்வாறே, நடத்தைகளின் ஏற்படும் மாற்றங்கள், அசாதாரணப் போக்குகள், சிந்தனை, புலக்காட்சி என்பவற்றில் ஏற்படும் மாறுதல்கள் உளநோய்களை அல்லது மனப்பிறழ்வுகளை அடையாளம் காணவும் என்ன வகைப்பட்ட மனப் பிறழ்வு ஏற்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளவும் ஆதாரமாய் அமைகின்றது.

உளநோய்களை அல்லது மனப்பிறழ்வுகளை வகைப்படுத்துவதற்கு மூன்று பிரதான நோக்கங்கள் உள்ளது என்று உள மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

1. நோயை இனங்காண்பது குறித்து தொடர்பாடலை சாத்தியமாக்கல் (Communication)
2. காரணங்களை விளங்கிக் கொள்வதை வசதிப்படுத்தல் (Comphrension)
3. நோய்க்கான காரணத்தை முற்கூட்டியே விளங்கிக் கொள்ளல் (Prediction)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியப் பட்டியல்... (01 ஆம் பக்கத் தொடர்)

கோத்தபாய தரப்பினருக்கும் ஜனாதிபதி மைத்திரி தரப்பினருக்கும் இடையில் கடந்த வாரம் சீனாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும் இது தொடர்பிலேயே அமைந்திருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இரு தரப்பினரையும் வேறு வேறு அழைப்பின் பேரில் சீனா அழைத்திருந்தாலும், இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் அங்கு செய்யப்பட்டிருந்தன.

அதுரலியே ரதன தேரர், எஸ்.பி. திஸாநாயக்க, ஷிரால் லக்திலக்க, ஹர்ஷ



குமார நவரத்ன, கலாநிதி லலித் சமரகோன் (செயலாளர், தேசிய பொருளாதார கவுன்சில்) ஆகியோர் இந்தச் சுற்றுலாவுக்காக அழைக்கப்பட்டிருந்த போதும், அதுரலியயே ரதன தேரர், எஸ்.பி. திஸாநாயக்க தவிர்ந்த ஏனையோர் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

## ஜீஎஸ்பி... (01 ஆம் பக்கத் தொடர்)

01 வீதத்தை வரியாகச் செலுத்த வேண்டும். இவ்வாறாக பெறும் வேதனத்துக்கு ஏற்ப 5 வீதம் வரை வரியாகச் செலுத்த நேரிடுகிறது.

குவைத்திலுள்ள வங்கிகளும் பணப் பரிமாற்ற நிலையங்களும் பணத்தை நாட்டுக்கு அனுப்பும்போது இந்த வரியை அறவிடும். இந்த வரியை அறவிடத் தவறும் வங்கிகள், பணப்பரிமாற்று நிலையங்கள் மீது அபராதம் விதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வங்கிகள் அல்லது பணப்பரிமாற்று நிலையங்களுக்கூடாகவல்லாது சட்ட விரோதமான முறையில் தமது வேதனத்தை நாட்டுக்கு அனுப்பும் பணியாளர்களுக்கு சிறைத் தண்டனை வழங்கவும், இருமடங்கு அபராதம் விதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் குவைத் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பின்னர் சட்டமாக வரையப்படவுள்ளது.

## ஜீஎஸ்பி... (01 ஆம் பக்கத் தொடர்)

120 நாடுகள் நன்மையடையவுள்ளதாகவும் தூதரகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். மீளவும் அதிகாரமளிக்கப்பட்ட இந்த வரிச்சலுகை 2020 டிசம்பர் 31 வரை தொடரப்படும். கடந்த வருடத்தில் இலங்கை 3 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்திருந்தது. இதில் 70 வீதமானவை ஆடைகளாகும்.

இதேவேளை, ஜீஎஸ்பீ வரிச்சலுகைக்கான நிபந்தனைகள் அமுலாவதைக் கண்காணிப்பதற்காக தெற்காசிய அறிக்கையாளர் ஸஜ்ஜாத் கரீம் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

## ராமாஞ்ஞ... (01 ஆம் பக்கத் தொடர்)

கடந்த 3 ஆம் திகதி நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள ராமாஞ்ஞ பீடத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற விஷேட வருடாந்தக் கூட்டத்திலேயே இவர்கள் குறித்த பதவிகளில் நியமிக்கப்பட்டனர்.

இலங்கை ராமாஞ்ஞ பீடத்தின் அபிவிருத்திக்கான பல வேலைத்திட்டங்கள் முன்வரும் காலங்களில் முன்னெடுக்கப் படவிருப்பதாக இலங்கை ராமாஞ்ஞ மகா பீடத்தின் பீடப்பாதுகாப்பு சபையின் பொதுச் செயலாளர் அமைச்சர் லஸந்த அலகியவன்ன தெரிவித்தார்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பல பௌத்த பீடங்களில் ராமாஞ்ஞ பீடம், மியன்மாரிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாகும்.

## எல்லை மீள்நிர்ண... (04 ஆம் பக்கத் தொடர்)

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா, அமைச்சர் ஹலீம் போன்றவர்கள் இந்த அறிக்கையில் கைச்சாத்திடுமாறு கூறினார்கள்.

நான் எல்லோருடனும் தொடர்பாக இருந்தேன். தொடர்ச்சியாக நான் பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்புகொண்டேன். அவர்கள் எனக்கு கூறிய விடயம் தான் நீங் கள் முடியுமானதை செய்யுங்கள் பாராளு மன்றில் நாம் பார்த்துக் கொள்கின்றேன் என்பது. எனவே தற்பொழுது இந்த விடயத்தை நான் உங்களிடம் ஒப்படைக்கிறேன். பாராளுமன்ற மட்டத்தில் இந்நாட்டு மக்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் வலியுறுத்துகிறேன்.

## சவூதி அறேபியா... (08 ஆம் பக்கத் தொடர்)

தற்போது திரஇய்யா ஒப்பந்தத்தின் எதிரொலிப்பை சமீபத்திய மாற்றங்களிலும் நாம் அவதானிக்கலாம். இத்தனை மாற்றங்கள் நிகழும்போது நாட்டின் அறிஞர் குழாம் அமைதியாக இருப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. முஹம்மத் நாஇப் பதவி விலக்கப்பட்டு முஹம்மத் பின் சல்மான் முடிக்குரிய இளவரசராக அறிவிக்கப்பட்டது முதலே சவூதி அறேபியாவின் அரசியல் குறித்த விவாதங்கள் மேற்கிளம்புகின்றன.

பிபிசியின் செய்தியாளர் ஒருவர் சொல்வது போல், "ஒருவர் இளவரசராக முடி சூட்ட வேண்டுமென்றால், அல்லது இளவரசர் மன்னராக வேண்டுமானால் அதனை முதலில் வொஷிங்டன் அனுமதிக்க வேண்டும். ஸ்டிபென் ரிகோ எனும் அரசியல் ஆய்வாளர் இதே கருத்தை டைம்ஸ் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

400 மில்லியன் அறபுகளின் வாசற்படியில் சட்டவிரோதமாக உருவாக்கப்பட்டுள்ள 20,000 சதுர கி.மீ. பரப்பைக் கொண்ட வெறும் 4 மில்லியன் மக்களைக் கொண்ட இஸ்ரேல் இன்று முழு மத்திய கிழக்கின் அரசியலையும் தன் விருப்பம் போல் ஆட்டிப் படைக்கிறது என்பதற்கு சமீபத்திய மத்திய கிழக்கு உகந்த உதாரணமாகும்.

300 மில்லியன் மக்களைக் கொண்ட அமெரிக்க அரசியலில் இந்த சின்னஞ் சிறிய இஸ்ரேல் எவ்வளவு செல்வாக்குள்ளது என்பதை மீளவும் நிறுவியுள்ளது. முஹம்மத் பின் சல்மான் பதவியேற்ற சில மணித்தியாலங்களில் இஸ்ரேலின் விமானங்கள் சவூதியின் தலைநகர் ரியாதின் வான்வெளியில் மரியாதை செலுத்திச் சென்றது. இஸ்ரேலின் ஹாரட்ஸ் பத்திரிகை இதனை உறுதி செய்தது.

இத்தகைய பின்புலத்திலேயே பட்டத்துக்குரிய இளவரசராக முஹம்மத் நியமிக்கப்பட்டமை மற்றும் அதற்குப் பின் நிகழும் மாற்றங்களை நாம் அவதானிக்க வேண்டும். (தொடரும்)

## நிப்பொன்... (06 ஆம் பக்கத் தொடர்)

வேகமும் விவே கமும் நாட்டில் இனிமேலும் இன வாதத் தாக்குதல்கள் இடம்பெறாமல் இருப்பதிலேயே ஒன்றுகுவிக்கப்பட வேண்டியுள்ளது.

முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய விடயங்களில் அசிரத்தையாக இருந்துவிட்டு சில்லறைத் தனமான விடயங்களில் வீரர்களாக முனைவது பாதுகாப்பு என்ற விடயத்திற்கே அவமானமாகும். அத்துடன் இன்னுமொரு விடயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதாவது திஹாரிய பள்ளிவாசலில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பொலிஸ் அதிகாரியின் முன்னிலையில் கடையைக் கொளுத்தத் திட்டமிட்ட நபர் எமது பிரதேசத்தை சேர்ந்தவரல்ல, அவர் கல்எலிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என சிலர் குறிப்பிட்டிருந்தார்கள்.

இதுபோன்ற கருத்துக்கள் குறித்து உண்மையில் நாம் கவலைப்பட வேண்டும். திஹாரிய என்றால் என்ன, கல்எலிய என்றால் என்ன? சம்பந்தப்பட்டவர் ஒரு முஸ்லிம். அவர் தவறிழைத்தால் தண்டனை பெற்றே ஆக வேண்டும். அதற்குள் ஏன் மற்றுமொரு முஸ்லிம் கிராமத்தைக் காட்டிக் கொடுக்க வேண்டும். முதலில் எமக்குள் ஒரு தனித்துவம் காணப்பட வேண்டும். பிரதேச ரீதியாக இப்படி ஆளுக்கொருவரை விரல் நீட்டிக் கொண்டிருந்தால் சமுதாயம் ஒருபோதும் உருப்படியாகாது.

## ஐ.தே.க... (03 ஆம் பக்கத் தொடர்)

ஐதேக ஒரு உன்னதமான பொறிக்குள் விழப்போகிறது, யாரும் அதை அந்தப் பொறிக்குள் தள்ளிவிடவில்லை, அவர்கள் தாமாகவே அந்தப் பொறிக்குள் விழுவதற்கான பாய்ச்சலை மேற்கொள்ளும் ஓட்டத்திற்குத் தயாராக உள்ளார்கள்.

பிரபாகரன் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ செய்த அதே பெருந் தவறுகளை ஐ.தே.க செய்து கொண்டிருக்கிறது. 2008-2009 இல் நேரடி மோதலில் ஈடுபட்டதுக்கு மாறாக ஒரு மரபுவழியற்ற வழக்கத்துக்கு மாறான போரை நடத்துவதற்காக எல்.ரீ.ரீ.ஈ தம்மை பரவலாகச் சிதறி காடுகளில் கெரில்லாக் கூட்டங்களாக மறைந்து இருந்து போராடி இருக்கலாம். பெருமைக்காக அவர்கள் பெரும் பிரிவுகளாகச் சேர்ந்து ஒரு பாதி மரபு வழியான போரை நடத்துவதை அவர்கள் தெரிவு செய்தார்கள், இதில் அவர்கள் தங்கள் நிலப் பகுதிகளை மட்டுமன்றி தங்கள் பெருந்தலைவர் பிரபாகரனையும் பாதுகாக்க வேண்டியிருந்தது. இறுதியில் அவர்கள் தங்களை நந்திக் கடல் பிரதேசத்துக்குள் அகப்பட வைத்ததுடன் தாக்குவதற்கு சுலபமான ஒரு இலக்கையும் வழங்கினார்கள்.

ஐ.தே.க.வும் அதே தவறைச் செய்வதுடன் தேர்தல் ரீதியாக அருகிவரும் ஒரு நாட்டை இயக்குகிறது. ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய ரீதியாக செல்வாக்கற்ற தலைவரை பாதுகாக்க மற்றும் சமூக ரீதியாக சட்ட விரோதமான காரணங்களை நிரந்தரமாகப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறார்கள்.

ஐதேக ஒருபோதும் உருவாக்கியிராத மிகவும் பிரபலமற்ற மற்றும் தேர்தலில் வெற்றிபெற முடியாத ஒரு தலைவருடன் எவ்வளவு தூரத்துக்கு ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை அடையாளம் காட்டுகிறார்களோ அவ்வளவு தூரம் ஒரு தேர்தலில் அவர்கள் தங்களை எளிதான ஒரு இலக்காக அடையாளம் காட்டிக்கொள்கிறார்கள்.

வெகுஜனம் அவர்களுக்கு வாக்களிக்காது ஏனென்றால், அவர்கள் தங்கள் தலைவரை ஆதரித்தார்கள். ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு குற்றவியல் பிரேரணை சமாப்பிக்கப்பட்டபோது, அவர் அடிமட்டம் வரை பிரபலமாக இருந்ததைப் போல அவர்களின் தலைவரும் இருந்திருந்தால் அப்படி நடந்திருக்காது.

நாட்டையும் மற்றும் ஐ.தே.க.வினையும் சீரழிக்கும் ஒரு தலைவனுடன் நின்றதுக்காக வெகுஜனங்கள் அவர்களுக்கு தண்டனை வழங்குவார்கள். அவர்களது அரசியல் யுத்தம் ஏற்கனவே உள்ளூராட்சி தேர்தல்களுடன் தோல்வியடைய ஆரம்பித்துவிட்டது, மற்றும் மாகாண சபைத் தேர்தல்களிலோ அல்லது அடுத்த வருட ஜனாதிபதி தேர்தலின் போதோ அவர்களுக்கு நந்திக்கடல் வந்து சேரும்.

பிணை முறிப் பிரச்சினையில் பிரதமருக்கு சார்பாக நிற்கும் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்காளர்கள் வெகுமதி வழங்கமாட்டார்கள். ஐ.தே.க வாக்காளர்கள் அவர்களுக்குத் தண்டனை வழங்குவது அவரை ஒதுக்கிவிடாமல் இருந்ததுக்காக அல்ல. இந்த தாங்க முடியாத சுமையில் இருந்து ஐ.தே.க.வுக்கு விடுதலை பெற்றுத் தருவதற்கும்தான்.

உண்மையில் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் ரணில் விக்கிரமசிங்காவுக்கு சார்பாக வாக்களிக்கும் எந்த ஒரு ஐ.தே.க பராளுமன்ற அங்கத்தவரும் பிணைமுறி ஊழல் பணத்தால் ஆதாயம் அடைந்த ஒருவர் என்கிற களங்கத்தை பொதுமக்களின் கற்பனையில் பெறுவார்கள்.

ஸ்ரீ.ல.சு.க பற்றி என்ன சொல்வது? பன்றி இறைச்சி மற்றும் முட்டை பற்றிய விளம்பர அட்டையை ஏந்திக் கொண்டு ஒரு சிற்றுண்டிச்சாலையை கடந்து சென்ற ஒரு கோழியையும் பன்றியையும் பற்றிய ஒரு நகைச்சுவை நினைவிருக்கிறதா? கோழி பன்றியிடம் எனக்கு மிகவும் பசியாக உள்ளது, உனக்கும் நிச்சயம் பசியாக இருக்கும். எனவே நாம் போய் சிறிது காலை உணவு உண்ணுவோமா என்று கேட்டது. அதற்கு பன்றி, வேண்டாம் நீ போய்வா, நான் இங்கேயே நிற்கிறேன். ஏனென் றால் எனது விடயத்தில் ஒரு முழு அர்ப்பணிப்பு உள்ளது என்று பதிலளித்தது. அதே பதில்தான் நம்பிக்கையில்லாத் தீர்மான விடயத்தில் ஐ.தே.க மற்றும் ஸ்ரீ.ல.சு.க க்கு உள்ளது.

ஐ.தே.க ரணிலுக்கு விசுவாசமாக இருந்தால், வரப்போகும் தேர்தல்களில் அது 20 விகிதமாக வீழ்ச்சியடையுமே தவிர வேறு மாற்றம் எதுவும் ஏற்படாது. நசுக்கப்பட்டு தோல்வியடைந்த கட்சி அநேகமாக அடுத்த தலைவராக வரவுள்ள சாத்தியமுள்ள சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்தின் கீழ் அது மெதுவாக மீளமைக்கப்படும், அது எதிர்கொள்வது சரிவையே தவிர அழிவினை அல்ல.

மறுபுறத்தில் எல்லாமே ஸ்ரீ.ல.சு.கவின் பங்கிலேயே தங்கியுள்ளது. பொருளாதாரம் 16 வருடங்களில் மிகவும் தாழ்ந்த பதிவினைப் பெற்றுள்ளது. ஸ்ரீ.ல.சு.க எப்போதையும் விட அதன் மிகக் குறைந்த வாக்கு எண்ணிக்கையைப் பெற்றுள்ளது. ஸ்ரீ.ல.சு.க ரணிலின் ஐ.தே.க.வுடன் தொடர்ந்து நீடிக்குமானால் அதன் வாக்குத் தளம் அநேகமாக முழுவதுமே மகிந்த ராஜபக்ஸவின் பக்கத்துக்கு மாறிவிடும் மற்றும் அதன் மீந்திருக்கும் வாக்குகள் நிச்சயமாக இரட்டை இலக்கத்துக்கு கீழே இறங்கிவிடும். இதுவரை ரணிலின் ஐ.தே.க.வின் தேர்தல் அழிவுடன் கூட்டுச் சேர்ந்திருந்ததுக்குப் பரிசாக ஸ்ரீ.ல.சு.க உயிர் வாழ்வதற்கு நெருக்கடியான நிலையில் உள்ளது.

ஸ்ரீ.ல.சு.க.வில் உள்ள ஒரு சில சந்திரிகா ஆதரவாளர்களின் அரசியல் நிலைப்பாடு முடிவுக்கு வருமே தவிர ஸ்ரீ.ல.சு.க தற்கொலை செய்து கொள்ளும் ஒரு நிலையில் இருக்கவில்லை. இந்த ஆதரவாளர்களில் ஐ.தே.க.வின் வேட்பு மனுவைப் பெற்று வெற்றி பெற முடியும் என நினைப்பவர்களுக்கு அது ஒரு பாதுகாப்பான பந்தயமாக இருக்காது ஏனென்றால் அவர்கள் ஐ.தே.க வாக்காளர்களுடையதோ அல்லது வரப் போகும் ஐ.தே.க.வின் தலைமையினதோ முதல் தெரிவாக இருக்கமாட்டார்கள்.

பிணைமுறி ஊழலில் பிரதமரின் நடத்தைக்கு ஆதரவளிப்பதற்கும் அல்லது எதிர்ப்பதற்கும் இடையே எதைத் தெரிவு செய்வது என்பதற்கு ஸ்ரீ.ல.சு.க பொதுமக்களின் முழுக் கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மற்றும் அது அதன் முக்கிய பார்வையாளர்களான ஸ்ரீ.ல.சு.க வாக்களர்களின் முன்பாக அதைச் செய்ய வேண்டும். ஏப்ரல் 4 இல் ரணிலுக்கு எதிராக ஸ்ரீ.ல.சு.க தீர்க்கமான கிளர்ச்சி எதையும் மேற்கொள்ளாவிட்டால் அடுத்த மாதம் மே 1 ஆந் திகதி நடக்கவுள்ள கொண்டாட்டத்துக்கு யார் வருவார்கள் என்பதோ அல்லது மாறாக அந்த திகதியில் மகிந்தவின் கூட்டத்துடன் கலந்துவிடாமல் அதில் எஞ்சியிருக்கப் போகிறவர்கள் யார் என்பதோ வெளிப்படையாகத் தெரிந்தவிடும்.

ஸ்ரீ.ல.சு.க.வின் தற்போதைய சரிவின் இரகசியம் சந்திரிகாவில் ஊடுருவியுள்ளது. அதேவேளை அத்தனகல்ல உட்பட ஸ்ரீ.ல.சு.க வாக்காளர்கள், சந்திரிகா வெளிப்படையாக ரணில் சார்பாக, ஐ.தே.க சார்பான நிலையில் இருப்பதைக் காட்டிலும் மகிந்தவின் அரசியல் எஸ்.டபிள்யு.ஆர்.டி மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசியலுக்கு நெருக்கமாக உள்ளதாகக் கருதுகிறார்கள். சந்திரிகாவினதை விட, ராஜபக்ஷவின் கொள்கைள் பண்டாடரநாயக்காவின் கொள்கைகளின் ஒரு தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது.

சந்திரிகா தனது பெற்றோரின் சித்தாந்த ரீதியான மரபு மற்றும் அரசியல் இடைவெளி என்பனவற்றுக்கான யுத்தத்தில் மகிந்தவிடம் தோற்றுவிட்டார். ஸ்ரீ.ல.சு.க வாக்காளர்கள் தங்களுடைய கட்சியின் தளங்களை அலங்கரிக்கும் நீலம், கடும் நீலமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர அது வெளிர் நீலமாகவோ அல்லது நீலம் கலந்த பச்சை நிறமாகவோ இருப்பதை அல்ல.

நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்பின்போது, ரணில் தலைமையிலான ஐ.தே.க பெரிதும் நம்பியிருப்பது ரி.என்.ஏ யினைத்தான். ஐ.தே.க - ரி.என்.ஏ கூட்டுக்கு எதிரான சமூக மற்றும் தேர்தல் பின்னடைவுகள் (1955 - 56, மற்றும் 1965 - 1970 காலங்களைப் போல) மற்றும் ஜனாதிபதி வேட்பாளருக்கான மகிந்த ராஜபக்ஷவின் தெரிவுக்குச் சார்பாக இயங்கும் மேலதிகமான ஒரு பெரும்பான்மை தேசியவாத நிகழ்ச்சித் திட்டங்களின் சாத்தியக் கூறுகள், மற்றும் அடுத்த வருட பிற்பகுதியில் தவிர்க்க முடியாத ஒரு யகபாலனவுக்கு பின்னரான வெற்றியாளர் நிருவாகத்தை ஏற்படுத்தித் தரும்.

ஸ்ரீலங்காவின் முடிவில்லாத அரசியல் கர்மச் சுழற்சியில் சிறுபான்மைவாதம் பெரும்பான்மைவாதத்தை உருவாக்குகிறது மற்றும் பெரும்பான்மைவாதம் சிறுபான்மைவாதத்தை பின்தொடருகிறது. மாட்டு வண்டியின் சக்கரம் போல இது சுழன்று கொண்டேயிருக்கிறது.

(இக்கட்டுரை பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் எழுதப்பட்டது.)

## தீக்கிரையாகும்... (12 ஆம் பக்கத் தொடர்)

அவ்வாறே அநேகமான முஸ்லிம் சகோதரர்கள் தவக்குல் என்ற சிந்தனையை பிழையாக பிரயோகித்து வருவதும் காப்புறுதி செய்வதை விட்டும் அவர்களை தூரமாக்கியுள்ளது.

இழப்புக்களை தவிர்ப்பதற்கு முயற்சிப்பது என்பது இஸ்லாத்தின் மூலவேர்களில் உள்ளதாகும். சொத்துக்களையும் உயிர்களையும் மார்க்கத்தையும் மானத்தையும் பரம்பரையையும் பாதுகாக்கும் ஒரே நோக்கத்திற்காகவே அல்குர்ஆன் ஷரீஆ சட்டங்களை வகுத்து தந்துள்ளது.

இந்த உண்மைகளை புரிந்து காலத்தின் தேவையை முதன்மைபடுத்தி முஸ்லிம்களின் சொத்துக்களை காப்புறுதி செய்வதற்கு நிதி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற சிந்தனையை தூண்டுவதும் அதற்கு இஸ்லாமிய ஷரீஆ சட்ட அங்கீகாரம் இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதுமே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

அல்லாஹ் மிக அறிந்தவன்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியின் மறுமுனையே வெற்றி!



வெற்றி என்றால் என்ன? ஒக்ஸ்போர்ட் டிக்ஷனரியின் படி, 'வெற்றி என்பது ஒருவரது இலக்கை அல்லது நோக்கத்தை அடைந்தது' என்று பொருள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சேர் தோமஸ் ஜே வொட்சன் வார்த்தைகளின்படி, ''வெற்றிக்கான ஒரு பார்முலாவை (Formula) என்னிடம் கேட்டீர்கள் என்றால் அது மிகவும் சுலபம் என்பேன். உங்களின் தோல்வியை இரட்டிப்பு ஆக்குங்கள். நீங்கள் தோல்வியை வெற்றியின் பகைவனாக பார்க்கிறீர்கள்; ஆனால் அது உண்மையல்ல. நீங்கள் தோல்வியால் துவண்டு போகலாம் அல்லது அதிலிருந்து கற்றுக் கொள்ளலாம். என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்யுங்கள். நினைவில் கொள்ளுங்கள்! அதிலிருந்து தான் நீங்கள் வெற்றியை கண்டெடுக்க முடியும்.''

வெற்றி, தோல்வியின் மறுமுனையில் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஒரு தோல்வியில் இருந்து நீங்கள் மனம் துவண்டு போகலாம் அல்லது அதிலிருந்து கற்றுக்கொள்ளலாம். அது உங்களின் விருப்பம். வெற்றி; பேர், புகழ், செல்வம் மற்றும் மரியாதையைப் பெற்றுத் தரும், ஆனால் தோல்வியை அரவணைத்து செல்வோரும் தங்களின் இலக்கை நோக்கி எந்த ஒரு சலனமும் இன்று பயணிப்பர்.

நீங்கள் மதித்து போற்றும் பிரபலங்கள் பற்றி யோசித்துப் பாருங்கள். அவர்கள் அனைவர் வாழ்க்கையும் தோல்விகள், கசப்பான அனுபவங்கள், ஏமாற்றங்கள், இறக்கங்கள் நிறைந்தே இருக்கும். இருப்பினும் அவர்கள் வெற்றியின் உயரத்தை அடைந்திருப்பர். எது அவர்களை வெற்றி வரை இட்டுச் சென்றது? பதில் இதோ... பொறுமை, விடா முயற்சி, திறமை, மீண்டெழுதல், என்று ஒவ்வொரு முறை அவர்கள் கீழே விழும்போதும் கடைப்பிடித்ததால் கிடைத்த வெற்றி. மஹாத்மா காந்தி, ஹென்றி ஃபோர்ட் இவர்கள் அனைவரும் தோல்வி தவறில்லை என்று உலகிற்குப் புரியவைத்தவர்கள்.

நிராகரிப்பு கடுமையானதுதான். ஆனால் அதில் இருந்து மீள்வது அசாத்தியம் இல்லை. நீங்கள் அடிக்கடி நிராகரிக்கப்படுவதாகவும், ஏமாற்றம் அடைவதாகவும் நினைத்தால் கீழே கூறப் போகும் யுக்திகளை பின்பற்றுங்கள். அவை தோல்வியில் இருந்து உங்களை மீட்டு சரியான இலக்கை நோக்கி பயணிக்க உதவும்.

**தோல்விகளை எழுதுங்கள்**

தோல்வி என்பது அரக்கனை நேருக்கு நேர் பார்ப்பது போன்றாகும். அதனால் அதைப் பற்றி எழுதி வைப்பதனால், உங்களுக்குள் தோன்றியுள்ள எதிர்மறை எண்ணங்கள் மறைந்து, உங்களையே நீங்கள் ஊக்கப்படுத்தி, கூர்மையாக சிந்தித்து, பகுப்பாய்வோடு செயல்பட உதவும்.

நீங்கள் ஏன் தோற்றீர்கள்? நல்ல ஒரு தயாரிப்பை உருவாக்க நீங்கள் என்ன செய்திருக்க முடியும்? உங்கள் இலக்கை அடைய மாற்று வழி ஏதேனும் உண்டா? இந்த கேள்விகளுக்கான பதில்களை கண்டுபிடிக்க, நீங்கள் உங்கள் தோல்வி களைப் பற்றி எழுதி வைப்பது நல்லது. அவ்வாறு செய்யும் போது உண்மையாக எழுதுங்கள். அப்போதுதான் தோல்வியின் காரணத்தை கண்டுபிடிக்க முடியும்.

**நிராகரிப்புகளை தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்ளாதீர்கள்**

பெரும்பாலும் பிறரது ஒப்புத லின் அடிப்படையில் தோல்வி அடங்கியுள்ளது. பிறர் உங்கள் ஐடியாவை பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை பற்றி நீங்கள் ரொம்ப யோசிக்க வேண்டாம். மற்றவர்களின் கருத்துகள் உங்களின் கனவை அடைய தடையாய் அமையலாம், அதனால் எல்லாவற்றுக்கும் பிறரை எதிர்பார்க்காதீர்கள்.

விமானத்தை கண்டுபிடித்த ரைட் சகோதரர்களை பார்த்து கேலி செய்து சிரித்த உலகம் தான் இது. நினைவில் கொள்ளுங்கள்! அவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தங்கள் ஆராய்ச்சியை தொடர்ந்ததால் உருவானதே விமானங்கள். பல தடவை தங்கள் உருவாக்கத்தில் தோல்வியை கண்டாலும் செய்த தவறில் இருந்து திருத்திக் கொண்டு செயல்பட்டதால் கிடைத்த வெற்றி அது. அவர்களின் வெற்றியையும் மகிழ்ச்சியையும் அவர்களே தீர்மானித்தனர்.

**தோல்வியைக் கண்டு புலம்பாதீர்கள்**

நீங்கள் முன்னேறிச் செல்ல நினைத்தால் முதலில் தோல்வியுற்றவற்றில் இருந்து நகர்ந்து செல்லுங்கள். அதைப் பற்றி நினைத்துப் புலம்புவதால் நீங்கள் மனதளவில் பாதிக்கப்பட்டு நிரந்தர பாதிப்பை அடைய வாய்ப்புள்ளது. நேர்மறையாகச் சிந்தியுங்கள். ''நான் சாத்தியமாகக் கூடிய வழியை தேடிக் கொண்டிருக்கிறேன்'', ''என்னால் முடியும், என்னால் நிச்சயம் முடியும்'', ''கடந்த கால தோல்வியில் இருந்து நான் கற்றுக் கொண்டு சரியான திட்டத்தை வகுக்கிறேன்'' என்பன போன்ற ஊக்கம் தரும் வாக்கியங்களை உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள். இது உங்களின் வருங்கால செயல்பாட்டுக்கு உதவியாக இருக்கும்.

உங்களை உங்கள் தோல்வி அல்லது வெற்றி அடையாளப்படுத்தாது. அதை விட நீங்கள் உங்கள் தோல்வியை எப்படி வெற்றி யாக்கினீர்கள் என்றே அனைவரும் பேசுவர். அடுத்த முறை ஒரு வெற்றிகரமான தொழிலதிபர் அல்லது CEO வை நீங்கள் பார்க்கும்போது, அவர் பின் இருக் கும் தியாகங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், கஷ்டகாலம், தவறுகள், இவை எல்லாம் உங்கள் நினைவுக்கு வரவேண்டும். அத்தகைய இடத்தை அடைய அவர்கள் பாடுபட்டதையும் நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

ஸ்டீவ் ஜாப்ஸ், தொடக்கத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டு, தொழிலில் தோல்வி அடைந்த ஒரு நபர். ஆனால் அதன் பின் நடந்தது சரித்திரம். 1985 இல் தான் பணியாற்றிய நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவுடன் சண்டையிட்டுப் போராடியதால் பணிநீக்கம் செய்யப்பட்டார். பின் Next என்று தானே ஒரு நிறுவனத்தை நிறுவி கடும் தோல்வி அடைந்தார். முதல் 3 ஆண்டுகள் நஷ்டத்தில் சென்றது அவரது முதல் நிறுவனம். அதன் பின் அதே நிறுவனத்தின் மூலம் புதிய ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஒன்றை அறிமுகப்படுத்தினார். அதை பின்னர் ஆப்பிள் நிறுவனம் வாங்கி, MAC OS X என்று பெயரிட்டது. அதன் பின் ஸ்டீவ் ஜாப்ஸ் ஆப்பிள் நிறுவனத்தின் நிரந்தர சிஇஓ ஆகி அதன் பங்குகள் உச்சிக்கு சென்றது உலகம் அறிந்த சாதனை. அவரது தலைமையின் போது ஆப்பிள் நிறுவன பங்குகள் 9000 சதவீதம் அதிகரித்தது இன்றளவும் பேசப்படுகிறது.

# இன்று மிகவும் அழகான நாள்



கண் பார்வை இல்லாத சிறுவன் ஒருவன் வீதியில் இருக்கும் ஒரு மாடிப் படிக்கட்டில் அமர்ந்து கொண்டு பிச்சை எடுக்கிறான். அவன் அருகே ''நான் குருடன், உதவுங்கள்'' என்ற வாசகம் எழுதப்பட்ட பலகை ஒன்றும் காசு போடுவதற்கான பாத்திரம் ஒன்றும் இருக்கிறது. அவ்வழியே செல்லும் யாரும் அவனுக்கு பெரிதாக உதவியதாகத் தெரியவில்லை.

பாத்திரத்தில் சில்லறைகள் விழுந்த பாடும் இல்லை. அந்த வழியை கடந்த ஆண் ஒருவன், சிறுவனுக்கு உதவினான். பாக்கெட்டில் இருந்து சில்லறைகள் எடுத்து பாத்திரத்தில் போட்டான். பின், அருகில் இருந்த பலகையைப் பார்த்தான். இரண்டு நிமிடங்கள் சிந்தித்து விட்டு, பலகையை எடுத்து அதில் இருந்த வாசகத்தை மாற்றினான். அவன் சென்ற சிறிது நேரத்திலேயே பாத்திரம் சில்லறைகளால் நிரம்பத் தொடங்கியது. சிறுவனுக்கோ ஆச்சரியம் தாங்க முடியவில்லை. வாசகத்தை மாற்றி அமைத்தவர், ஏதேனும் மாற்றம் உண்டா? என்று பார்க்க மீண்டும் அவ்விடத்திற்கு வந்தார். அவர் எதிர் பார்த்தது போலவே பாத்திரம் சில்லறைகளால் நிரம்பி இருந்தது.

சிறுவன் அவரின் கால் தடத்தால் வந்த ஓசையை வைத்து அவரைக் கண்டு கொண்டான். நீங்கள் தானே முன்பு வந்து இந்த பலகையை எடுத்து மாற்றினீர்கள். என்ன எழுதி இருந்தீர்கள். எப்படி இப்போது நிறைய பேர் உதவி இருக்கிறார்கள் என்றான். அந்த இரண்டாம் வாசகம் தான் என்ன? எதனால் இம்முறை நிறையப் பேர் பிச்சை இட்டனர். இரண்டாம் வாசகத்தில் ''இன்று மிகவும் அழகான நாள், அதை என்னால் பார்க்க முடியல்லை'' என்று இருந்தது. இரண்டு வாசகங்களுமே சிறுவன் குருடன் என்பதைத் தான் குறிப்பிடுகின்றன.

ஆனால், முதல் வாசகம் சிறுவன் பார்வை இல்லாதவன் என்று மட்டுமே சொல்கிறது. இரண்டாம் வாசகம் நம் அனைவருக்கும் பார்வை இருப்பதை நினைவு படுத்துகிறது. அவனிடம் இல்லாத ஒன்று நம்மிடம் இருப்பதை கண்டதும் மகிழ்ச்சியில் நிறைய உள்ளங்கள் அவனுக்கு உதவியது......

நீதி :

- உங்களுக்கு எது கொடுக்கப் பட்டிருக்கிறதோ அதற்கு முதலில் நன்றி சொல்லுங்கள்.
- வாழ்க்கை உங்களுக்கு அழுவதற்கு 100 காரணங்கள் கொடுத்தால், என்னிடம் சிரிப்பதற்கு 1000 காரணங்கள் இருக்கிறது என்று காட்டுங்கள்.
- எதைச் சொன்னாலும் மற்றவர் மனம் மகிழும் படி சொல்லுங்கள்.
- எதையும் நேர்மறையாய் எதிர் கொள்ளுங்கள். மாற்றிச் சிந்தியுங்கள். உங்கள் வாழ்க்கை அழகாகும்.

# நூல் அறிமுகம்




## இஸ்லாமிய வெறுப்புத் தொழில்

**வலதுசாரிகள் முஸ்லிம் அச்சத்தை உற்பத்தி செய்வது எப்படி**

**ஆசிரியர்: நாதான் லீன் । தமிழில்: உமா பாலு**

'யுனைடட் ஸ்டேட்ஸ் ஆஃப் இஸ்லாமிகா', 'யூரேபியா', 'லண்டனிஸ்தான்' போன்ற இடங்களில் 'பதுங்கு ஜிஹாத்', 'ஊர்ந்து வரும் ஷரீஆ', 'இஸ்லாமிய பாசிசம்', 'பயங்கரவாத குழந்தைகள்' போன்றவை அதிகரித்து கொண்டிருக்கும்போது யாருக்குதான் பயமாக இருக்காது?

அச்சம் என்பது நல்ல விலைக்குப் போகும் ஒரு சரக்கு; மதத் தலைவர்கள், பண்டிதர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர், இணைய குடிமக்கள், கூவி விற்கும் அறிவுஜீவிகள் கொண்ட வலதுசாரி ஊழியக்காரர்கள் நிரம்பிய இஸ்லாமிய வெறுப்புத் தொழில் துறைக்கு அது நன்றாகவே தெரியும். அவர்கள் முஸ்லிம்கள்தான் விரோதி என்று உடனிருக்கும் மக்களை நம்ப வைப்பதற்காகப் பல ஆண்டுகளாக திரைக்குப் பின்னால் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரும் செல்வத்திற்காகவும் புகழுக்காகவும் 9/11 ஆவிகளைத் தோண்டி எடுத்து, வெகு மக்களின் கண்களுக்கு முன்னே ஆட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் திட்டம் இப்போது நன்றாக வேலை செய்கிறது. அமெரிக்கா, ஐரோப்பா என உலகெங்கும் அடித்துச் செல்லும் இஸ்லாமிய வெறுப்பின் பேரலை இயற்கையாக நிகழும் ஒன்றல்ல. இது இஸ்லாமிய வெறுப்பு ஊழியர்களால் உருவாக்கப்பட்ட சிறந்த வடிவமைப்பு.

அண்மைக் காலங்களில் முஸ்லிம்கள் நடத்தும் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறைந்திருக்கின்றன. ஆனாலும் முஸ்லிம் எதிர்ப்பு முற்சாய்வுகள் புதிய உச்சங்களை அடைந்திருக்கின்றன. இஸ்லாமிய வெறுப்புத் தொழிலகங்கள் தயாரித்திருக்கும் அச்சத்தின் பிடி சில மக்கள் கூட்டங்கள் மீது அவ்வளவு கடுமையாக இருப்பதால், நினைத்துப் பார்க்கவும் முடியாததைச் செய்வதற்கு அவர்களைத் தூண்டுகிறது. ஆற்றல் மிக்க இந்த நூல் அரக்கர்களைத் தயாரிக்கும் இருண்ட உலகை ஆராய்கிறது.

ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கும் நன்கு திட்டமிட்ட அச்ச வணிகர்களின் குடிசைத் தொழிலை விரிவாக எடுத்துரைக்கிறது. மேலும் அவர்களின் பயமூட்டும் தந்திரங்கள், நோக்கங்களையும் வெறுப்பைத் தூண்டும் ஆர்வங்களையும் அம்பலப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நாதன் லீன் இந்த ஆபத்தான, செல்வாக்கு மிக்க [illegible] வெளிச்சத்தை வீசுகிறார்.

# அப்துல் பாஸித்!

நீ மரணத்துடன் போராடிய
அதே இடத்தில்தான்
என் கால்கள் பதிந்திருக்கின்றன.
தீ பரவியெழுந்த கரும் புகையுள்
மனச்சாட்சி கருகிச் சாம்பலாகிறது.
கண்களில் தீநிழலாய் ஊர்கிறது
உன் மரண ஓலம்.
இங்குதான் நாம் தோற்றுப் போனோம்.
இங்குதான் நமது அரசியல் தோற்றது.
நமது ஆன்மீகம் தோற்றது.
நமது தலைமைகள் தோற்றன.
நமது எல்லா அஸ்திரங்களும்
தோற்றுப் போயின.
கடைசியில் எல்லாமே இங்கு
தோற்றுத்தான் போயின.
கேட்க வேண்டிய தருணத்தில்
உன் அழுகுரல் யாருக்கும் கேட்கவில்லை.
அது தாமதித்துத்தான் ஊருக்குக் கேட்டது.
அப்போது உன் உடலை கபன் துணிகளால்
போர்த்துவதைத் தவிர
வேறெதைத்தான் செய்ய முடிந்தது?
எல்லாமே இங்கு தாமதிக்கிறது.
இயலாமையின் பாசி படிந்த
போலி இழுத்தடிப்புகளால்தான்-
நெஞ்சுரமில்லாத கோழைத்தனங்களால்தான்-
வழி தெரியாத் தடுமாற்றத்தினால்தான்-
முயற்சி இல்லாத சோம்பேறித் தனத்தால்தான்-
நமது தலைப்பாகைகள் சரிகின்றன.
நமது தலைமைகள் சரிகின்றன.
நமது தலைவிதி சரிந்து வீழ்கிறது.
இனியும் தாமதங்கள் தேவையில்லை.
வெட்டிப் பேச்சுகள் தேவையில்லை.
மலைக் குன்றிலிருந்து வீசும்
குளிர் காற்றின் சிலிர்ப்பு தேவையில்லை.
உறைந்து போன மனிதர்களின்
உறக்கம் தேவையில்லை.
கூதிர் காற்றில் சோம்பல் முறிக்கும்
தலைமைகள் தேவையில்லை.
இன்னொருவருக்காய் நாம்
இனி ஏன் காத்திருக்க வேண்டும்?
எரிகின்ற நெருப்பை
அணைத்தாக வேண்டும்.
தாகித்த நெஞ்சங்களில்
தண்ணீர் வார்க்க வேண்டும்.
அறிவின் உள்ளொளியை
செயலின் மொழியில் பிசைந்து
புதியதோர் சேர்க்கை
செய்தாக வேண்டும்.
இன்னமும் நாம்
நம்பிக்கை இழக்கவில்லை
என் இளைய தோழனே!
நீ வீழ்ந்த இடத்திலிருந்துதான்
நிமிர்ந்து எழுவோம்.
ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல்.

**சிராஜ் மஷ்ஹூர்**

(அப்துல் பாஸித்: கண்டி கலவரத்தில் கொல்லப்பட்ட இளைஞன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்பார்வை விளையாட்டு

# மருதமுனை எவரடி விளையாட்டுக் கழகம் சம்பியன்



அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனம் பி பிரிவு அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடைபெற்ற காற்பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் மருதமுனை எவரடி விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது. இந்தப் போட்டி கடந்த மாதம் 25 ஆம் திகதி கல்முனை சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் மருதமுனை எவரடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மருதமுனை கிறீன்மெக்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டி (01/01) என்ற கோல் சமநிலையில் நிறைவடைய, பின்னர் நடைபெற்ற தண்டனை உதையில் (04/03) என்ற கோல் வித்தியாசத்தில் மருதமுனை எவரடி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இதன் மூலம் மருதமுனை எவரடி விளையாட்டுக் கழகம் 'ஏ' (A) பிரிவு கழகங்களில் விளையாடுவதற்கான அனுமதியைப் பெற்றது.

புள்ளி அடிப்படையில் நடாத்தப்பட்ட இந்த சுற்றுப் போட்டியில் 17 கழகங்கள் பங்கு பற்றியிருந்தன. அரை இறுதிப் போட்டியில் மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட கிறீன் மெக்ஸ் அணியினர் (2:1) என்ற கோல் அடிப்படையில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தனர். இதேவேளை மருதமுனை எவரடி விளையாட்டுக் கழகம் அரை இறுதிப் போட்டியில் கல்முனை சண்டோஸ் அணியினரை (2:0) என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 50 ஆவது தேசிய கரம் சம்பியன்ஷிப் போட்டி



இலங்கை கரம் சம்மேளனத்தின் அனுசரணையில் நடைபெற்ற 50ஆவது தேசிய கரம் சம்பியன்ஷிப் போட்டியின் '40 வயதிற்குட்பட்ட கரம் சம்பியன்ஷிப் போட்டி'யினை கொஹூவல கரம் சம்மேளனம் நடாத்தியது. இந்தப் போட்டி ஆண்களுக்கான ஒற்றைப் பிரிவு, பெண்களுக்கான ஒற்றைப் பிரிவு என்ற அடிப்படையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றைப் பிரிவில் 15 தடவைகள் சம்பியன் பட்டத்தை சுவீகரித்த சமில் குரே இம்முறையும் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டார்.

மகளிருக்கான ஒற்றைப் பிரிவில் கடற்படை வீராங்கனை ஜோசப் ரெசிடா கிண்ணத்தை கைப்பற்றினார். வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் கொழும்பு ஹில்டன் ரெசிடன்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக இலங்கை கரம் சம்மேளனத்தின் தலைவர் பராக்கிரம பஸ்நாயக்க, பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, தெமட்டகொட விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் எம்.இசட்.எம். ஜபர் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.


## வெளிவந்து விட்டது
## சர்வதேசப் பார்வை
## இதழ்-35



சவூதி அறேபியாவின் புதிய முடிக்குரிய இளவரசர் நியமனம், ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலைநகராக ட்ரம்பின் பிரகடனம், யெமன் மற்றும் சிரியாவில் கூர்மையடைந்து வரும் சிவில் யுத்தங்கள் என மத்திய கிழக்கில் எதிர்பார்த்திராத அரசியல் மாற்றங்கள் எகிறி எழும் தருணமொன்றில் இவ்விதழ் வெளிவருகின்றது.

குறிப்பாக கிழக்கு கூதாவில் நெஞ்சைப் பிழியும் காட்சிகள் அரங்கேறி வருகின் றன. சிரியாவின் ஷீஆ அதிகார பீடமும் ரஷ்யாவுமே அங்கு நிகழும் மனிதப் படுகொலைகளின் சூத்திரதாரிகள் ஆவர்.

இதேபோன்று ரோஹிங்யர்களின் அவலம் அரக்கான் எல்லையைக் கடந்து பங்களாதேஷ் அகதி முகாம்களில் நீடிக்கின்றது. வாழ்வாதாரத்தை இழந்த 7 இலட்சம் ரோஹிங்யர்கள் தற்காலிக முகாம்களில் எதிர்கொண்டு வரும் இன்னல்கள் சொல்லில் மாளாதவை. இதற்குப் பொறுப்பாகவுள்ள சீனாவின் எல்லை விஸ்தரிப்பு, பொருளாதார வளங்கள் மீதான பேராசை, கடலாதிக்கம் குறித்தும் இந்த இதழ் அலசுகின்றது.







# 2020 இல் தியகமவில் சர்வதேச தரத்திலான விளையாட்டுத் தொகுதி



தியகமவில் சர்வதேச விளையாட்டு கட்டடத் தொகுதி (International Sports Complex), தேசிய விளையாட்டு அகடமி (National Sports Academy) போன்றவற்றை அமைப்பதற்கான அபிவிருத்தி செயற் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர அவர்களின் தலைமையில் கடந்த மாதம் 29 இடம்பெற்றது.

இந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் தியகமவில் 400 மீட்டர் நீளமான செயற்கை ஓடுபாதை, 50 மீட்டர் நீளமான நீச்சல் தடாகம், கிரிக்கெட் மைதானம், சர்வதேச பாடத்திட்டங்களைக் கற்பிக்கக் கூடிய விளையாட்டு அகடமி, நவீன வசதிகள் கொண்ட ஜிம்னாஸ்டிக் அரங்கு, பேஸ்போல் (Baseball) மைதானம், விரிவுரைகள் வழங்குவதற்கான அரங்கு, கலந்துரையாடல் அரங்கு, வீரர்கள் தங்குவதற்கான விடுதிகள் மற்றும் தேசிய விளையாட்டு பாடசாலை என்பவற்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தியகமவில் சர்வதேச விளையாட்டுக் கட்டடத் தொகுதி ஒன்றினை அமைப்பதற்கான வேலைகள் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த வேலைகள் அரைவாசி மாத்திரமே பூர்த்தியாகிய நிலையில் கைவிடப்பட்டிருந்தது. எனினும், இப்போது இலங்கை இராணுவத்தின் உதவியோடு அங்கு 2020 ஆம் ஆண்டு நிறைவடைவதற்குள் அதன் அனைத்து அபிவிருத்தி வேலைகளையும் முடிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தி வேலைகளுக்காக 7500 மில்லியன் ரூபா செலவழிக்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அமைக்கப்படவுள்ள விளையாட்டு கட்டடத் தொகுதி ஒரே நேரத்தில் 33 அணிகளை உள்ளடக்கும் அளவுக்கு விசாலமானது என்பதோடு, இதிலிருந்து 4,000 வரையிலான பார்வையாளர்களும் போட்டிகளை கண்டுகளிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. அதோடு இங்கு உருவாக்கப்படவுள்ள விளையாட்டு அகடமியில் சர்வதேச தரத்திலான விளையாட்டுப் பாடநெறிகள் தரம் 7 தொடக்கம் உயர்தரம் வரையிலான மாணவர்களுக்கு வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு கற்பிக்கப்படவிருக்கின்றது. மாணவர்கள் இதனால் விளையாட்டுக்களில் ஆர்வத்தையும், விளையாட்டுக்கள் தொடர்பான சிறந்த கல்வியினையும் பெற்றுக்கொள்வர்.



பாதிஹ் கலாபீடம் ஏற்பாடு செய்த 'மகாஸித் ஷரீஆ' எனும் தலைப்பிலான இருநாள் ஆய்வு மன்றத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 02-04-2018 ஆம் திகதி திஹாரிய பாதிஹ் கலாபீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பாதிஹ் கலாபீடத்தின் பணிப்பாளர் கலாநிதி எச்.எல்.எம் ஹாரிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸம் ஸம் பவுன்டேஷன் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் முஃப்தி யூசுஃப் ஹனிபா அவர்களும், விஷேட அதிதியாக அல்-குர்ஆன் திறந்த கல்லூரியின் பணிப்பாளர் உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி) அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.